வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

தலையிடியா! தேள் கடியா
வாதமா! பல்வலியா !!
இருமலா! ஜலதோஷமா!
கவலை வேண்டாம
இதோ
மெவிக்கார் பாம்
எங்கும் கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:
கவிசெம்ஸ்,
19, செட்டியார் தெரு, கொழும்பு.

புத்தகம் 17 | திருவள்ளுவர் ஆண்டு 1993 வைகாசி திங்கள் 13-ம் நாள் (27—5—1962) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 22 | இதழ் 3

# மற்றும் இரு பத்திரிகை மசோதாக்கள்

## சி. பி. டி. சில்வா தயாரித்தது

### பாராளுமன்றக் குழுவினுள் வலுக்கும் கோஷ்டிச் சண்டையின் எதிரொலி

நீதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவால் தயாரிக்கப்பட்ட பத்திரிகை மசோதாவை அரசாங்கப் பாராளுமன்றக் குழு கொள்கையளவில் அங்கீகரித்திருக்கும் போது, அந்த மசோதாவில் அதிருப்தியடைந்த காணி, விவசாய மந்திரி திரு. சி. பி. டி. சில்வா மற்றும் இரு பத்திரிகை மசோதாக்களைத் தயாரித்து மந்திரி சபையில் சமர்ப்பித்துள்ளார். இதனால் பாராளுமன்றக் குழுவினுள் கோஷ்டிச் சண்டை வலுவடையக் கூடுமென்று அரசியல் அவதானிகள் கூறிகின்றனர்.

இதுவரை ஏழு பத்திரிகை மசோதாக்கள் தயாரிக்கப்பட்டுவிட்டன அவற்றில் நான்கு மசோதாக்கள் நீதி மந்திரி திரு சாம் பி. சி. பர்ணாந்துவால் தயாரிக்கப்பட்டு, அரசாங்கப் பாராளுமன்றக் குழுவால் நிராகரிக்கப்பட்டன. கடைசியாக நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவால் தயாரிக்கப்பட்ட பத்திரிகை மசோதாவை அரசாங்கப் பாராளுமன்றக் குழு கொள்கையளவில் அங்கீகரித்தது.

ஆயினும் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்கா தனது மசோதாவைச் சமர்ப்பித்த முறையில் திரு. சி. பி. டி. சில்வா தலைமையிலுள்ள கோஷ்டி அதிருப்தியடைந்துள்ளது என்ற செய்தி கடந்த வாரம் சுதந்திரனில் வெளியாயிற்று.

இப்பொழுது திரு. சி. பி. டி. சில்வா மற்றும் இரு பத்திரிகை மசோதாக்களைத் தானே தயாரித்து, மந்திரி சபைக்குச் சமர்ப்பித்துள்ளார். இந்த மசோதாக்களில் ஒன்று ஏரிக்கரை, டைம்ஸ் ஸ்தாபனங்களின் ஏகபோக உரிமைகளைப் பறிக்கிறதாம். மற்ற மசோதா பத்திரிகைக் கட்டுப்பாடு சபை ஒன்றை நிறுவுவதைப் பற்றியது. இவரது மசோதாவின் படி இந்தச் சபையில் பத்திரிகையாளர்களும் அங்கம் வகிப்பார்கள்.

திரு. சி. பி. டி. சில்வாவின் பத்திரிகை மசோதா சாம் பி. சி. பர்ணாந்துவின் மசோதாக்களுக்கும், திரு. பீலிக்ஸ் பண்டாரநாயக்காவின் மசோதாவுக்கும் முற்றிலும் மாறானதாகுமென்று கூறப்படுகிறது.

இந்த மசோதாக்களைப் பற்றி விவாதிப்பதற்காக சமீபத்தில் விசேட மந்திரி சபைக்கூட்டமொன்று நடைபெறுமெனவும் அறியப்படுகிறது.

## மூதூர் முகம்மது அலி



இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் இன விடுதலைக்காகத் தொடுக்கப்பட்ட அறப்போரின் அறை கூவல் கேட்டதும்; திக்கெட்டுமிருந்து திரள் கூட்டம் திரண்டது. எண்ணற்ற துன்பங்களைத் தாங்களே ஏற்றுக்கொண்டு, தம்மைத் தாமே வருத்தி போர்க் கோலம் பூண்டனர் மக்கள்.

போராட்ட சமயத்திலே, புண்பட்டுத் தரையில் வீழ்ந்து வீரமரணமடையும் போர் வீரனைப் போல் மூதூரின் மூத்தவன் ஏகாம்பரம் மறைந்தார். திக்கற்றுத் தடுமாறிய மக்களுக்கு இதோ ஒரு இளவலைத் தேர்ந்தெடுத்துள்ளது தமிழரசுக் கட்சி. மூதூரின் இடைத் தேர்தலில் போட்டியிட தமிழரசுக் கட்சி ஜனாப் எம். ஈ. எச். முகம்மதலியைத் தேர்ந்தெடுத்துள்ளது.

திருமலையில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தின் போது, தானாகவே வலிந்து வந்து தொண்டர்களைத் திரட்டிக் கொண்டு, 'எங்களுக்குள் பேதமில்லை, மதத்தால் மாறுபட்டாலும் பேசும் மொழியால் ஒன்று பட்டவர்களே' என்று ஒற்றுமைச் சங்கொலித்து ஜனாப் முகம்மது அலி போராட்டத்தில் பங்கு கொண்டார். சத்தியாக்கிரகத்தை, திருமலையில் முன்னின்று நடாத்திய திருமலை பாராளுமன்ற அங்கத்தவர் என். ஆர். இராசவரோதயம், மூதூர் முன்னாள் பிரதிநிதி திரு. ஏகாம்பரம் ஆகியோருடன் தோளோடு தோள் நின்று போரிட்டவர் ஜனாப் முகம்மது அலி. அவர் போராட்டத்தின் போது காட்டிய வீர உணர்ச்சிகளைத் தமிழ் பேசும் மக்கள், குறிப்பாக மூதூர் வாக்காளர்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

யாழ். மாநகர சபை

## மேயரின் பதவி நீக்கத்தால் நிர்வாகம் எதுவும் சீர்குலையவில்லை

## உள் நாட்டமைச்சருக்கு தமிழரசுத் தந்தை கடிதம்

யாழ்ப்பாணம் மாநகரசபையைக் கலைத்து, நிர்வாகத்தை விசேஷ ஆணையாளர் கையில் ஒப்படைப்பதற்கான ஒழுங்குகள் நடைபெற்று வருகின்றன. இந்த நடவடிக்கையைக் கண்டிக்கும் முகமாக உள்நாட்டமைச்சருக்கு தமிழரசுத் தந்தை திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகம் ஒரு கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தின் முழு விபரமும் கீழே தரப்பட்டுள்ளது.

கனம் மந்திரி அவர்களே!

நீங்கள் யாழ்ப்பாணம் மாநகரசபையைக் கலைத்து, நிர்வாகத்தை விசேட ஆணையாளரின் கையில் ஒப்படைத்துவிடலாமென்ற செய்தியைக் கேட்டு நாங்கள் பெரும் கவலை அடைகிறோம்.

உடுப்பிட்டி பாராளுமன்ற உறுப்பினர் உட்பட யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர் அனைவரினதும் சார்பிலும், இந்த ஜனநாயக மற்ற செய்கையைக் கண்டிக்கும் முகமாக இக்கடிதத்தை எழுதுகின்றேன். (உடுப்பிட்டி பிரதிநிதி—எங்கள் கட்சி உறுப்பினரல்ல). நான் கூறிய யாழ்ப்பாணப் பகுதிப் பிரதிநிதிகளுள், யாழ்ப்பாண நகரப் பகுதிப் பிரதிநிதி திரு. அல்பிரட் துரையப்பா சேரவில்லை.

மாநகரசபையைக் கலைப்பதற்கு வேண்டிய அளவு அங்கு நிர்வாகம் சீர்குலைந்திருப்பதாக நாங்கள் கருதவில்லை. நடந்ததெல்லாம் ஜனநாயகத்திற்குப் புறம்பான வழிகளில் போய்க் கொண்டிருந்த ஒரு மேயரை அகற்றியதேயாகும்.

திரு. துரையப்பா இவ்விஷயத்தில் என்ன மனோபாவம் கொண்டிருக்கிறாரோ நான் அறியேன். ஆனால், கடந்த மாநகரசபைத் தேர்தலில் இவர் ஓர் தோல்வியுற்ற அபேட்சகர் என்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். அவர் யாழ்ப்பாண நகரத்தின் ஒரு பகுதிக்கே பிரதிநிதியாவார். எஞ்சிய பகுதியின் பிரதிநிதியாக இருப்பவர் நல்லூர் பிரதிநிதியாகிய டாக்டர் நாகநாதனாகும். டாக்டர்

(9-ம் பக்கம் பார்க்க)

## மேல் நாட்டுச் சிங்களவரா? கீழ் நாட்டுச் சிங்களவரா?

## அனுரதபுர இடைத் தேர்தலில் ஸ்ரீமாவோவுக்கு புதிய தலையிடி

அனுரதபுரம் இடைத் தேர்தலுக்கு ஸ்ரீலங்கா கட்சி அபேட்சகர் யார்? என்ற கேள்வி எழுந்து பல நாட்களாயினும் கலாச்சார மந்திரி திரு மைத்திரிபால சேனநாயக்கா இலங்கை திரும்பும் வரை முடிவு ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. மேல் நாட்டுச் சிங்களவரைப் போடுவதா? அல்லது கீழ் நாட்டுச் சிங்களவரைப் போடுவதா? என்ற பிரச்சனை கிளம்பியிருந்தது.

அனுரதபுரம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கிளையின் தலைவர் திரு. எஸ். தலுவத்த. இவரைத்தான் போடவேண்டும் என்று அனுரதபுரக் கிளைச் செயற்குழு ஏகமனதாக முடிவு கூறியது. அத்துடன் நில்லாது திரு. தலுவத்தவைப் போடாவிட்டால் அவர் சுயேச்சையாகப் போட்டியிடுவாரென்றும், ஸ்ரீலங்கா கட்சியின் முக்கிய பிரமுகர் யார் அவரை ஆதரிப்பர் என்றும் பயமுறுத்தல்களும் வெளியாகின. ஆனல் பாவம், திரு. தலுவத்தை ஒரு கீழ் நாட்டுச் சிங்களவராகப் பிறந்துவிட்டார்.

மறுபக்கம் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயகாவின் அந்தரங்க காரியதரிசி என்ற கோதாவில் முக்கியத்துவம் பெற்றவர் திரு. கே. பி. இரத்நாயகா. இந்த அதிர்ஷ்டசாலி மலைநாட்டுச் சிங்களவராகப் பிறந்து விட்டார். அத்துடன் அவர் மந்திரியின்

(9-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்லெட்ஸ்

ப்ளட் ப்யூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து



● மூலம்
● வாதம்
● படை (ECZEMA)
● மாத விடாய்



கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானாகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்,

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

(போன் : 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தமிழர் பிரச்னை 3

# கடந்த ஐந்து வருடகால வரலாறு கற்பிக்கும் படிப்பினை

## தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற வேண்டிய அவசியம்

> சர்வதேச சட்ட நிபுணர்களின் சங்கத்தால் 1961 நவம்பர் மாதத்தில் வெளியிடப்பட்ட பிரசுரத்தில் "இலங்கையில் தமிழர் பிரச்னை" என்று மகுடமிட்டு எழுதப்பட்ட ஒரு கட்டுரையின் தமிழாக்கத்தின் இரண்டாவது பகுதி சென்ற இதழில் வெளியாகியிருந்தது. இது அக்கட்டுரையின் கடைசிப் பகுதியாகும்.

சிங்களத்தை மாத்திரமே இலங்கை எங்கும் அரசகரும மொழியாக்குவதற்குத் தமக்கு ஆதரவு தரும்படி ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் ஐக்கிய முன்னணியும் பொதுமக்களை 1956ம் ஆண்டுத் தேர்தலில் வேண்டி நின்றன. திரு எஸ். டபிள்யூ. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் தலைமையில் இருந்த மக்கள் ஐக்கிய முன்னணியே மக்களின் ஆதரவைப் பெற்றது. 1961ல் சிங்களத்தை மாத்திரமே இலங்கை எங்கும் அரசகரும மொழியாக்க வகை செய்யும் அரசகரும மொழிச் சட்டம் 1956ல் ஜூன் மாதத்தில் திரு. பண்டாரநாயக்காவின் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இச் சட்டத்தினால் கொழும்பிலும் கல்லோயாவிலும் இனக் கலவரங்களும் குழப்பங்களும் ஏற்பட்டன. இச்சட்டம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டபோது சமஷ்டிக்கட்சியினர் கோல்பேசுப் புற்றரையில் சத்தியாக்கிரகம் செய்தனர். அப்போது அவர்கள் சிங்களத் தீவிரவாதிகளால் எவ்வித நியாயமுமின்றித் தாக்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து கலவரம் ஏற்படவே கொழும்பிலுள்ள தமிழ் மக்கள் தாக்குதலுக்குள்ளாகி தமது உடைமைகளையும் இழந்தனர். இப்படியான கொள்ளைக்காரருக்கெதிராக பொலீசார் எந்த நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. இச் சம்பவங்களின் தாக்குதலால் கிழக்கு மாகாணத்திலுள்ள கல்லோயாவில் தமிழருக்கும் சிங்களவருக்குமிடையில் கலவரம் மூண்டு, அதனால் பலர் உயிரிழக்கவும் நேர்ந்தது.

### திருமலை மாநாடு

தனிச் சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றதைத் தொடர்ந்து சமஷ்டிக் கட்சியினர் ஆவணி 19ல் (1956) திருமலையில் ஒரு மகாநாட்டைக் கூட்டினர். இந்திய மக்களுக்குப் பிரஜா உரிமை கொடுக்கப்படவேண்டும் என்றும், சமஷ்டி அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்கு பிரதேச சுயஆட்சி கொடுக்க வேண்டும் என்றும் இம் மகாநாடு பண்டாரநாயக்க அரசாங்கத்தினிடம் கோரியது. இக் கோரிக்கைகள் ஒரு வருஷத்துக்குள் கொடுபடாவிடில் நேரடி நடவடிக்கையில் இறங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது. இம் மாநாநாட்டுக்குப்பின் நாட்டில் எங்கும் உணர்ச்சி வேகமும் பரபரப்பும் காணப்பட்டது. இதனால் இப் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்ப்புக்கான சமஷ்டிக் கட்சித் தலைவர்களைச் சமரசப் பேச்சுவார்த்தைகளுக்கு வரும்படி பிரதமர் பண்டாரநாயக்கா அழைத்தார். இப் பேச்சுவார்த்தைகளின் விளைவாக பண்டாரநாயக்கா —செல்வநாயகம் ஒப்பந்தமும் உருவாகியது (ஜூன் 26 1957). தமிழ்ப் பிரதேசங்களில், கணிசமான அதிகாரமுள்ள பிரதேச சபைகள் ஸ்தாபிக்கப்படுமென்றும், அப் பிரதேச சபையின் கருமங்கள் தமிழில் ஆற்றப்படுமென்றும், சிறிய குடியேற்றத்திட்டங்கள் சம்பந்தப்பட்ட விஷயங்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் முழுதும் பிரதேச சபைக்குண்டென்றும் அவ்வொப்பந்தத்தில் காணப்பட்டது. மாகாணவாரியான குடியேற்றத் திட்டங்களில் இருக்க வேண்டிய தமிழ்ச் சிங்களவிகிதாசாரம் சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கப்படும். இவ்வொப்பந்தம் அதிற் கண்டுள்ளபடி, ஒரு இடைக்கால ஏற்பாடே அன்றி இறுதியானதன்று.

### 'ஸ்ரீ' எதிர்ப்பு இயக்கம்

இந்த ஒப்பந்தத்திற்கு தமிழர்களிடமிருந்தும் சிங்களவரிடமிருந்தும் நியாயமான அளவு ஆதரவு கிடைத்தது. ஆனல் ஐக்கிய தேசியக் கட்சி இதற்கெதிராகக் கடும் பிரசாரம் நடத்தியது. இந் நேரத்தில் யாழ்ப்பாணத்தில் உற்சாகம் மிக்க, சமஷ்டிக் கட்சியைச் சேர்ந்தோர். மொழிச் சமத்துவச் சின்னமாக அமையும் வகையில், சிங்கள ஸ்ரீக்குப் பதிலாகத் தமிழ் ஸ்ரீயைப் பொறித்தனர். ஸ்ரீ அழிப்பியக்கத்தில் ஈடுபட்டோர் எவ்வித தண்டனைக்கும் உள்ளாகவில்லை. அவர்கள் இவ்வாறு தண்டிக்கப்படாது விடவே, அரசாங்கம் வடக்கிலும் கிழக்கிலும் தனது அதிகாரத்தை இழந்து விட்டது என்று தென்னிலங்கையில் இருந்த பலர் கருதினர். இவ்வாறுகத் தோன்றிய உணர்ச்சி வேகம் வளர்ச்சியடைந்து புத்த பிக்குகளின் ஆர்ப்பாட்டத்தில் முடிவடைந்தது. புத்த பிக்குகள் சிலர் பிரதமருடைய இல்லத்துக்குச் சென்று அவ்வொப்பந்தத்தை இரத்துச் செய்ய வேண்டும் என்றும், பிரதமர் தாம் அவ்வாறு செய்வார் என்பதனை எழுத்திற் பொறித்துத் தரவேண்டும் என்றும் கோரினர். இதன் நிமித்தமாக 1958ல் ஏப்ரல் 9ம் திகதி அவ்வொப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டது. சிறிது காலத்திற்குப் பின்னர் சமஷ்டிக் கட்சி அதன் வருடாந்த மகாநாட்டை வவனியாவில் கூட்டி, அங்கு நேரடி நடவடிக்கையில் இறங்கப்போவதாக எல்லோருக்கும் அறிவித்தது. இதைத் தொடர்ந்து சிங்களப் பிரதேசங்களில் வாழ்கின்ற தமிழர்கள் தாக்குதலுக்குள்ளாக்கி உயிரையும் உடைமைகளையும் இழந்தனர். தமிழர் அதிகமாக வசித்த இடங்களில் அவர்களும் பதிலுக்குப் பதிலாச் சிங்கள மக்களைத் தாக்கி அவர்களின் உடைமைகளுக்கும் உயிருக்கும் சேதம் விளைத்தனர். இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றதன் பின்னரே அரசாங்கம் மே மாதத்தில் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தியது.

### உண்மைப் பிரச்னை என்ன?

ஜூன் 1956 தொடக்கமாக வெடித்தெழுந்த பிரச்சினைகளால் தோன்றியுள்ள மூன்றுவது நெருக்கடி நிலையே இன்று அமுலில் இருக்கும் அவசரகால நிலை. பல சாதி மக்கள் இந் நாட்டில் வாழ்கின்றமையே அதன் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது. பெரும்பான்மையாக உள்ள சிங்களவர் மொத்தச் சனத்தொகையில் 70 விதமாக அமைந்துள்ளனர். 25 இலட்சமாக உள்ள தமிழ் பேசும் மக்கள் மொத்தச் சனத்தொகையில் 30 வீதமாக இருக்கின்றனர். இவர்களுள் 6 இலட்சம் மக்கள் தமிழ் பேசும் முஸ்லிம்களாக உள்ளனர். தமிழ் பேசும் முஸ்லிம் மக்களும் பெரும்பான்மையோர் இலங்கையின் கிழக்குப் பாகங்களில் வாழ்கின்றார்கள். இப்பிரச்சினையை முழுவதும் மொழிப் பிரச்சினையாக அரசாங்கம் கற்பித்துள்ள போதும், வேறு கோணத்திலிருந்து நோக்கும் பொழுது அது ஒரு சாதிச் சமய பிரச்சினையாகக் காட்சி அளிக்கின்றது. தமிழ் மக்கள் தமது சரித்திரப் பூர்வீகம் 2000 ஆண்டுகளுக்கு மேலாக நிலைத்து நின்றது என்பதனைக் காட்டிய போதும், அவர்களை வந்தேறுகுடிகளாகவே, இலங்கையைத் தமது தாயகமாகக் கருதுகின்ற பௌத்த சிங்கள மக்கள் கருதுகின்றனர். இந்தியத் தமிழ்த் தொழிலாளிகள் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக வெள்ளையர்களால் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டவர்களே.

தமிழ் மக்களின் பீதியைப் போக்க பிரதமர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எப்படியோ பயன் அளிக்கவில்லை. 1961-ல் மார்ச்சுமாதம் 4-ம் திகதி நிகழ்த்திய வானொலிப் பேச்சில், தமிழ் மக்களையும் அவர்களது பூர்வீகப் பெருமைகளையும் ஒழித்துக் கட்டுவது அரசாங்கத்தின் நோக்கமில்லை என்றும் கூறி, தமிழ் மொழியை நியாயமான அளவு பிரயோகிப்பதற்கு வகை செய்யும் சட்ட ஒழுங்குகளையும் பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா சுட்டிக் காட்டினர். தமிழரின் பெருமை மிகு பண்பாட்டைப் பாதுகாக்க ஒரு ஸ்தாபனத்தை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதென்றும், இந்து சமயத்தைப் பேணிப் பாதுகாக்க ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்துள்ளதென்பதையும் மேலும் எடுத்துக் காட்டினர்.

### அரசாங்கத்தின் கடமை

இதற்குச் சில மாதங்களுக்கு முன்னர் நீதி மந்திரி சென்றற பர்ஞந்தோ தமி

(15-ம் பக்கம் பார்க்க)

# கணக்குகள் செய்யும் இயந்திரங்கள்

லண்டன், கவுன்ரி கவுன்ஸில் பாடசாலைப் பிள்ளைகள் கூட்டல், கழித்தல்களை இயந்திரங்களின் உதவியுடன் செய்கிறார்கள்.

லண்டன் ஸி ஸி. கல்விக் கமிட்டி இருவருட ஆராய்ச்சிக்குப் பின், இவ்வியந்திர முறை, ஆசிரியரின் கணக்குக் கற்பித்தல் முறைகளைப் புரியாத பிள்ளைகளுக்கு மிக உதவியளிக்குமெனக் கண்டு கொண்டனர்.

இக் கமிட்டி, இவ்வியந்திரங்களைக் கூட்டுவது, மந்தமான பிள்ளைகளுக்கு மாத்திரமல்லாது கெட்டித்தனமான பிள்ளைகள் புள்ளி விபரங்களைப் படிப்பதற்குமாகும்.

இந்த இயந்திரங்கள் உதவியளிக்கும்போது, அவர்கள் மந்தமான பிள்ளைகளின் தேவையை உணரவும் அவர்களின் தன்மையை நிவிர்த்திசெய்து, தானங்களில் கவனம் செலுத்தப்பண்ணி கணிதத்தில் ஆர்வத்தையும் வழக்கத்தையும் கூட்டலாம் என கமிட்டி அறிக்கை கூறுகிறது.

### குறித்தல்

பிள்ளைகள் இயந்திரங்கள் செய்து கொடுப்பதையும், அதே கணக்குகளை அவர்கள் செய்து பார்க்கையில் விடைகள் சரியாக ஒத்து இருப்பதையும் கண்டு ஆச்சரியமடைகிறார்கள்.

இந்த யந்திரங்கள் சுழலும் யந்திரம் போன்றது. பிள்ளைகள் கொடுக்கப்பட்ட தானங்களை அடுக்கியபின் அவ்வியந்திரத்தைச் சுழற்ற அவ்வியந்திரம், கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல், யாவற்றையும் செய்து கொடுக்கும்.

---

### கதிரியக்க ஆபத்தை உணர்த்தும் 'டிரான்ஸிஸ்டர்' ரேடியோ

பார்ஷீம் (டாட்)—கதிரியக்க ஆபத்தை உணர்த்தும் கருவியை டிரான்ஸிஸ்டர் ரேடியோவிலேயே அமைத்து ஒரு நூதன கருவியை எர்னஸ்ட் மில்லர் என்பவர் தயாரித்திருக்கிறார். இதற்கு "எல்லரி மேன் ஜீஜர் சௌன்டர்" என்று பெயரிட்டுள்ளது.

ஒரு சிறு உலர்த்த பாட்டரியினல் இயங்கப்படும் இது ஒரு பாக்கெட் அளவு புத்தகத்தில் பாதி அளவு தான் இருக்கும். கதிரியக்கப் பொருள் இதன் அருகில் கொண்டுவரப்பட்டால் ஒருவித ஒலியை இக் கருவி எழுப்பும். எவ்வளவுக்கு கதிரியக்க சக்தி இருக்கிறதென்பதையும் உணர்த்த இதில் வழிசெய்யப்பட்டுள்ளது. மற்ற சமயங்களில் இது ரேடியோவாக சங்கீதம் பேச்சுகளை ஒலிபரப்பும் இக் கருவியின் விலை 6.2 டாலர்கள். (யூ. பி. எஸ்.)

கமலா பீடி

ஒளியில் சிறந்தது சூரியப் பிரகாசம்

பீடியில் சிறந்தது கமலா பீடியே!

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.

கமலா ஸ்டோர்ஸ்,

நிர். 15, செட்டியார் தெரு,
கொழும்பு 11.

தந்தி : "தாமரை" போன் : 3597—6522

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ந. பழனிவேல், புசல்லாவ.

கே: அடுத்த தமிழ் நாட்டு தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றியீட்டி ஆளும் கட்சித் தலைவர் அண்ணாத்துரையும் எதிர்க் கட்சித் தலைவர் காமராஜருமாக வந்தால் இலங்கை வாழ் தமிழ் மக்களின் நிலை யென்னவாகும்?

ப: தமிழ் பேசும் மக்களின் நிலை முன்னேற ஆக்கமும் ஊக்கமும் இன்னும் அதிகமாகக் கிடைக்கும்.

ஃ

ராஜா ஆனந்தம், மண்டூர்.

கே: அவசரகாலச் சட்டத்தினால் பயந்து ஒளித்த குயுக்தியாரே! இனிமேல் நீர் எங்களிடமிருந்து தப்பி ஓட முடியாது! ஞாபகமிருக்கட்டும, தெரியுமா?

ப: பயந்தோடவில்லை. காராக்கிரகத்தில் தவம் கிடந்தேன்.

ஃ

சி. உ. இராசையா, ஸ்பிரிங்வல்லி.

கே: தி. மு. க. வின் வளர்ச்சி குறித்து, இலங்கையில் உள்ள சில அரசியல் தலைவர்களும், பத்திரிகைகளும் அலறுகின்றனவே, காரணம் என்ன?

ப: அட்டன் தி. மு. க. மகாநாட்டில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பேசியதின் எதிரொலி.

ஃ

வி. மரியநாயகம், கிளிநொச்சி.

கே: கடவுள் பெண்ணை எப்பொழுது படைத்தார்?

ப: கடவுள் அண்டசராசரங்களையும், சகல சீவராசிகளையும் படைத்த பின் ஆறு நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டாராம். பின்னர் பெண்ணைப் படைத்தாராம். அதன் பிறகு யாருக்குமே ஓய்வு கிடைக்கவில்லை.

கே: நீங்கள் பைத்தியக்காரத்தனமாக எதற்கேனும் ஆசைப் படுவதுண்டா?

ப: ஆம். உங்களின் அசட்டுக் கேள்விக்குப் பதில் கூறுவதற்கு!

கே: காதலியுடன் காதலன் செல்லும்போது என்ன நடக்கும்?

ப: எண்திசையினின்றும் ஆயிரம் ஜோடிக் கண்கள் அவர்களைச் சுட்டெரிக்கும்.

ஃ

நடராஜ மகேந்திரன், திருகோணமலை.

கே: தமிழ்க் காங்கிரஸ் கிளையொன்றை திருகோணமலையில் ஆரம்பிக்க எண்ணியிருக்கிறார்களாம். எதற்கு?

ப: பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதற்கு—இப்பொழுது கொழும்புக் கிளை மாத்திரமே பத்திரிகை விட்டுக் கொண்டிருக்கிறது—அகில இலங்கை ஆனைப்பந்திக் காங்கிரஸ் அகில இலங்கை கொழும்பு நகரக் காங்கிரஸாக மாறிவிட்டதென்பதை அவர்களின் சமீபகால அறிக்கைகளிலிருந்து தெரிந்திருப்பீர்கள். அறிக்கைவிட தலைமை ஸ்தாபனம் எங்கே என்று ஆச்சரியப்படுகிறீர்களா? அ. இ. ஆ. கா. இப்பொழுது தலையில்லாத ஒரு முண்டம்! கொழும்பிலுள்ள வால் மட்டுந்தான் ஆடிக்கொண்டிருக்கிறது.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

ஃ

பி. விஜயாகணபதி, பிட்டபொல.

கே: நீங்கள் யாரை நம்புவீர்கள்? யாரை நம்பமாட்டீர்கள்?

ப: வாசகர்களை நம்புவேன். கூடுவிட்டுக் கூடுபாயும் கட்சி மாறிகளை நம்பமாட்டேன்.

ஃ

எம். ஏ. லூயிஸ், ஊர்காவற்றுறை.

கே: காவாலிகளாய்த் திரியும் வாலிபர்கள் பாடசாலையிலிருந்து வரும் பெண் பிள்ளைகளைத் தெருக்களில் பலவந்தம் செய்கிறார்கள். இவர்களைத் திருத்துவதற்கான வழி கூற முடியுமா?

ப: அந்தப் பெண்களை ஆயுதபாணியாக்கவும். பெண்கள் தற்பாதுகாப்புக்காக அவசியமானால் பற்களையும் உபயோகிக்கலாம் என்றார் காந்தி அடிகள்.

கே: என் சகோதரியின் உடம்பு பெரிதாக இருக்கிறது. இதைக் குறைப்பதற்கு உமக்குத் தெரிந்த மருந்தைக் கூறுங்கள்.

ப: அடிக்கடி ரப்பர் பலூனை ஊதும்படி சகோதரியிடம் சொல்லுங்கள். பலூனில் காற்று நிறைய நிறைய, அவர் உடலை உப்ப வைத்திருந்த காற்று பலூனுக்குள் செல்வதால் உடல் சுருங்கி விடும்.

ஃ

பொ. விவேகானந்தன், காங்கேசன்துறை.

கே: எனதுகாதலியைவீட்டுக்கு அழைத்துச் சென்றால் தாயார் துரத்திவிடுகிறாரே, அதற்கு என்ன செய்யலாம்?

ப: காதலியை மணந்து கொள்வதுதான் அதற்குள்ள ஒரே வழி.

ஃ

கே. கணபதிப்பிள்ளை, புற்றளை.

கே: குயுக்தியாரே, உமக்குத் திடீரென்று ஒரு "லக்" அடித்து, சிறீமா அம்மா உம்மையும் ஒரு மந்திரியாக்கினால் என்ன செய்வீர்?

ப: உடனே ராஜினமா செய்வேன்.

ஃ

நா. யோகநாயகம், மட்டக்களப்பு.

கே: முதன் முதல் மேதினம் எந்த ஆண்டில் கொண்டாடப் பட்டது?

1886-ல்.

ஃ

க. இரத்தினசிங்கம், கிளிநொச்சி.

கே: வாழ்க்கை ஒரு போர்க் களமா?

ப: மலர்ப்படுக்கை என்று நினைத்தீரோ? வாழ்க்கையே ஒரு போராட்டம்.

# உத்தியோகங்களை மட்டும் எதிர்பார்க்க வேண்டாம்!

## விவசாயத்திலும் கைத்தொழிலும் இளைஞர்கள் ஈடுபடவேண்டும்

## கி. இ. பொ. ந. சங்க ஆரம்பக் கூட்டத்தில் செனட்டர் மாணிக்கம்

"வடக்குக் கிழக்கு மாகாணங்களில், கல்வி பயின்று விட்டு வாழ்க்கை வசதிகளெதுவுமின்றித் தடுமாறும் இளைஞர்கள் அரசாங்க உத்தியோகங்களை இனிமேல் நம்பி எதுவித பயனும் கிடைக்கப்போவதுமில்லை. உத்தியோகத்தை மட்டும் இலக்காக வைத்துக்கொண்டு கல்வி கற்கவே கூடாது." இவ்வாறு மட்டக்களப்பில் நகர மண்டபத்தில் நடைபெற்ற கிழக்கு இலங்கை பொது நல சேவைச் சங்க ஆரம்பக் கூட்டத்தில் பேசுகையில் செனட்டர் மு. மாணிக்கம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் படித்த இளைஞர்கள் வெறும் உத்தியோக வேட்டையில் இறங்கித்தங்கள் காலத்தையும், பெற்றாரிடம் எஞ்சியுள்ள பணத்தையும் வீணடிக்கின்றார்கள். வடக்குக் கிழக்கு மாகாணங்களில் கல்விகற்றுவிட்டு எந்த விதமான தொழிலுமில்லாமல் தவிக்கும் இளைஞர்கள் விவசாயத்திலும், கைத்தொழில்களிலும் நாட்டம் செலுத்துதல் அவசியம். கைத்தொழிலும், விவசாயமும்தான் நம்மின மக்களையும், நம் பிரதேசத்தையும் காப்பாற்ற அணிகலன்களாகத் திகழ வல்லன" என்று கூறினார்.

"கிழக்கு மாகாணத்தில் கைத்தொழில், வியாபாரம், விவசாயம் ஆகியவற்றில் இளைஞர்களை ஊக்குவிக்கவும், வசதிகளையும், வாய்ப்புகளையும் குறிப்பாக இளைஞர்களுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதுமே இச்சங்கத்தின் நோக்கமாகும்" என்று தலைமை வகித்த திரு. எஸ். வி. சிவப்பிரகாசம் கூறினார்.

திருவாளர்கள் எஸ். வி. சிவப்பிரகாசம் தலைவராகவும், என். வாமதேவா உபதலைவராகவும், எம். அரசரெத்தினம் பொதுக்காரியதரிசியாகவும், சீ. வி. எஸ். பிலிப்பையா உதவிச் செயலாளராகவும், கே. பாலசுந்தரம் பொருளாளராகவும், எம். கருணாகரன் உப தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

ஜூன் மாதம் 2ம் தேதி மீண்டும் இக்கூட்டம் மட்டக்களப்பில் கூடி, சில முக்கியமான பிரச்சனைகளை ஆராயவிருக்கின்றது.

# இலக்கிய முழக்கம்

—"பரமஹம்ஸ தாசன்"—

கொட்டுக நன்முர சே,—ஆற்றல்
கொஞ்சிடும் செந்தமி ழால்;
எட்டுத் திசைகளி லும்,—தமிழ்
இலக்கியம் முழங்கிட வே!

முத்தமிழ் மன்னரெல் லாம்—கூடி
மொய்த்து வளர்த்துவிட் ட—தமிழ்
வித்தகப் பண்பையெல் லாம்—ஜெய
விறுட னே ஒலிப் பாய்!

சங்கத் தவிசினி லே—தூய
தங்கத் தமிழ்வளர்ந் த—அந்த
மங்கலக் காட்சியெல் லாம்—கண்முன்
வந்திடச் செய்திடு வாய்!

வல்ல பழந்தமிழ்த் தாய்—வாழ்ந்த
மாண்பை எடுத்துரைக்கும்—இன்பத்
தொல்காப் பியத்திற னைப்—புவி
சொக்க விளக்கிடு வாய்!

கன்னித் தமிழ்க்கும ரி—தூய
கற்சிலம் போசையி லே,—தமிழ்ப்
பண்கள் முழங்குவ தை—மந்தப்
பாருக் குணர்த்திடு வாய்!

மாகலைச் செல்விய வள்—தமிழ்
மங்கையின் சிற்றிடையில்-திகழ்,மணி
மேகலை யின் செழிப் பை—இந்த
மேதினிக் கேஒலிப் பாய்!

நந்தா மணிச் சுட ராய்த்—தமிழ்
நங்கையின் மார்பொளி ரும்,—உயர்
சிந்தா மணித்திர ளை—எட்டுத்
திக்கும் மதிக்கவைப் பாய்!

அழகுத் தமிழணங் கின்—தூய
அமுதக் கரங்களி லே,—தவழ்
வளையா பதிச் சிறப் பை—எங்கும்
வாழ்த்தொலி யால் நிரப் பாய்!

வண்டமிழ்ப் பெண்ண மு தின்—தூய
வள்ளைத் திருச்செவி யில்—மின்னும்
குண்டல கேசியி லே—புவி
குளிர வழி சமைப் பாய்!

கம்பன் கவியமிழ் தாம்—தமிழ்க்
கன்னியின் பொன்முடிக்கீழ்—இந்த
மன்புவி அத்தனை யும்—தெய்வ
மாண்பு பெற ஒலிப் பாய்!

தங்கத் தமிழர சி—கரம்
தாங்கும் திருக்குற ளாம்—அருட்
செங்கோன் முறைமைக ளை—எட்டுத்
திக்கும் அறியவைப் பாய்!

* 'பாரத சக்தி'யே னும்—தமிழ்ப்
பாவையின் சித்திக ளை—இந்தப்
பாரறிந் துய்வதற் கே அன்புப்
பண்புட னே முழக் கு!

* கவியோகி சுத்தானந்தர் இயற்றிய மகாகாவியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹை—பை டிரான்ஸிஸ்றரைஸ்ட்
**ரேடியோக்களும்**
மெயின்ஸ்—டிரான்ஸிஸ்றரைஸ்ட்
**ரேப்-ரெக்கோர்டர்ஸ்**

**ரோபுக் இங்கிலிஸ் மெயின்ஸ்**
ரேப்-ரெக்கோடர்

உண்மை விலையிலும் இரண்டு மடங்கு அதிகம் பெறுமதி வாய்ந்த இந்த டேப் ரெக்கோர்டர் அதி உன்னத குணம் நிறைந்ததாகும்.
**ரூ. 725-00**

**நிவிக்கோ**
டிரான்ஸிஸ்றரைஸ்ட்
ரேப்-ரெக்கோர்டர்

ரேப் - ரெக்கோர்டர்ஸ்களுக் கெல்லாம் அரசனும், உடைந்து போகாத வண்ணம் எங்கும் கொண்டு செல்லக் கூடிய, பலம் வாய்ந்த கருவி.
**ரூ. 650-00**

**போர்ட்டபிள்**
**(கொண்டு செல்லக் கூடிய)**
**டிரான்ஸிஸ்டர் ரேடியோக்கள்**



இலங்கையிலேயே எங்களிடம்தான் பல ரகங்கள் உண்டு. எங்களிடம் நீங்கள் வாங்கும் எந்த ரேடியோவும், நீங்கள் ரேடியோ நிபுணர்களிடம் பெறக் கூடிய எந்த ரேடியோவைப் போலும் சிறப்பு வாய்ந்தது.

**பேவரிட்ஸ்,**
96, மெயின் வீதி & 128, கெயிஸர் வீதி,
புறக்கோட்டை.
F—TR/RHD

# தமிழுக்குச் செய்யும் திருப்பணி

## சைவத்துக்குச் செய்யும் திருப்பணியே

## தமிழும் சைவமும் ஒரு முகத்தின் இரு விழிகள்

## ஆலய விழாவில் மட்டுநகர் முதல் எம். பி.

கூடல்களிலும், கோயில்களிலும் வளர்ந்து, வலுவும், வளமும் மிக்க தமிழ் மொழி, இந்த நாட்டிலே தமிழினம் பலமும் வலுவும் இழந்துவிட்ட காரணத்தால், நலமிழந்து, தகமைக்கேற்ற இடமிழந்து உரிய அந்தஸ்திழந்து வாடி நலிகின்ற காட்சி மிகமிக வேதனை தரும் காட்சியாகும். இந்த நிலையை மாற்றி, தமிழன்னையை அரியாசனத்தில் வைக்க நாம் முயலவேண்டும். தமிழ் மொழிக்கு உழைப்பதே நாம் சைவத்திற்குச் செய்யும் பெரும்பணியாகும்.

கல்லடி வேலாயுத சுவாமி ஆலய விழாவிலே, மட்டுநகர் முதல் எம். பி. செ. இராசதுரை பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து பேசியதாவது:-

சைவத்தையும் தமிழையும் வளைத்துச் சதிவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில் சைவர்களும், சைவர்களைப் பெரும் பகுதியாகக் கொண்டுள்ள தமிழர்களும், சற்று விழிப்படையத்தொடங்கியிருப்பது நமது ஒளி மிகுந்த எதிர்காலத்திற்கான நல்ல அறிகுறியாகும்.

இந்தக்காலத்திற் தான் சைவம் தோன்றியது என்று சொல்ல முடியாது. எனவே சைவம் "சமயம் கடந்த சமயம்". இந்த மொழியால் தமிழைப் பாராட்டி வைத்துவிடலாம் என்று கூற இயலாது. எனவே தன்னைப் புகழத் தன்னிடத்திலே ஓர் சொல்லில்லாத தமிழ் மொழியும், "மொழி கடந்த மொழி"யாகி நிற்பதை நாம் காண்கிறோம். ஆகவே, 'மொழி கடந்த மொழி' அது தமிழ். 'சமயம் கடந்த சமயம்' அது சைவம்.

### காலம் தெரியாது

நீல வானம் என்று தோன்றிற்று? தெரியாது. கோல விண்மீன் என்று தோன்றிற்று? தெரியாது. வட்ட ஞாயிறும், பட்டு நிலவும் தோன்றிய காலம் நமக்குத் தெரியாது. மண் தோன்றி மலை தோன்றியதும், ஆறும், அலைகடலும் தோன்றியதும் நமக்குத் தெரியாது. இதைப் போலவே தமிழ் தோன்றிய காலம் நமக்குத் தெரியாது; சைவம் தோன்றிய காலமும் நமக்குத் தெரியாது. எனவே தான் தொன்மையிலே பிறந்து சமயம் கடந்து நிற்கும் நமது சமயத்தையும், தமிழ் மொழியையும் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

காலம் கடந்து வாழும் கன்னித் தமிழின் சொல் வளத்தையும் சுவைநலத்தையும் பற்றி உங்களுக்கு நான் கூற வேண்டியதில்லை. தமிழ் மொழியைப் பார்த்து நறுமணம் கமழும் 'மலர்' என்று சொல்வதா? நான் சொல்லமாட்டேன், 'மலர்'



திரு. செ. இராசதுரை

வாடிப் போகும். தமிழைப் பார்த்து தேன் சுவை யூறும் 'பழம்' என்று சொல்வேனு? சேச்சே...! அது அழுகிவிடும். அது வாடாத 'மலர்', அழுகாத 'பழம்'.

### சொல்வளம்

"சொல்" என்ற 'சொல்லையே எடுத்துக் கொள்ளுங்கள். இயம்பு என்று சொல்லலாம். கூறு என்று சொல்லலாம், உரை என்று சொல்லலாம், பறை என்று சொல்லலாம், பேசு என்று சொல்லலாம். பஞ்சமில்லாத மொழி தமிழ் மொழி. இத்தனை வளம் நிறைந்த மொழி, தமிழினம் பலமிழந்த காரணத்தால், நலமிழந்து வாடி நலிகின்ற காட்சியினை நாம் பார்க்கின்றோம். ஆலய விழாக்களில் கூட அதன் விடிவுக்காக, விமோசனத்திற்காக, பேசி வருகின்றோம். எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சைவம் பேசும் எந்த இடத்திலும் தமிழை ஒதுக்கிவிட்டுப் பேச முயல்வதில்லை— முயன்ருலும், பேச முடிவதில்லை.

### மூத்த மொழி

உலக மொழிகளெல்லாவற்றிலும் - மூத்த மொழி தமிழ் மொழிதான். என்ருலும் ஏனைய மொழிகளுக்கு 'மூல' மொழியும் தமிழ் தான், என்று ஆராய்ச்சியாளர்கள் கூறிவருகின்றுர்கள். தமிழ் மொழி இயற்கையோடு பிறந்த மொழி. எனவே எல்லை கடந்த மொழி, கா...கா... என்று கரைவதால் 'காக்கை'...கூ கூ என்று கூவியதால் அது 'குயில்', சலசல என்று ஓடியதால் அது சலம்', சில் என்று ஒலிப்பதால் அது சிலம்பு, குடு குடு என்று கேட்டால் குடுகுடுப்பை, இவ்வாறு ஒலி அமைந்த இயற்கையோடு மொழி அமைத்தவர்கள் தமிழர்கள் என்பதை, நான் கூறி நீங்கள் அறிந்துகொள்ள வேண்டியதில்லை.

இங்கு பிறந்தாலும் சரி, இங்கிலாந்தில் பிறந்தாலும் சரி, அது எங்கு பிறந்தாலும் சரி, குழந்தை "ம் மா" "ப் பா" என்று தான் கத்துகிறது, ஆகவே 'அம்மா' 'அப்பா' என்ற வார்த்தைகளைத் தமிழ் மொழி தன தாக்கிக் கொள்கிறது. இங்கிலாந்தில் பிறந்து விட்டோம் என்ற காரணத்தால், குழந்தை அழும் பொழுது, 'பாதர்' 'மதர்' என்று கத்தவில்லையே. அதே போல்தான், அவுஸ்திரேலியாவில் பிறந்த ஆடும், ஆபிரிக்காவின் பிறந்த மாடும் "ம் மா" என்ற ஓசையைத்தான் எழுப்புகின்றன.

இயற்கை ஒலிகளை இரும்பாக்கி, அறிவின் உலைக்களத்தில் வைத்து, மொழிக் கருவியைச் செய்தவன் தமிழன். மனித குலத்திற்கும், குரங்குக்குமிடையில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வந்தான். அவனுல் பேச முடிந்தது, குரங்கினுல் அதைச் சொல்ல முடியவில்லை.

### பரந்த மொழி

தமிழ்மொழி ஒரு காலத்தில் உலகெங்குமே பரந்து கிடந்தது. ஆங்கிலம் கட்டாய மொழியாக்கப்பட்டு, திணிக்கப்பட்டு உலகமொழியாகியதைப் போல தமிழ் மொழி பரவவில்லை. தன்னகத்தே கொண்ட கவர்ச்சியினுலும், சிறப்பினுலும் எட்டுத்திக்கையும் தொட்டுப்பார்த்த பெருமை தமிழ் மொழிக்குத்தான் உண்டு.

ஆங்கில மொழி முதல், அரபு மொழி, பாலஸ்தீன மொழி, ஆரிய மொழி' கன்னடமொழி, ஏன் இன்று ஆட்சிபீடத்தில் இருந்து கொண்டு நம்மையே அழித்து விடலாமெனக் கனவு காணும் சிங்கள மொழியில்கூட தமிழ்ச் சொற்கள் மலிந்து கிடப்பதைப் பார்க்கிறோம்.


### மற்றவன் வாழ்த்தினுன்

என்னைப் பார், என் அழகைப் பார் என்று நான் என்னையே போற்றுவதாக நினைத்துவிடக் கூடாது. தமிழன் தனது பெருமையை இன்று மனமகிழ்ச்சிக்காகக் கூறிக் கொண்டிருக்கிறுன். வாழ்ந்த நீ, வீழ்ந்ததேன் என்று, வரலாற்றைச் சொல்லி வளைந்துபோன இனத்திற்கு வலிமை தர நினைக்கிறுன், போப் ஐயரும், கால்ட்வெல்டும் வீரமாமுனியும் வியந்து வாழ்த்திய தமிழை மீண்டும் அரசில் ஏற்றத் துடிக்கிறுன்.

### நம்மவன் மறந்தான்

இந்த நேரத்தில் தான் நமது நாட்டில் சில அப்பாவிகள், வெளிநாட்டான் விடும் ரொக்கெட்டுகளைப் பார்த்து, விழிகளை வானத்தில் புதைத்து, மெய்மறந்து வாழ்கிறுர்கள். இது தான் நமக்கு வேதனையாக இருக்கிறது.

தமிழனே! உனக்கு வாழ இடமில்லை, 'உருசியன்' நிலவுக்குப் போவதைப் பற்றி ஏன் கவலைப்படுகிறுய்?மூன்ருவது மாடி வீட்டில் வாழ்பவனைப் பார்த்து தெருவில் நிற்கின்ற பிச்சைக்காரன் தன்னை மறந்து, அந்த மாடி வீட்டுக்காரனின் மகிழ்ச்சியிலே தோய்ந்தால் என்ன பயன். நீ நிற்கின்ற தெருவைப் பார். ஏழடுக்கு மாடியில் வாழ்ந்த நீ, எப்படித் தெருவுக்கு வந்தாய் என்று எண்ணிப்பார்.



மட்டக்களப்பு எழுத்தாளர் சங்கத்தின் வளர்ச்சிக்காக சங்கத் தலைவர் திரு. ரி. பாக்கியநாயகம் அவர்களிடம், ஆசிரியர் திரு. கிருஷ்ணபிள்ளை, அண்மையில் மட்டக்களப்பில் நடந்த விழா ஒன்றின்போது பணமுடிப் பொன்றை வழங்குகிறுர்.

—படம்: இதயம்,

### எண்ணிப்பார்!

இன்று கடலுக்குமேல் கப்பல் விட்டு,—வானத்து நிலவுக்குப் போக பாதை அமைத்து வருகின்ற மேல் நாட்டார் தங்கள் உடலுக்கு மேலே போட ஆசையில்லாமல், ஊர் பேர் தெரியாத அநாகரீக மக்களாக வாழ்ந்த காலத்தில், நாம் பட்டிலும் பருத்தியிலும் ஆடைசெய்து, கட்டி மகிழ்ந்தவர்கள். காட்டுச் சாதியாக அயலவன் இருந்த காலத்தில், நாட்டை அமைத்து நாகரீகம் வளர்த்தவர்கள். நம்மை நாமே நினைத்துப் பார்க்கவேண்டும்.

முகவரி தெரியாமல் வேடருக்கும் மோசமான நிலையில் வெள்ளையர்கள் இருந்த போது, முற்றம் அமைத்து, முற்றத்திலே முழு நிலா மாடம் அமைத்து, மாடிக்கு நீர்வடி, வாய்க்கால்களும், நீண்ட கூடங்களும் அமைத்து குளித்துவரக் குளமும், வளைந்த 'வரப் பூங்காவும் அமைத்து வாழ்ந்த சிந்து வெளி தமிழ் மக்களைத் தயவு செய்து எண்ணிப் பாருங்கள். சிற்பங்கள் செதுக்கவும், சித்திரங்கள் தீட்டவும், அறிந்திருந்த தமிழர்கள் இன்று எப்படியாகி விட்டோமென்று எண்ணிப் பாருங்கள்.

### எதிர்ப்பிடையே வாழ்ந்தவர்கள்

சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த செந்தமிழ்க் குலம், காலத்துக்குக் காலம், சிறிது சிறிதாக வளம் குன்றி, வாழ்வு குன்றி புகழ் குன்றிப் பொலிவு குன்றி; வருகின்றோமே!

வடக்கிலிருந்து வந்த ஆரியக் கடலுக்கும், தெற்கில் இருந்து வந்த அலைகடலுக்கும், இடையில் போராடி பல்லாண்டு காலமாக வாழ்ந்து வரும் நாம், ஒரு வகையில் வீரர்கள் தான் என்ருலும், வெற்றி பெறும் வரை ஓயாது தொடர்ந்து போராட வேண்டிய பொறுப்புள்ளவர்களாக இருக்கிறோம்.

ஆலயங்களிலே விழா வெடுக்கும் அன்பர்களிடம் நான் அடிக்கடி கூறுவது இதுதான். நீங்கள் தமிழுக்குச் செய்யும் பெரும்பணி, உங்கள் சைவத்திற்குச் செய்யும் திருப்பணியாகவே அமையும். ஏனெனில் தமிழும் சைவமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாதவைகள், தமிழும் சைவமும் ஒரு முகத்தின் இருவிழிகள். சைவம் வளர வேண்டுமானுல் தமிழ் வாழ வேண்டும். தமிழ் வாழ்ந்தால்

(13-ம் பக்கம் பார்க்க)


சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




யானை பீடி

காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி, புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் விரும்புவது யானை பீடியே. உழைப்புக்கு உறுதியான உற்சாகத்தைக் கொடுப்பதும், அந்த உழைப்பில் கிடைக்கும் ஊதியத்துக்கேற்ற சிறந்து புகைக்கும் நிகரற்ற பீடி யானை பீடியே! புகைப்பதினுல் பூரண திருப்தி பெற யானை பீடி புகையுங்கள்!

யானை பீடி கம்பெனி,

62, மெசஞ்சர் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் எம். பி.யின் கூற்று முற்றிலும் பொய்

## “ஊரும் உலகமும்”

வீட்டுக்கு வீடு வாசற்படி இருப்பது போல் நாட்டுக்கொவ்வொரு அரசியற் பிரச்சினை இருக்கக் காண்கின்றோம். உலகம் என்ற பரந்த அரசியல் அரங்கில், அமெரிக்க-ரஷ்ய வல்லரசுகளுக்கிடையே வளர்ந்து வரும் ஏட்டிக்குப் போட்டியான நிலைமை போல், ஏனைய தனித்துவ நாடுகளிலும்-இனப் பிரச்சினை, எல்லைப் பிரச்சினை, தேசிய சுதந்திரப் பிரசினை போன்ற பலதரப்பட்ட பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துவரக் காண்கிறோம். உதாரணத்துக்கு- அல்ஜீரிய மக்கள் தம் தேசிய சுதந்திரத்திற்காக, பிரெஞ்சு அரசாங்கத்தை எதிர்த்து ஏழாண்டுகளாகப் போராடிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சீனு-இந்தியா எல்லைத் தகராற்றுக்கு ஓர் தீர்வான முடிவு கட்டப்படவில்லை. காஷ்மீர் பாகிஸ்தானுக்குத்தான் சொந்தம் என்ற குரல் ஓயவில்லை. ஏன், நமது நாட்டில், நாம் கூட, எமது மொழியுரிமைக்காகப் போராடிக்கொண்டுதானே இருக்கிறோம்.

உரிமை இழந்த மக்கள் உரிமைக்காகப் போராடுவதும், போராட்டப் பாதையில் தோல்விகள் ஏற்படுவதும் சகஜம். ஆனல் தொடர்ந்து போராடுவதுதான் அவர்கள் தம் கருமமாக இருக்கவேண்டும். இதுதான் அல்ஜீரிய மக்கள், நம்மவருக்குக் காட்டும் வழி. அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினுல் அடக்கப்பட்டிருந்த நம் மக்கள் மீண்டும் ஜூன் 5-ம் திகதி ‘ஹர்த்தால்’ அனுஷ்டிப்பதன் மூலம், தமது பகிஷ்கரிப்பைத்தெரிவிக்கப்போகிறார்கள். ஜூன் 5-ம்திகதி என்றதும் 1956-ம் ஆண்டு ஜூன் 5-ம் திகதி தான் நினைவுக்கு வருகிறது. சுதந்திரக் கட்சி அரசாங்கம், தனிச் சிங்கள மசோதாவை அமுல் நடத்திய தினம் அது. அன்றுதான், மேற்படி சட்டத்தை எதிர்த்து, தமிழ் மக்கள் காலிமுகத் திடலில் சாத்வீக முறையில் போராட்டம் நடத்தியது. சத்தியாகப் போராட்டம் செய்த மக்களை, இனத்துவேஷம்கொண்ட காடையர்கள் மிருகத்தனமான முறையில் தாக்கியதும் அன்றுதான். பெரும்பான்மை மக்களின் மொழியை அரசாங்க மொழியாக்கியதும், அதை எதிர்த்துச் சிறுபான்மையினம் போராடியதும், இலங்கையின் சரித்திரத்தில் இடம் பெற்ற சம்பவம். இதை மறக்க முடியாது. இதை, நினைக்கும் போது, அண்மையில், இங்கிலாந்தில் நடைபெற்ற ஓர் சம்பவம் நினைவுக்கு வருகிறது.

இலங்கையில் இனத்துவேஷத்தைக் காரணங்காட்டி, காடையர்கள் தமிழர்களைத் தாக்கினுர்கள். இங்கிலாந்தில், நிறத்துவேஷத்தைக் காரணமாகக் கொண்டு, காடையர்கள், ஆங்கிலேயரல்லாதவர்களைத் தாக்கினுர்கள். அண்மையில், யாரோ ஒரு கறுப்பரைத் தாக்கி, காடையர்கள் தம் கைவரிசையைக் காட்டிக் கொண்டார்கள். இந்த நிலைமையில், பல மாதங்களாக, இங்கிலாந்துப் பேரவையில் அங்கத்துவர்களால் குரல் எழுப்பப்பட்டு பலராலும் விவாதிக்கப்பட்ட, வெளிநாட்டார் சம்பந்தமான “குடியேற்ற-வெளியேற்ற” மசோதா அங்கு விரைவில் அமுல் நடத்தப்பட இருக்கிறது.

இன்று உலகத்திலேயே, ஜனநாயக முறையில் ஆட்சி நடக்கும் நாடு என்று பெருமையுடன் கூறக் கூடிய நாடு இங்கிலாந்து. இங்கு வேறு நாடுகளிலிருந்து சென்று பலர் குடியேறி இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. ஒருவர் இங்கிலாந்தில், தொடர்ந்து ஆறு மாதங்கள் இருந்துவிட்டால், அவர் இங்கிலாந்துப் பிரஜையாகிவிடலாம். அவர் இங்கிலாந்துப் பிரஜை என்றமுறையில்வாக்குரிமையும் உண்டு. ஆனல் தமது நாட்டிலோ, இலட்சோப மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்தும் கூட, அவர்களுக்குப் பிரஜாவுரிமையுமில்லை, வாக்குரிமையும் வழங்கப்படவுமில்லை. இந்த நிலையில், இலங்கை சுதந்திர நாடு என்று சொல்லிக் கொள்வதில் என்ன பெருமையுண்டு.

உண்மை ஜனநாயக நாடு என்றால், அங்கு உள்ளூர் பிரச்சினைகளுக்கு உடனடியான, சுமுகமான தீர்வுகள் காணுவதுதான் அரசியல் சாணக்கியம். இதனுல் தான், தொடர்ந்து வெளிநாட்டார் இங்கிலாந்தில் குடியேறக் கூடாதென்பதற்காக அங்கு “குடியேற்ற—வெளியேற்ற’ மசோதா அமுலாகவிருக்கிறது. இந்த ராஜதந்திர முறையை ஏன் எமது அரசாங்கம் பின்பற்றக் கூடாது. இன்றும் வெளிநாட்டார், கள்ளமாகவும் கப்பல் மூலமும் வந்துகொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க வேண்டும். இதுபோன்ற பலதரப்பட்ட நாட்டுப்பிரச்னைகள்—அவைகளைக் கூற-அவசர காலச் சட்டம் அனுமதியாது.

“அவதானி”

## கி. இ. முஸ்லிம் எழுத்தாளர் மாநாடு

‘இலங்கையில், தமிழையே தாய்மொழியாகக் கொண்ட எத்தனையோ சிறந்த முஸ்லிம் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். தரமான விமர்சகர்களும் அவர்களிடையே இருக்கின்றனர். ஆனல் அவர்களுக்கெல்லாம் இலங்கையில் வெளியாகும் அதிகமான பத்திரிகைகள் இடமளித்து ஆதரிப்பதில்லை. இந்த நிலையை மாற்றி அமைத்து, அவர்களுக்குரிய நல்ல வாய்ப்புக்களையும், வசதிகளையும் தேடித்தரும் நோக்குடன்தான் முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் தோன்றியுள்ளது.” இவ்வாறு காத்தான்குடியில் நடைபெற்ற கிழக் கிலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்க மாநாட்டில் சங்கச் செயலாளர் ஜனுப் முகம்மது சமீம் கூறினுர்.

ஜனுப் யூ. எஸ். தாவூத் எல்லோரையும் வரவேற்றுப் பேசினுர் வித்திவான் ஜனுப் ஏ. எம். சரீப் தலைமை வகித்தார்.

## ஆர்ப்பாட்டத்துக்கு வருத்தம் தெரிவித்ததாகக் கட்டுக் கதை

## லண்டன் தமிழ் மாணவர் சங்கத் தலைவர் மறுப்பு

லண்டனுக்கு விஜயம் செய்திருந்த யாழ், மூதூர் எம். பிக்கள், இலங்கைத் தமிழ் மாணவர் லண்டன் விமான நிலையத்தில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் விஜயத்தின்போது கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடாத்தியதற்கு, வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர்கள் சங்கத்தலைவரான திரு. ஏ. பி ராஜகுமாரன் தம்மிடம் வருத்தம் தெரிவித்ததாகச் செய்திகளை இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு அனுப்பியிருந்தனர். அச்செய்திகள் தமிழ்த் தினசரிகளில் வெளியாகியிருந்தமை வாசகர்களுக்குத் தெரிந்ததே.

திரு. ராஜகுமாரன் வருத்தம் தெரிவித்திருப்பதாகக் கூறப்பட்ட செய்தியை மறுத்து, சென்ற வார சுதந்திரன் இதழில், வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தமிழர் சங்கக் காரியதரிசி திரு. எஸ். நாகேந்திரா லண்டனிலிருந்து எழுதிய ஒரு கடிதம் வெளியிடப்பட்டிருந்தது.

அவருடைய மறுப்பை மேலும் ஊர்ஜிதம் செய்யும் வகையில், ஆர்ப்பாட்டத்துக்கு யார் வருத்தம் தெரிவித்தார் என்று யாழ், மூதூர் எம். பிக்கள் கூறினர்களோ, அவரே—சங்கத்தின் தலைவரான திரு, ராஜகுமாரனே—அச் செய்தியை மறுத்து ‘தினகரன்’, ‘வீரகேசரி’ ஆசிரியர்களுக்குத் தந்திச் செய்திகளை அனுப்பியுள்ளார். அத்துடன், லண்டனிலுள்ள சங்க அங்கத்தவர்களுக்கு கீழ்க்காணும் கடிதத்தை எழுதி அனுப்பியுள்ளார். அக்கடிதத்தின் தமிழ் ஆக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

72, டல்பட் ரோடு,
லண்டன்— W - 2
9—5—1962

தினகரன், வீரகேசரி, ஆசிரியர்களுக்கு இன்று நான் கீழ்க்காணும் தந்தியை அனுப்பியுள்ளேன்:—

“ஏப்ரல் 27-ம் திகதி ‘வீரகேசரி’யிலும் 28-ம் திகதி ‘தினகரனி’லும் வெளியாகிய செய்திகளின்படி, மூதூர் பாராளுமன்ற உறுப்பினர், நான் அவரிடம் கூறியுள்ளதாகத் தெரிவித்திருக்கும் அனைத்தையும், நான் மறுக்கிறேன். கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக திரு. மஜீத் குறிப்பிட்டுள்ளபடி, நானே அல்லது எங்கள் செயற்குழு உறுப்பினர் வேறு எவருமோ அவரிடம் எதுவும் தெரிவிக்கவில்லை. ஆர்ப்பாட்டம் சம்பந்தமாக எவ்விதமான விசாரணையையும் எங்களில் எவராவது நடாத்துவதாகக் குறிப்பிடவுமில்லை. சுருங்கச் சொல்லின், இவை யாவும் திரு. மஜீத் அவர்களின் கட்டுக்கதையே. அவருடன் நான் நடாத்திய சம்பாஷணையின் ஒலிப்பதிவு (ரேப்—ரெக்கார்டிங்) என்னிடம் உள்ளது. இந்த ஒலிப்பதிவு ஒன்றே திரு. மஜீதினுடைய கூற்றுக்கள் எல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என்பதைத் திட்டவட்டமாக நிரூபித்து விடும். கடிதமும் அனுப்பப்படுகிறது.”

லண்டன் விமானநிலையத்தில் நடைபெற்ற கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டமைக்காக சங்கத்தின் சார்பில் நான் வருத்தம் தெரிவித்ததாக இலங்கைத் தமிழ்த் தினசரிகளில் வெளியாகிய செய்திகளை அங்கத்தவர்களிற் பெரும்பாலோர் வாசித்திருப்பார்கள் இச் செய்திகளை உண்மை என்று கருதியமையினுல், அங்கத்தவர்களிடையே மனக்குழப்பமும், பரபரப்பும் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை. சங்கத்தின் சார்பிலோ அல்லது எனது சொந்தப் பொறுப்பிலோ நான் இத்தகைய வருத்தம் தெரிவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தவே இதை எழுதுகிறேன்.

இதற்கு மாறாக, எமது ஆர்ப்பாட்டம் நியாயமானதே என்று திரு. மஜீத்திடம் நான் வாதாடியது அவருக்கு மகிழ்ச்சியை அளிக்கவில்லை. ஒரு நண்பர் மூலம் பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுத்து விஷமத்தனத்தையும் கருத்து வேற்றுமையையும் கிளறிவிட்டு, அவர் தனது பழி வாங்கும் நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டார் போலும்!

தனக்கும், திரு. துரையப்பாவுக்கும் தமிழ் மாணவர்கள் வரவேற்பு அளித்ததாகவும் அவர் கூறியுள்ளார். இச் செய்தி உண்மையல்ல என்பது உங்களுக்குத் தெரிந்ததே!

எதிர்வரும் 13-ம் திகதி ‘ரெட்லயன் ஸ்குயர்’ரில் உள்ள கொன்வே ஹாலில், பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவிருக்கும் சங்கக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு உங்களைத் தயவுடன் வேண்டிக் கொள்கிறேன்.

கடைசியாக நடைபெற்ற சங்கத்தின் பொதுக்கூட்டம், ‘கோர’மின்மையால் ஒத்திவைக்கப்பட்டது. திரு. மஜீத் எங்களுடைய உற்சாகத்தைக் குறைப்பதற்கு முயற்சிகள் எடுத்துக் கொண்டபோதிலும், லண்டனில் இயங்கும் எங்கள் இயக்கத்திற்கு, இம் முயற்சிகளின் மூலம் புத்துயிரும், புதிய உற்சாகமும் அவர் ஊட்டியிருக்கின்றாரென்றே கூறவேண்டும்.

உங்களுடைய கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டத்தை திரு. மஜீத் கண்டித்ததையும், நான் அதை மறுத்து ஆர்ப்பாட்டம் நியாயமானதென வாதாடியதையும், எங்களிருவருக்குமிடையே நடைபெற்ற சம்பாஷணை முழுவதும் பதிவு செய்யப்பட்டிருக்கும் எனது ‘ரேப்—ரெக்கார்டர்’ மூலம், அடுத்த கூட்டத்தில் நீங்களே நேரில் கேட்டறிந்து கொள்ளலாம்.

ஏ. பி. ராஜகுமாரன்
தலைவர்
வெளிநாடுகளிலுள்ள
இலங்கைத் தமிழர்
சங்கம்.

## கண்ணுக்கு மையிடுதல் ஆபத்து

குழந்தைகளின் கண்ணுக்கு மை இடுவது அழகாக இருந்தாலும் ஆபத்தானது என்று பிரபல கண் டாக்டர் எச்சரித்துள்ளார்.

கூனூரில் நடைபெற்ற உலக சுகாதார தினக் கூட்டம் ஒன்றில் கண்ணோய் தடுப்பு பற்றி டாக்டர் பாலீன் அம்மையார் பேசினுர். அப்போது அவர் கண்ணோய் ஏற்படும் காரணங்களை விளக்கினுர். கண்ணுக்கு மை இடுவதால் கண்ணுக்கு ஆபத்து என்று எச்சரித்தார். குறிப்பாக, வெள்ளைப் பூண்டைக் கருக்கி விளக்கெண்ணையில் குழைத்துத் தயாரிக்கும் கண் மை ஆபத்தானது என்று அவர் சொன்னுர்.


விற்பனைக்கு

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

என். வயித்திலிங்கமும் சகாக்களும் வரை.

33, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டப் பொருளாதாரத்தில்

## சிகரெட் புகையிலையின் முக்கியத்துவம்

"கலையரசன்"

> பொருள் வளம் சிறக்க... என்ற தலைப்பின் கீழ் 13—5—62 இதழில் 'மட்டூரன்' மட்டக்களப்பில் பொருளாதாரம் வளருவதற்குச் சில வழி வகைகளை ஆராய்ந்திருந்தார். இங்கே தரப்படும் கட்டுரையில் யாழ்ப்பாணத்துப் பொருளாதாரம் பற்றி 'கலையரசன்' சில குறிப்புக்களைத் தந்துள்ளார்.
>
> வடக்கு கிழக்கு மாகாணங்களில் எந்தெந்த இடத்தில் என்னென்ன வகையில் பொருளாதார வளர்ச்சிக்கான ஏதுக்கள் உண்டோ அவற்றை, சுதந்திரனுக்கு எழுதி யனுப்புங்கள். தகுதி கண்டு பிரசுரிப்போம்.

யாழ்ப்பாணத்தைப் புகையிலையின் பிறப்பிடம் எனவும் கூறலாம். இங்கு வாழும் விவசாயப் பெருங்குடிகள் சுமார் முன்னூறு ஆண்டுகளாகப் புகையிலை உற்பத்தியில் ஈடுபட்டிருந்ததுமன்றிப் புகையிலையை வியாபாரப் பொருளாகவும் பாவித்து வந்தனர். புகையிலை யாழ்ப்பாணத்துப் பிரதான விவசாயப் பொருட்களில் முதலிடம் வகித்தது என்றால் மிகையாகாது.

இவ்வியாபாரத்தின் மூலம் யாழ்ப்பாணம் தன் பொருளாதார வளத்தைப் பெருக்கிக் கொண்டது. பிற இடங்களுக்கு ஏற்றுமதியாகும் புகையிலை குடிசைக் கைத்தொழிலாகமட்டுமல்ல, பல தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சாலை மூலமாகவும் செய்யப்பட்டு வந்தது.

இப்படி வளர்ந்து வந்த புகையிலைத் தொழிலின் முன்னேற்றத்தில் திடீர்த் திருப்பம் ஏற்பட்டது. வியாபாரச் சந்தையில் புகையிலை மதிப்பற்ற பொருளாகியது. இதற்குப் பிறநாட்டு ஏற்றுமதித் தடைவிதிப்பே முக்கிய காரணம் என்று சொல்லப்படுகிறது. இதனால் பெரிய வர்த்தக கேந்திரமாக இருந்த மலையாளத்துக்குப் புகையிலை ஏற்றுமதி செய்ய முடியவில்லை. இவ்வர்த்தகத் தொடர்பு முறிந்ததினால் பல்லாயிரக் கணக்கான விவசாயிகள் நிலை கலங்கினர். புகையிலையையே பயிரிடுவதற்குத் தயங்கினர். இதனால் பெரும்பாலான விவசாயிகளின் பரம்பரைத் தொழிலாக இருந்த புகையிலை கைவிடப்பட்டது.

### சிகரெட் புகையிலை

இவ் இக்கட்டான நிலையிற்தான் விவசாயப் பகுதியினர் சிகரெட் புகையிலையை அறிமுகம் செய்து வைத்தனர். இதே சிகரெட் புகையிலை தான் இன்று யாழ்ப்பாண விவசாயிகளின் முக்கிய விவசாயப் பொருளாகப் பயிரிடப்படுகிறது. புகையிலைக்காகச் செலவிடும் அதிக பிரயாசையும் செலவும் இதற்குத் தேவையில்லை. ஒரு விவசாயி சகவிவசாயியின் உதவி இன்றியே இதைப் பயிரிட்டு ஊதியம் பெறலாம். நாள் முழுவதும் இதற்குப் பிரயாசைப்படத் தேவையில்லை. ஓய்வு நேரங்களில் மாணவர்கள் கூட இலகுவிற் பயிரிட முடியும். இதற்கு இப்புகையிலையைப் பற்றிப் பரந்த அறிவே வேண்டும்.

சிகரெட் புகையிலை இருவாட்டி நிலம் எனப்படும் மணற்செறிந்த பிரதேசத்திற் சிறப்புற வளரும் தன்மை கொண்டது. கடற்காற்று இப்புகையிலையின் எரியும் தன்மையைக் கெடுக்கின்றபடியினால் கடற்காற்றின் தணிக்கை உள்ள பகுதிகளில் இப்பயிர் பயிரிட முடியாது. பயிரிட்டால் தரமான புகையிலையை நாம் பெறமுடியாது.

புகையிலைக்கு அதிக உஷ்ணம் வேண்டும் (80° மேல்). உஷ்ணம் தான் இலையில் மாப்பொருள் உண்டாக முக்கிய காரணமாகிறது. நீர்ப்பாசன வசதி அவசியம் வேண்டும். ஆனால் நீர் தேங்கி நிற்கும் தன்மை கொண்ட நிலங்களோ, மணலோ இப்பயிருக்குக் கெடுதல் விளைவிக்கும். ஆகவே அதற்குத் தகுந்த வண்ணம் நிலத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### நாற்று முறை

இன்று விவசாயிகள் நாற்றை உண்டுபண்ணும் விதத்தைப் பெரும்பாலும் தெரிந்து கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் விவசாயிகள் நாற்றாகவே பெற்றுக் கொள்ளக் கூடிய நிலை இன்றுள்ளது. விவசாயிகள் தாமாகவே நாற்றைப் பயிரிடும் நிலையும் வெகு தூரத்திலில்லை. ஆதலால் அவர்கள் நாற்று முறையை அறிந்திருப்பது மிக அவசியம்.

நன்றாக வெயில் விழும் இடத்தில், இருவாட்டு மண் இருக்கும் இடத்தில், நாற்று மேடைகளை அமைக்க வேண்டும். நாற்று மேடையின் நீளம் எப்படி இருந்தாலும் உயரம் 8" மாகவும் அகலம் 4 அடியாகவும் இருத்தல் வேண்டும். அகலம் நாலடியாக இருந்தாற்தான் தண்ணீர் தெளிப்பவர் தன்கை கொண்டமட்டில், எல்லா இடமும் படும்படியாக நீர் தெளிக்க முடியும்.

இப்படி அமைக்கப்படும் மேடைகளுக்கிடையில் தண்ணீர் தெளிப்பவர் போய் வரக்கூடியதாகச் சுமார் மூன்று அடி அகலமுள்ள இடைவெளி விடல் வேண்டும்.

இப்படி அமைக்கப்பட்ட மேடையில் இருக்கும் பூச்சிகளையும் கிருமிகளையும் அழித்தல் அவசியம். இல்லாவிட்டால் புகையிலை நோயினாற் பீடிக்கப்படலாம். குப்பைகளையும் ஓலைகளையும் இம் மேடைமீது போட்டுக் கொளுத்துவதனால் மேடையில் உள்ள கிருமிகள் அழிந்துவிடுகின்றன.

மேடையை ஆறவிட்ட பின் இந்த நிலத்திற் பசளை சேர்க்கவேண்டும். இதற்கு நவச்சாரக்கந்தகை 2 இருத்தல், அதி எரிகை 3 இருத்தல், சாம்பற்கந்தகை 2 இருத்தல், முதலியவற்றைக் கலந்து மண்ணிற் கலக்க வேண்டும். இதுவே விவசாயப் பகுதியினரின் சிபார்சு. பின் நிலத்தை ஈரமாக்கிவிடல் வேண்டும்.

நல்ல விதைகளை எடுத்து மணலுடன் கலந்து விதைத்தல் வேண்டும். இப்படி மணலுடன் கலந்து விதைப்பதினால் விதைகள் நெருக்கமாக விழமாட்டா. பலகையொன்றில் மெதுவாக மேடையை அமர்த்த வேண்டும். இதனால் விதைகள் மண்ணுள் அமர்ந்து விடுகின்றன. பின் மேடையைப் பூவாளி கொண்டு நனைத்தல் வேண்டும்.

சாக்கினாற் கூடாரம் போட்டுக் காலையிலும் மாலையிலும் நீர் தெளிக்க வேண்டும். 6-7 நாட்களில் விதைகள் முளைக்கத் தொடங்கிவிடும். விதைகள் நெருக்கமாக முளைக்கும் இடத்திலிருக்கும் கன்றுகளைப் பிடுங்க வேண்டும் இல்லாவிட்டால் கன்றுகள் அழுகத் தொடங்கிவிடும். மூன்று வாரங்களின் பின் காலை வெயில் படும்படி கூடாரத்தை விலக்கிவிடல் வேண்டும். 5 வாரங்களுக்குப் பின் கூடாரம் தேவையில்லை. இப்பொழுது நாற்றுப் பிடுங்கக் கூடிய அளவுக்கு வளர்ச்சியடைந்துவிடும்.

### நடுகை முறை

நிலத்தை ஆள உழ வேண்டும் அல்லது கொத்தி வேண்டும். குப்பை தாழ்ப்பதோ எரு இடுவதோ ஆடுமாடு கட்டுவதோ கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டும். இல்லாவிட்டால் இலைகள் தடித்துக் கறுத்து விடும். இதனாற் புகையிலையும் தரம் குன்றிவிடும்.

நாலு கன்றுகளுக்கிடையில் மூன்றடிச் சதுரம் வரக் கூடியதாகச் சுழிசளில் கன்றுகளை நட வேண்டும். தண்ணீர் தெளித்த பின் நிழல் கொடுக்கும் வண்ணம் இலைகுழைகள் குத்தல் வேண்டும்.

ஒரு அடி உயரம் வளர்ந்ததும் பாத்தி கட்டி நீர் பாய்ச்ச வேண்டும். பயிர் வளரும் காலத்தில் நீர் இறைப்பதைக் குறைத்துக் கொள்ள வேண்டும். கன்றின் அடியிற் காணப்படும் "மண்ணிலைகள்" மூலம் நோய் பரவுகின்ற படியினால் இவ்விலைகள் ஒடிக்கப்படல் வேண்டும்.

அழுகல், புள்ளி, கருந்தடி, முதலிய நோய்கள் இதிற பரவுவது இயற்கை இதைத் தடுப்பதற்குக் கிருமிநாசினியை மெல்லிய கரைசலாக இதற்கெனவே பாவிக்கப்படும் பம்புகளிற் வார்த்து அடித்தல் வேண்டும். இக் கிருமிநாசினி மிகவும் பயங்கரமானது. இதன்

(13-ம் பக்கம் பார்க்க)


## அன்பளிப்பிற்கு வேண்டிய எவர்சில்வர் பொருட்கள்

மற்றும்

அலுமினியம் பாத்திரங்கள்

எனமல் பாத்திரங்கள்

பிங்கான் வகைகள்

கண்ணாடிப் பாத்திரங்கள்

பல வித கடதாசி வகைகளுக்கும் சிறந்த இடம்

## S. சந்தோஷநாடார் லிமிட்டெட்,

83/85, குமார வீதி,
கொழும்பு - 11.

தொலைபேசி: 5269

கிளை: நாவலப்பிட்டி



## இந்த எழுத்துக்கள்

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்பட்டிருக்கும் 12 பொயிண்ட் ரோமன், 12 பொயிண்ட் போல்ட், 10 பொயிண்ட் ரோமன், 10 பொயிண்ட் போல்ட் எழுத்துக்கள் யாவும் சுதந்திரன் ரைப் பவுண்டரியில் உற்பத்தி செய்யப்பட்டவை.

8, 10, 12, 14, 18 பொயிண்ட்களில் தமிழ், ஆங்கில எழுத்துக்களும், ஸ்பேஸ், குவாட்ஸ் போன்ற இதர உபகரணங்களும் வார்க்கும் திறமை வாய்ந்தது எங்கள் இயந்திரம். அத்தோடு சாதாரண எழுத்துக்களையும், அலங்கார எழுத்துக்களையும் வார்க்க முடியும்.

இப்பத்திரிகையில் உபயோகிக்கப்படும் புது எழுத்துக்கள் நம்மிடம் விற்பனைக்குண்டு. வேண்டியவர்கள் விவரத்துக்கும், விலைப்பட்டியலுக்கும் எழுதவும்

தேய்ந்த பழைய எழுத்துக்கள் வைத்திருக்கும் அச்சகங்கள் அந்த எழுத்துக்களைக் கொண்டு எங்களிடம் புதிய எழுத்துக்களைக் குறைந்த கட்டணத்தில் திரும்ப வார்த்து எடுத்துக் கொள்ளலாம்.

## சுதந்திரன் ரைப் பவுண்டரி,

194 ஏ. பண்டாரநாயக்க மாவத்த,
கொழும்பு—12.


## சங்கப் பலகை

### "சிங்களமே சீறிப்பார்"

ஒரு எழுத்தாளன், ஒரு நாட்டின் ஊது குழல். அவன் சார்ந்த சமுதாயத்தின் பிரதிபிம்பம், என்பதை தத்ரூபமாக உணர்த்துகிறது "சிங்களமே சீறிப்பார்" என்ற நூல்.

இந்த நாட்டில் வாழும் முஸ்லிம் மக்களின் நிலையென்ன? அவர்கள் வாழவழியென்ன? என்பதை அருமையாக விளக்குகிறார் ஆசிரியர் கபூர். முஸ்லிம் மக்களின் தாய்மொழி 'தமிழ்' அல்ல என்று அபிப்பிராய பேதங் கொண்ட விதண்டாவாதிகளுக்கு, "தேம்பாவணி" மூலம் கிறிஸ்துவத்தை வளர்த்த தமிழ், 'மணிமேகலை' மூலம் பௌத்த மதத்தை வளர்த்த தமிழ், 'சீறா' மூலம் இஸ்லாமியத்தை வளர்க்கத் தவறவில்லை, என்றும், அராபிய மொழியிலேயே இஸ்லாமிய மக்களின் மதக் கோட்பாடுகள் இருந்த போதிலும், தேன் ஒழுகும் தமிழிலே தான் அக்கருத்துக்களை எங்களால் புரிந்து கொள்ள முடிகிறது, தமிழில்லையேல் தமிழகத்தில் இஸ்லாமிய வளர்ச்சியுமில்லை என்றும் எடுத்துரைக்கும் ஆசிரியரின் கருத்துரைகள் அழுத்தமான வாதங்களாக அமைந்துள்ளன.

நூலின் நடை பேச்சு நடைபோல் தொனித்தாலும் ஆரம்பமுதல் முடிவுவரை சுவை கெடாமல், வாசிப்போரைக் கவரும் வண்ணம் எழுதப்பட்டுள்ளது. இன்றைய இருளடந்த அரசியல் சூழ்நிலையில் ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய நூல் "சிங்களமே சீறிப்பார்". இந் நூலுக்கு, மட்டக்களப்பு பாராளுமன்றப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை முன்னுரை வரைந்துள்ளார்.

—சபா

### நாவலர்

மேல் வகுப்புக்களுக்கான பாடங்களைக் கற்றுக் கொள்ளும் வசதியைக் கொழும்பிலுள்ள தமிழ் பேசும் மக்களுக்குப் பெருமளவில் அளித்து வரும் நாவலர் ஹால் ஸ்தாபனத்தின் 'நாவலர்' இதழ் மூன்று வருட இடைவெளிக்குப் பின் மீண்டும் வெளியிடப்பட்டுள்ளது.

அழகாக அச்சிடப்பட்டு வெளிவந்துள்ள இப்புத்தகத்தில் நல்ல தரமான கட்டுரைகள் இருக்கின்றன. கட்டுரைகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் காணப்படுகின்றன.

தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கத் தலைவர் பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம் அவர்களும், நாவலர் ஹால் முகாமைக்காரர் குழுவின் தலைவர் திரு. ரி. இராஜதுரை அவர்களும் நாவலர் இதழுக்கு ஆசிச் செய்திகள் விடுத்துள்ளனர். கல்லூரியும் அதன் சஞ்சிகையான 'நாவல'ரும் வளர வேண்டுமென அவர்கள் தமது செய்திகளில் வாழ்த்தியிருக்கிறார்கள்.

ஆங்கிலக் கட்டுரைகளிற் பெரும்பாலும் விஞ்ஞான ஆராய்ச்சிக் கட்டுரைகளே

(13-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞான விந்தைகள்:

# டாக்டர்களுக்கும், தாதிகளுக்கும் வேலைகள் குறைந்துவிடும்

## ஆஸ்பத்திரிகளில் சமையலறை தேவையில்லை

## சிகிச்சை முறையில் புது வழிகள்

பண்டைக்காலத்து வைத்தியர்கள் கைநாடி பார்த்து நோயாளியின் உடற்கோளாறு எத்தன்மை வாய்ந்தது என்பதை அறிந்தனர். இன்றும் அம்முறை நம்நாட்டில் நடைமுறையிலிருந்து வருகிறது. ஆங்கில வைத்தியர்கள் "ஸ்டெத்தஸ்கோப்" என்ற குழாய்க் கருவியின் மூலம் இரத்த ஓட்டம், இருதயத் துடிப்பு ஆகியவற்றை அறிந்து கொள்வர். அறிவியற்றுறையும், ஆராய்ச்சியும் வளர வளர எல்லா முறைகளும் புதுப் புதுத்தன்மையில் மாற்றம் பெற்று வருகின்றன.

ஜெர்மன் நாட்டில் முக்கிய நகரமான முனிச் பட்டினத்தில் அண்மையில் ஓர் பொருட்காட்சி நடைபெற்றது. ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களும், தாதிமாரும் செய்யும் வேலைகளை இனிமேல் இயந்திர மூளைகளைக் கொண்டு செய்துவிட முடியும் என்பதற்கான கண்டுபிடிப்புகள் பல அக் கண்காட்சியில் இடம் பெற்றன.

### நோயறி கருவி

"எலக்டிரோட்ஸ்" என்ற கருவி நோயாளியின் உடலின் பல பாகங்களில் பொருத்தப்படும். நோயாளியின் உடம்பிலுள்ள உஷ்ண அளவு, இருதயத்துடிப்பு அளவு, மூச்சுவிடும் அளவு, இரத்த அமுக்கம் ஆகிய சகலவற்றையும் தானுகக் கண்டுபிடித்து மின்காந்த சக்தியுள்ள நாடா ஒன்றில் பதித்துவிடுகின்றதாம்.

நோயாளிகளின் படுக்கைகளுடன் தொடர்பு கொண்ட ஒரு கட்டுப்படுத்தும் அறை இருக்குமாம். ஒரு நோயாளிக்கு நோய் அதிகப்படுகிறது—ஆபத்தான நிலை உருவாகிறது என்பதை 'மின்சார மூளை' உடனே கட்டுப்பாட்டு அறைக்கு அபாய அறிவிப்பு விடுக்குமாம். அவ்வறையிலிருந்து கொண்டே டாக்டர்கள் அபாயகரமான நிலையிலுள்ள நோயாளியை "டெலிவிஷ"னில் பார்த்துவிடலாம். அந்நோயாளி இருக்குமிடம் தேடி ஓடாமல், சில பொத்தான்களை அமுக்குவதன் மூலம் அவசியமான சிகிச்சைகள் அளிக்கப்பட்டுவிடக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

### நினைத்தவுடன் செய்யமுடியும்

ரண சிகிச்சை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டாலும், உடனடியாக, நோயாளியின் படுக்கையையே "ஒப்பரேஷன் டேபி"ளாகமாற்றிவிட முடியுமாம்.

சமையல் அறை என்ற ஒன்று வருங்கால ஆஸ்பத்திரிகளில் இருக்காதாம். உணவுப் பொருட்கள் டப்பாக்களிலேயே பதனிட்டு அடைக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு கட்டிலுக்கும் அருகாமைக்கு தாதி சென்று டப்பாக்களிலுள்ள உணவை வேக வைத்துக் கொடுத்துவிட முடியுமாம்.

ஆஸ்பத்திரிக் கட்டிடத்தில் தற்செயலாக இடவசதி காணுமற்போய் விட்டால், சில மணி நேரங்களிலேயே கட்டிடமும் விஸ்திரிக்கப்பட்டு விடுமாம். "ரெடி மேட்" பாலங்கள் போன்ற சிலவற்றின் உதவியால் இம்முறை நடைமுறைக்குக் கொண்டுவரப்படுகிறதாம்.

இம்மாதிரியான சகல வசதிகளும் கொண்ட ஆஸ்பத்திரி அமெரிக்காவில் அலபாமா என்னும் இடத்தில் கட்டப்பட்டு வருகிறது. இக் கட்டிடம் 1964ல் பூர்த்தியாகிவிடும்.

### முதலுதவிக்குப் பிராண வாயு

விபத்தில் சிக்கி அவஸ்தைப்படும் ஒருவருக்கு மூச்செடுப்பது கடினமாகவிருக்கும். இதற்காக ஆஸ்பத்திரிகளில் பிராணவாயு கொடுப்பதுண்டு. விபத்துக்குள்ளான ஒருவரை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ருல்தான் அவருக்கு பிராணவாயு சிகிச்சை செய்ய முடியும். மேற்கு ஜெர்மனியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கம், இரு வைத்திய வல்லுனர்களின் ஒத்துழைப்புடன் 'அம்பியூலன்ஸ்'களிலேயே பிராணவாயுவைக் கொண்டு செல்ல வழிவகை செய்துள்ளது. விபத்து நடந்த இடத்துக்கே அம்பியூலன்ஸ் கொண்டுவரப்பட்டு, ஸ்தலத்திலேயே பிரத்தியேக நிபுணர்களின் உதவியின்றி சாதாரணமாக எவரும் இக் கருவியை இயக்கி பிராணவாயுவைக் கொடுக்கலாம். ஆஸ்பத்திரிகளில் இம்முறையில் நன்குதேர்ச்சி பெற்றவர்களால்தான் முடியும். ரேடியோ சாதனங்களுடன் இந்தக் கருவி இணைக்கப்பட்டுள்ளதால். இதை யாரும் இலகுவில் கையாளலாம்.

## சேவை நலம் பாராட்டு விழா

அளவெட்டி தெற்கு அ. மி. பாடசாலையில் உதவி ஆசிரியராகக் கடமையாற்றி உடுவில் மான்ஸ் தமிழ்ப் பாடசாலைக்கு மாற்றலாகிச் செல்லும் திரு. சி. சடாட்சரம் ஆசிரியர் அவர்கட்கு சென்ற 15-5-62ல் பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு வி. செல்லப்பா அவர்கள் தலைமையில் மேற்படி விழா நடைபெற்றது. அன்னாரின் சேவைகள் பற்றி ஆசிரியர்கள் திரு. நா. செல்வநாயகம், திருமதி வீ. ச. செல்வத்துரை ஆகியோர் பாராட்டுரைகள் நிகழ்த்தினர். ஈற்றில் மாணவர் கதம்ப நிகழ்ச்சிகள், அன்பளிப்பு சிற்றுண்டி வழங்கலுடன் விழா நிறைவெய்தியது.

# ரத்த அழுத்த நோய் பற்றி

## ஜெர்மன் வைத்திய நிபுணர் ஆராய்ச்சி

## நாகரிக வாழ்க்கையே காரணம் என்கிறார்

நாகரிக வாழ்க்கையிலுள்ள அவசரமும் ஆடம்பரமும் கைத்தொழில் கலை அதிகமாகப்பரவி வருவதும், கிராம வாழ்க்கையிலிருந்து பட்டண வாழ்க்கைக்கு மாறுவதும், மோட்டார் கார்களை ஓட்டுவதினல் ஏற்படும் திடீர் அதிர்ச்சிகளும் ரத்த அழுத்தம் ஏற்படுவதற்கான பல காரணங்கள் என்பதை ஜெர்மன் நிபுணர் டாக்டர் மெட் ஜெர்ஹார்ட் வென்ஸ்மர் என்பவர் கண்டு பிடித்திருக்கிறார்.

மிக அதிகமான ரத்த அழுத்தம் கொடிய நோய்களில் ஒன்று. இறப்பவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் இந்நோயால் பீடிக்கப்பட்டவர்களே. இந்த நோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணம் ரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்பட்டு ரத்த ஓட்டம் சரிவர நடைபெருதிருத்தலே என்று முன்பெல்லாம் கருதப்பட்டு வந்தது. ஆனல் இப்போது இதற்கு வேறு பல காரணங்களும் உண்டு என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ரத்த ஓட்டம் சரியான அளவில் இல்லாததால் ஒரு பக்கம் அதிக அழுத்தம் ஏற்படுவது ஒரு காரணம். இருதயம், மூத்திரக் காய்கள் இவைகளில் நோய் ஏற்படுவது காரணமாகவும் ரத்த அழுத்தம் ஏற்படுவதுண்டு. ஹார்மோன் உற்பத்தி செய்யும் சில உறுப்புகள் மிக அதிகமாக வேலை செய்தாலும் இந் நோய் ஏற்படலாம்.

### அதிகமாக சிகரெட் புகைத்தல்

சிகரெட் அதிகமாகப் புகைப்பவர்கள் இந் நோய்க்கு இலக்காகிறார்கள். சிகரெட்டிலுள்ள 'நிகோடைன்' என்கிற பொருள் ரத்தக் குழாய்களைச் சிறுகவைக்கும் சக்தியைப் பெற்றுள்ளது. இதுவரை நடைபெற்றுள்ள ஆராய்ச்சிகளிலிருந்து இந்த நோய் ஏற்பட்ட ஆரம்ப கட்டங்களில் ரத்தக் குழாய்கள் பாதிக்கப்படுவது தெரியாமலேயே இருக்கிறது என்று கூறப்படுகிறது.

ஏராளமான பேர்களுக்கு ரத்த அழுத்த நோய் ஏற்படவே தீவிரமாக ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன. வாழ்க்கையை நடத்தும் முறை, சில அதிர்ச்சிகள், சூழ்நிலை இவை எல்லாம்கூட காரணங்களாக இருக்கின்றன என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

எடுத்ததற்கெல்லாம் கோபித்துக்கொள்வது மூலம் ஏற்படும் நரம்புத் தளர்ச்சி காரணமாகவும் ரத்த அழுத்தம் ஏற்படுகிறதாம். மோட்டார் வண்டியை ஓட்டும்போது ஏற்படக் கூடிய சில அதிர்ச்சிகளாலும் இந்நோய் ஏற்படுவது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. வீட்டில் ஓய்வு எடுத்துக் கொள்ளும் ரத்த ஓட்டம் சாதாரணமாக இருந்தவர்களுக்கு மோட்டார் ஓட்டி வந்த பின்பு 'அழுத்தம்' ஏற்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனல் சிலர் இம்மாதிரி உணர்ச்சி அதிர்ச்சிகளைக் கூட நன்கு சமாளிக்கின்றனர்.

### வைத்திய நிபுணரின் புத்தகம்

'ரத்த அழுத்தமும் நாகரிக வாழ்க்கையும்' என்பது குறித்து ஓர் அருமையான புத்தகத்தை மேற்கு ஜெர்மன் வைத்திய நிபுணர் டாக்டர் மெட் ஜெர் ஹார்ட் வென்ஸ்மெர் வெளியிட்டிருக்கிறார். இவர் விரிவான ஆராய்ச்சிகளை நடத்தி அதில் தாம் கண்டுபிடித்த முடிவுகளைப் புள்ளிவிவர ஆதாரங்களுடன் வெளியிட்டிருக்கிறார். ரத்த அழுத்தம் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது என்றும் இவர் கூறுகிறார். வட அமெரிக்காவில் வசிக்கும் ஒருவர் உணர்ச்சிக் கொந்தளிப்பை மிக சாதாரண நிலையில் சமாளிக்கிறார். இவருக்கு ரத்த அழுத்தம் குறைவான நிலையிலேயே இருக்கிறது. ஆனல் ஐரோப்பிய நாடுகளில் வசிப்பவர்கள் அம்மாதிரி இல்லை என்று இவர் விளக்கிக் காட்டுகிறார்.


நாகரிக வாழ்க்கை, கைத்தொழில் அபிவிருத்தி இவை மாதர்களிடையே ஏற்படும் ரத்த அழுத்த நிலைக்கு எவ்வளவு காரணமாக இருக்கின்றன என்பதையும் இவர் ஆராய்ந்திருக்கிறார். மன அதிர்ச்சி இந்நோய்க்கு முக்கியமான காரணங்களில் ஒன்று என்பது இவர் முடிவு. சமீப காலங்களில் பல நாட்டினர்களிடம் இது சம்பந்தமான பரீட்சைகள் செய்யப்பட்டன. இந்தியர், சீனர், ஆப்பிரிக்கர், பிலிப்பானியர், அமெரிக்க இந்தியர் ஆகியோர்களிடம் நடத்திய ஆராய்ச்சிகளிலிருந்து இவர்களுக்குக் குறைந்த ரத்த அழுத்தம் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

### முக்கிய காரணம்

தலைமுறை தலைமுறையாக நோய் தொடர்ந்து வருவது என்கிற உண்மையைவிட சந்தர்ப்ப சூழ்நிலைக் காரணங்களால் ஏற்படும் மன அதிர்ச்சிகள் ரத்த அழுத்த நோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணமாக இருக்கிறதென்பதை வென்ஸ்பெர் கண்டுபிடித்திருக்கிறார்.

அமைதியான சூழ்நிலையுள்ள கிராமங்களில் வசிப்பவர்கள் நகரங்களில் குடியேறி வசிக்கச் செய்யப்பட்டு பின்னர் பரீட்சிக்கப்பட்டனர். இவர்கள் ரத்த அழுத்தம் மிகவும் அதிகரித்துள்ளதென்பது கண்டுபிடிக்கப்பட்டது. இவருடைய திடமான முடிவு, நாகரிக வாழ்க்கையால் ரத்த அழுத்த நோய் ஏற்படுகிறது என் [illegible] ஆராய்ச்சிகள் இன்னும் மேற்கொண்டு நடைபெற்று இருக்கின்றன.

"மோரிஸன்" பம்புகள்



மண்ணெண்ணெய் டீசல் எண்ணெய் களில் குறைந்த செலவில் நீடியகாலம் உழைத்து பலன் பெறக்கூடியது.

1½, 2, 2½ அங்குல அளவுகளில் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

கே. என். அப்துல்காதர் ராவுத்தர் அன் கம்பெனி லிமிட்டெட்,

312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.

டெலிபோன் :2956. தந்தி : MEDAL

வடமாகாண விநியோகஸ்தர்கள்:

ராஜு ஸ்டோர்ஸ்,

2/B, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்
SUTANTIRAN

1962 மே மாதம் 27-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலே பேசி எண் : 3411 த. பெ. 1183

# திருந்துக! திரிக்கவேண்டாம்!

திரு. பீட்டர்கெனமன் கொம்யூனிஸ்ட் கட்சித்தலைவர், கல்வியிற் சிறந்தவர், பாராளுமன்றப் பிரதிநிதி, கொம்யூனிஸ்ட் சித்தாந்தங்களைக் கற்றவர், இதர அரசியற் கட்சிகளின் கொள்கைகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டவர். இத்தகைய பொறுப்பு வாய்ந்த ஓர் அரசியல்வாதிதான் துவேஷ எண்ணத்துடன் தமிழரசுக் கட்சியின் கொள்கையை உண்மைக்கு நேர்மாறாகத் திரித்துக் கூறியிருக்கிறார். கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பேசும்போது தான் இத் தவறைத் தெரிந்தே செய்திருக்கிறார். "தமிழரசுக் கட்சி மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதில் காட்டும் ஆர்வத்தைக் காட்டிலும் நாட்டை இரு ராஜ்யங்களாகத் துண்டாடும் ஒரு கொள்கையை நிறைவேற்றிக் கொள்வதில்தான் அதிக ஆர்வம் காட்டுகிறது" என்பதே திரு. கெனமனின் குற்றச்சாட்டு.

சமஷ்டி ஆட்சியின் அமைப்புமுறை பற்றி திரு. கெனமனுக்குத் தெரியாமலிருக்க முடியாது. குறைந்த பட்சம் சோவியத் யூனியனின் சமஷ்டி ஆட்சி முறையைப் பற்றியேனும் அவர் தெரிந்திருப்பார் என்பதில் ஐயமில்லை. அங்கே ஒவ்வொரு தேசிய இனங்களுக்கும் சுய நிர்ணய உரிமை வழங்கப்பட்டு, அக் குடியரசுகள் அனைத்தும் ஒரு மத்திய சமஷ்டி அரசில் இணைந்துள்ளன. இச் சமஷ்டி யூனியனையே "ஐக்கிய சோஷலிஸ்ட் சோவியத் குடியரசு" என்று கூறுகின்றனர். இலங்கையில் சமஷ்டியை எதிர்ப்பது போல இந்தச் சோவியத் சமஷ்டியையும் திரு. கெனமன் எதிர்க்கிறாரா? இச் சமஷ்டி முறையால் ருஷியா துண்டாடப்பட்டுக் கூறுபோடப்பட்டு விட்டதென்று அவர் கருதுகிறாரா? இல்லை — சமஷ்டி நாட்டைத் துண்டாடும் அரசியல் அமைப்பு அல்ல என்பது அவருக்குத் தெரியாமலிருக்க முடியாது. ஆனால் தமிழ் பேசும் மக்களிடையே வளர்ந்தோங்கி வரும் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கைக் கண்டு அவர் பீதியடைந்துள்ளார். ஆகையால்தான் சமஷ்டியென்றால் நாட்டைத் துண்டாடுவது என்று திரித்துக் கூறி விஷமப் பிரசாரம் செய்கிறார்.

1917ல் நடைபெற்ற ருஷிய சமுதாயப் புரட்சிக்கு மகா புருஷர் லெனின் ருஷிய மக்களின் ஆதரவை எப்படிப் பெற்றார் என்பதைத் தெரிந்து கொள்ள திரு. கெனமன் ருஷியப் புரட்சியின் வரலாற்றைச் சிறிது புரட்டிப் பார்க்கட்டும். புரட்சி வெற்றி பெற்றதும் ருஷியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்படும் என்று லெனின் அன்று மக்களுக்கு வாக்களித்தார். அதன் பின்பே மக்களின் ஆதரவு பேரலையெனத் திரண்டு வந்து ஜாரின் கொடுங்கோலாட்சியை வீழ்த்தியது, என்பது திரு. கெனமனுக்குத் தெரியாதா என்ன? ஆனால் இந்நாட்டில் மட்டும் தேசிய இனத்திற்குச் சுயநிர்ணய உரிமை வழங்குவது நாட்டைத் துண்டாடுவதாகுமென்று அவர் ஏன் தவறான காரணம் கற்பிக்க வேண்டும்? சமஷ்டி என்பது நாட்டைத் துண்டாடுவதன்று. அது பிரிவினையில் ஐக்கியம் காணும் ஒரு சிறந்த அரசியல் முறை. ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்கள் வாழும் நாட்டிலே ஐக்கியத்தைப் பேணிக் காப்பதற்காக ராஜதந்திர மேதைகளும், தேசபக்தர்களும் சமஷ்டி முறையையே கையாளுகின்றனர்.

நெற்காணிச் சட்டத்தையும், பாடசாலைகளைத் தேசியமயமாக்கியதையும் தமிழரசுக் கட்சி எதிர்த்த அடிப்படைக் காரணத்தை ஆராய்ந்து பார்க்காமல், கட்சியின் மீது தனது ஆத்திரத்தைக் கொட்டித் தீர்த்துள்ளார் திரு. கெனமன். "நாடற்றவர்கள்" என்று பட்டங்கட்டி தனியாக ஒதுக்கித்தள்ளப்பட்ட பத்து இலட்சம் தமிழ்பேசும்மக்களை நெற்காணிச் சட்டம் முற்றாகப் புறக்கணித்திருப்பதுதான் தமிழரசுப் பிரதிநிதிகள் அச்சட்டத்தை எதிர்த்து வாக்களித்ததற்கு முக்கிய காரணமாகும். தமிழ் பேசும் மக்களின் ஒரு பகுதியினரை நயவஞ்சகமான முறையில் ஒதுக்கித் தள்ளும் எந்தச் சட்டத்தையும் தமிழ் பேசும் மக்கள் என்றுமே ஆதரிக்கமாட்டார்கள் அத்தகைய சட்டங்கள் சனநாயக கோட்பாடுகளுக்கே மாறானதென்பதையும் திரு. கெனமன் உணர வேண்டும். பாடசாலைகளைத் தேசியமயமாக்கியதின் விளைவாக கல்வித்துறையில் ஏற்பட்டுள்ள குழப்பநிலை திரு. கெனமனின் கண்களுக்குப் புலப்படவில்லையா? அதனால் கல்வித் தரம் உயரவில்லை. அதற்கு மாறாக, தரம் குறைந்திருக்கிறது.

தேசியமயத்தின் விளைவாக ஆசிரியர்கள் அரசியல் உரிமைகளையும் இழந்து விட்டனர். அவர்களில் அநேகர் தொழிலையே இழந்து தவிக்கின்றனர். அவர்கள் அடிக்கடி அங்குமிங்கும் மாற்றப்பட்டு அல்லல்படுகின்றனர். தேசியமயத்தில் மலைநாட்டுத் தமிழ்ப் பிள்ளைகளுக்குக் கல்வி வசதிகள் மறுக்கப்பட்டுள்ளன. சிங்களம் படிக்கும்படி அவர்கள் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். தேசியமயமாக்கப்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களைச் சிங்களம் படிக்கும்படி நிர்ப்பந்திப்பதுதான் இச் சட்டத்தின் படுமோசமான விளைவாகும். சில தமிழ்ப் பாடசாலைகளையே சிங்களப் பாடசாலைகளாக மாற்றி விடுகின்றனர். உதாரணமாக, நீர்கொழும்பு, முன்னக்கரை தமிழ் கலவன் பாடசாலையைச் சிங்களப் பாடசாலையாக மாற்ற அரசாங்கம் செய்யும் முயற்சியை எதிர்த்து நீர்கொழும்பு தமிழ் மக்கள் கிளர்ச்சி செய்கின்றனர். இப்பாடசாலையில் 423 தமிழ் பிள்ளைகளும் மூன்று சிங்களப் பிள்ளைகளும், கல்விபயிலுகின்றனர். இவ்வாறு தாய் மொழியில் கல்வி பயிலும் உரிமைக்கே உலை வைக்கிறது இச் சட்டம். இத்தகைய சட்டத்தைத் தமிழரசுப் பிரதிநிதிகள் எதிர்த்தது நியாயந்தானென்பதை மேற்கண்ட பயங்கர விளைவுகள் நிரூபித்து விட்டன.

வட, கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்க வேண்டுமென்கிறார் திரு. கெனமன். இப்படிக் கூறக் காரணமென்ன? தமிழ் பேசும் மக்கள் வட, கிழக்கு மாகாணங்களில் வேரூன்றி அப்பிரதேசத்தையே தங்களின் தாயகமாகக் கொண்டு சரித்திர காலந்தொட்டு வாழ்ந்து வருகின்றனர். அது அவர்களின் பூமி-தமிழ் பேசும் மக்களின் பிரதேசம் என்ற உண்மையைத் திரு. கெனமனும் ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்பதையே அவரது கூற்று நிரூபிக்கிறது.

தமிழ் பேசும் மக்களின் ஏகப் பிரதிநிதியாகத் தமிழரசுக் கட்சி விளங்குவது பற்றி திரு. கெனமன் கவலைப்படுகிறார். தேசிய அடிப்படையிலுள்ள கட்சி தங்கள் கட்சிதான் என்று பெருமை அடித்துக்கொள்ளும் கொம்யூனிஸ்டுகள் இப்பொழுது தமிழரசு கட்சியைக் குறித்து வேறு ராகத்தில் பாடுவதேன்? தமிழ் கொம்யூனிஸ்ட் கட்சி, சிங்களக் கொம்யூனிஸ்ட் கட்சி என்று இரு கட்சிகள் அமைத்து இரு இனங்களுக்கும் பிரதிநிதித்துவம் தாங்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா? தமிழரசுக் கட்சிக்குப் பதிலாக தமிழ் பேசும் மக்கள் சார்பில் பேசுவதற்காக மாற்றுக் கட்சியொன்று அமைக்கும் திட்டம் உண்டா?

ஜூன் 5-ந் திகதி ஹர்தால் நடைபெறவிருப்பதைக் கேட்டு திரு. கெனமன் ஆத்திரப்படுகிறார். சிங்களம் மட்டும் சட்டத்தை நிறைவேற்றிய தினத்தை — தமிழ் பேசும் மக்கள் தங்களின் மொழியுரிமையைக் கடைசியாக இழந்த துக்க நாளை நினைவுகூரவே ஹர்தால் அனுஷ்டிக்கப்படுகிறது. இதைக் கண்டு ஏன் பீதியடைய வேண்டும்? ஹர்தால் கிலி திரு. கெனமனையும் பிடித்தாட்டுகிறது போலும்! திரு. கெனமனுக்கு ஒரு வார்த்தை: மொழியுரிமையையும் இதர உரிமைகளையும் பெறும்வரை தமிழ் பேசும் மக்கள் தங்களின் உரிமைப் போராட்டத்தைத் தளர்த்தவே மாட்டார்கள். அதனால் அரசாங்கத்திற்கு வேதனை ஏற்படும் என்று பயந்தால்; கடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் ஏகோபித்து திரண்டெழுந்து பங்குபற்றியபோது கொம்யூனிஸ்டுகள் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்ததைப் போல, இப்பொழுதும் வேண்டுமானால் ஒதுங்கி நிற்கட்டும். அதனால் சிறுபான்மை இனத்தின் உரிமைப் போரைப் பலவீனப்படுத்தமட்டும் முயற்சி செய்ய வேண்டாம்! பிறருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும் தீங்கு விளைவிக்காமலாவது இருக்கட்டும்.

# சுதந்திர ஈழ அரசு அமைப்பதெப்படி?

——oo—oo——

## திரு. சுந்தரலிங்கத்தின் விபரீத யோசனையும் வேடிக்கைப் பேச்சும்

**நீண்ட காலமாக அரசியல் அஞ்ஞாதவாசம் புரிந்த திரு. சி. சுந்தரலிங்கம் தமிழரசுத் தந்தை திரு. செல்வநாயகத்துக்கு ஒரு பகிரங்கக் கடிதம் விடுத்து மீண்டும் அரங்கத்தில் குதித்துள்ளார். இக் கடிதத்தின் மூலம் மூதூரில் அவர் நடத்தப் போகும் தேர்தல் வாணவேடிக்கைகளுக்கு ஆரம்பப் பூஜை போட்டிருக்கிறார் என்பது தெளிவு. எனவே இக் கடிதத்திற்கு விரிவான பதிலொன்று அவசியமென நாம் கருதவில்லை.**

திரு. சுந்தரலிங்கம் ஏதோ ஒரு தவறான கருத்திலே மூழ்கிக் கிடக்கிறாரென்று தெரிகிறது. தமிழ் பேசும் மக்களுக்குச் செய்த அநியாயம் அக்கிரமம், அநீதி அனைத்தும் 1954 க்கு பிறகே செய்யப்பட்டதாகவும் அதற்கு முன்பு அவர்கள் சகல உரிமைகளும் பெற்று பூரண சுதந்திரத்துடன் வாழ்ந்தார்களென்ற கருத்துப்படவும் இக் கடிதம் எழுதப்பட்டுள்ளது.

திரு. டி. எஸ். சேனநாயக்கா 1944-ல் வழங்கிய சம அந்தஸ்தை திரு. பண்டாரநாயகா நாசமாக்கினார் என்று திரு. சுந்தரலிங்கம் கூறும்போது பெரிய சேனநாயகாவின் பரந்த விரிந்த மனப்பான்மையை பாராட்டும் ரீதியிலே எழுதுகிறார்.

### அவர் வேறு இவர் வேறு?

திரு. டி. எஸ். சேனநாயக்காவின் பதவிகாலத்தில், அவர் செய்தவையாவும் நியாயமானவை, நேர்மையானவை யென்று வாதாடும் திரு. சுந்தரலிங்கம், சேனநாயக்காவின் மந்திரி சபையில் சில காலம் அங்கம் வகித்தார். பிரஜா உரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டதும் கருத்து வேற்றுமை கொண்டு, சட்டத்துக்கு ஆதரவாக வாக்களிக்காமல் மந்திரிப் பதவியைத் துறந்து வெளியேறினார். அந்நாளில் திரு. டி. எஸ். சேனநாயக்கா செய்தது துரோகமாகத் தெரிந்துள்ளது. அதனால் தான் வெளியேறினார். ஆனால் இன்று அதை திரு. சுந்தரலிங்கம் மறந்துவிட்டாரா? அல்லது அன்றிருந்த சுந்தரலிங்கம் வேறு—இன்றுள்ளவர் வேறா?

காலஞ் சென்ற ஒரு தலைவர் செய்த தீமைகளை எடுத்துக் கூறுவது மனதுக்கு சங்கடமெனினும், அவர் சிறுபான்மை மக்களுக்குத் தோண்டிய குழியின் ஆழத்தை நாம் தெரிந்து கொள்வதும் அவசியமாகும். அதைத் தெரிந்துகொண்டால்தான் தமிழ் பேசும மக்களின் உரிமைகளை பறிக்கும் முயற்சியின் வரலாற்றை நாம் கண்டுபிடிக்கலாம். இம் முயற்சியை ஆரம்பித்து வைத்தவர்கள் திரு. சுந்தரலிங்கம் எண்ணுவதைப்போல சேர். ஜோன் கொத்தலாவலையோ, திரு. பண்டாரநாயகாவோ அல்ல. அந்தக் கொடிய முயற்சியின் கர்த்தா பெரிய சேனநாயக்காதான் என்பதைப் புரிந்து கொள்வது கடினமன்று.

### குடியேற்றம் பிரஜாவுரிமை

தமிழர் பிரதேசத்திலே சிங்களவர்களைக் குடியேற்றி, நாளடைவில் சிங்களவர்களின் தொகையைப் பெருக்கி அந்தப் பிரதேசத்தையே சிங்களப் பிராந்தியமாக மாற்றத் திட்டம் தீட்டியது யார்? பெரிய சேனநாயக்கா அதனைச் செய்யவில்லையென்று திரு சுந்தரலிங்கம் கூறமுடியுமா? அத் திட்டத்தின் கீழ், சிங்களவர்களைக் குடியேற்றும் கல்லோயா குடியேற்றத் திட்டமென்னும் பிரமாண்டமான ஒரு குடியேற்றத் திட்டத்தை ஆரம்பியதவர் யார்? திரு. சுந்தரலிங்கத்தின் அரசியற் குருவான திரு. சேனநாயக்காதேனே! இந்த உண்மையை யாரால்தான் மறுக்க முடியும்?

மலை நாட்டுத் தமிழ் மக்களின் வாக்குரிமையையும் குடி உரிமையையும் பறித்து அவர்களை அரசியல் அனாதைகளாக்கியது யார்? பெரிய சேனநாயகா அல்ல என்று கூறமுடியுமா? தமிழ் பேசும் இனத்தின் மரண சாஸனம் போன்ற பிரஜாவுரிமைச் சட்டத்தை இயற்றியதும் அந்த மகான்தானே! இந்த இலட்சணத்தில் பெரிய சேனநாயக்கா சிறுபான்மையோருக்குச் சகல துறைகளிலும் சமஅந்தஸ்து, வழங்கி அவர்களுக்குப் பரிபூரண உரிமைகளைப் பெற்றுக் கொடுத்திருந்தார்களென்று யாரேனும் கூறுவார்களாயின் அவர்கள் உண்மையை மறைப்பவர்களாவர்.

### சூட்சமமான திட்டங்கள்

அவர் பெரிய ராஜதந்திரி என்பதில் சந்தேகமில்லை. படிப்படியாகத் தமிழ்பேசும் இனத்தையும் தமிழ் மொழியையும் அழிக்கும் பொருட்டு மிகத்திறமையான, — ஆனால் வெளிப்படையாகத் தெரியாத சூட்சமமான திட்டங்களைத் தீட்டி அமுலுக்குக் கொண்டு வந்தார். அவர் இன்னும் சில ஆண்டுகள் உயிர் வாழ்ந்திருந்தாராயின், தமிழ்பேசும் மக்களின் எதிர்ப்பு திரண்டு வரும் முன்பே குழியைத் தோண்டி அதனுள் அவர்களைச் சுலபமாகத் தள்ளியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. அதை நிறைவேற்ற அவரைச் சுற்றி நின்ற சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஐந்தாம் படையினர் அவருக்கு உதவி செய்திருப்பார்களென்பதிலும் ஐயமில்லை. அவரது திட்டங்களை அவருக்குப் பின் ஆட்சி பீடமேறியவர்கள் ராஜதந்திர மற்றமுறையில் வெளிப்படையாக நிறைவேற்ற நேரடி நடவடிக்கை எடுக்கத் தொடங்கியதும் தமிழ் பேசும் மக்கள் விழித்துக் கொண்டு உஷாராகிவிட்டார்கள். இந்த உண்மைக்குத் திரைபோட முயற்சி செய்கிறார். திரு சுந்தரலிங்கம்.

### கிண்டல்

சத்தியாக்கிரகத்தையும் சத்தியாக்கிரக முறையையும் திரு. சுந்தரலிங்கம் கிண்டல் செய்கிறார். "அவருக்கு நாம் கூறுவதெல்லாம் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வரலாற்றைச் சிறிது ஆராய்ந்து பார்க்கும்படி கேட்டுக்கொள்வதுதான். சூரியனே அஸ்தமிக்காத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையே அடிபணியச் செய்த சத்தியாக்கிரக ஆயுதத்தைத் திரு. சுந்தரலிங்கம் போன்றோர் கிண்டல் செய்வதாயின் அதற்குஎந்த அர்த்தமும் இருக்க முடியாது.

திரு. சுந்தரலிங்கத்தின் வேடிக்கையான ஒரு கருத்தையும் நாம் இங்கு குறிப்பிட்டுத்தாகவேண்டும். சமஷ்டி ஆட்சி முறையை ஒருபோதும் சிங்கள மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்களென்று கூறும் திரு. சுந்தரலிங்கம் தமிழ் மக்கள் தனியாகப் பிரிந்து சென்று சுதந்திரமான தனியோர் ஈழ ராஜ்யம் அமைத்துகொள்ள வேண்டுமென்று யோசனை

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள அறிவு : இரு அமைச்சர்கள் மோதல்

## கருத்து வேற்றுமையால் ஏற்பட்டுள்ள சங்கடம்

### சிங்களச் சிப்பந்திகளின் திண்டாட்டம்

ஓய்வு பெறும் வயதுக்கு (55)ப் பிறகும் சேவா காலத்தை நீடிக்கவிரும்பும் அரசாங்கச் சிப்பந்திகள் சிங்கள அறிவு பெற்றிருக்க வேண்டிய விஷயத்தில் இரு மந்திரிகளுக்கிடையே கருத்து வேற்றுமையும் மோதுதலும் ஏற்பட்டுள்ளன.

55 வயதுக்குப் பிறகு அரசாங்க சேவையில் தொடர்ந்து பணியாற்ற விரும்பும் அரசாங்க சிப்பந்திகள் சிங்களம் 3-ம் வகுப்புக்குள்ள அறிவைப் பெற்றிருக்க வேண்டுமென்று நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா தெரிவித்திருப்பதாக அறியப்படுகிறது.

ஆனல் 55 வயதுக்குப் பிறகும் அரசாங்க சேவை செய்ய விரும்புகிறவர்கள் அலுவல்களைக் கவனிப்பதற்குப் போதுமான சிங்கள அறிவு இருந்தால் போதுமானது என்பத நீதி மந்திரி திரு. சாம். பி. சி. பர்னந்துவின் கருத்தாகும். இவ்வாறு இவ் விஷயத்தில் இரு மந்திரிகளும் மோதிக்கொள்கின்றனர்.

அவர்களின் அறிவைப் பரீட்சிக்கும் பொருட்டு பரீட்சை நடத்துவது சம்பந்தமாக திரு. சாம். பி. சி. பர்னந்து எதுவும் கூருமல் மௌனம் சதிக்கிறரென்பது குறிப்பிடத்தக்கது.

எனவே தமது சேவையை நீடிக்க விரும்பும் சிங்கள அரசாங்க சிப்பந்திகள் யார் சொல்வதை ஏற்றுக் கொள்வது என்று தெரியாமல் விழிக்கிருர்கள்.

## சுதந்திர ஈழ..

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகிருர். சமஷ்டி முறையையே ஏற்றுக்கொள்ளாத சிங்கள மக்கள் சுதந்திர ஈழ அரசு நிறுவுவதை மட்டும் கை கூப்பி வரவேற்பார்களோ?

திரு. சுந்தாலிங்கம் தனது ஈழ ராஜ்யத்தை எப்படி அமைக்கப் போகிருர்? அதைப் பெறுவதற்காக அவர் என்ன திட்டம் வைத்திருக்கிருர்? அது ஓர் இரகசியத் திட்டமாக இருக்குமோ? அவர் சத்தியாக்கிரகத்தைக் கிண்டல் செய்வதால் அந்த முறையை அவர் நிச்சயம் கையாளமாட்டார். ஈழத் தமிழ் ராஜ்யம் பெறும் பொருட்டு ஒருவேளை அணுக்குண்டு, ஜலவாயுக் குண்டு. ரொக்கட்டுகள் சகிதம் அவரது அடங்காத் தமிழ் முன்னணிப் படைகள் சிறிமா அரசாங்கத்தை எதிர்த்து போருக்குக் கிளம்பி விடுமோ?

திரு. சுந்தரலிங்கத்தின் விசித்திரமான இந்த விபரீத திட்டங்கள், வெறும் பொழுதுபோக்குத் திட்டங்கள் என்று தமிழ் பேசும் மக்கள் கருதுகின்றனர்.

அவரது பத்தாம் பசலிக் கருத்துக்கள் துருப்பிடித்துப் போனவை. செயல் முறைக்குத் தகுதியற்றவை யென்பது தமிழ் பேசும் மக்களின் தீர்ப்பு.

"சிங்களம் மட்டும்" சட்டத்தை எதிர்ப்பது பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படையை அலட்சியம் செய்வதாகும் என்று திரு. சுந்தரலிங்கம் மயிர் பிளந்து வாதிக்கிருர். அப்படியானல் பாராளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படையைப் பாதுகாப்பதற்காகச் சிங்களம் மட்டும் சட்டத்தை எதிர்க்காமல் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுமா? வேடிக்கையான சிறு பிள்ளைப் பேச்சு.

தமிழ் பேசும் மக்களின் மதிப்புக்குரிய தலைவரை திரு. சுந்தரலிங்கம் தனது பகிரங்கக் கடிதத்தில் கன்னு பின்னு வென்று திட்டியிருப்பதால் திரு. சுந்தரலிங்கத்தின் அந்தஸ்து இம்மியளவு கூட உயராது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்ருேம்.

## மேயரின் பதவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நாகநாதனும் என்னோடு இக்கண்டனம் தெரிவிப்பதில் பங்குபற்றுகிருர். மாநகரசபையைக் கலக்கும் விடயம் பரிசிலனைக் கெடுக்துக் கொள்ளப்பட்டால் இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்க முன்பு இத விடயம் பற்றி நாங்கள் உங்களிடம் விவாதிப்பதற்கு ஒரு சந்தர்ப்பமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

## கொழும்பு தமிழ்ச்சங்க திருவள்ளுவர் விழா

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் 27-5-62 வெள்ளவத்தை சைவமங்கையர்கழக மண்டபத்தில் திருவள்ளுவர் விழா நடைபெறவுள்ளது.

"திருக்குறள் இலக்கியமா? அல்லது அறநூலா?" என்பது பற்றிய கருத்தரங்கம் காலை 9 மணிக்கு நடைபெறுகிறது. பேராசிரியர் சாலஇளந்திரையன், திருமதி இளந்திரையன், திரு. ஈழவேந்தன், வித்துவான் சோதிநாதன், வித்துவான் வேதநாயகம், திரு. ஜகநாதன் முதலியோர் இக்கருதரங்கத்தில் பங்குபற்றுகின்றனர்.

திருச்சி தூய யோசேப் கல்லூரி பேராசிரியர் திரு. ஐயன் பெருமாள் கோனர், திரு. சாலை இளந்திரையன், திருமதி. இளந்திரையன் ஆகியோர்களும் மாலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சொற்பெருக்காற்றுவார்களெனத் தெரியவருகிறது,

## ஆசை நிறைவேறவில்லை

## ஆணையாளரிடம் ஒப்படைக்க திரு. துரையப்பா முயற்சி

எட்டாத திராட்சைப் பழத்தை நரி புளிக்கிறது என்றதாம். யாழ் நகரசபையின் நிர்வாகம் தனது கைக்கு வராது போகவே திரு. துரையப்பா எம். பி. யாழ் நகரசபை சரிவர இயங்கவில்லை, அதனைக் கலைத்து நிர்வாகத்தை விசேட ஆணையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று மந்திரி மகாநாம சமரவீரவைக் கேட்டுக் கொண்டுள்ளார் என்று அறியப்படுகிறது.

முதலில் தமிழரசு மேயர் வருவார், கருமங்கள் தமிழில் நடைபெறும் என்று பயமுறுத்திப் பார்த்தார். அது பயனளிக்காது போகவே தான் மேயராக வர ஒரு வாய்ப்பு அளிக்குமாறு கேட்டார். முடிவில் பதவி ஆசையால் உந்தப்பட்ட திரு. துரையப்பா நகரசபையைக் கலைத்து சிங்கள ஆணையாளரிடம் பொறுப்பைக் கொடுத்தால் நிர்வாகம் சிங்களத்தில் நடைபெறும் என்று கூறி, தன் நன்மைக்காகத் தமிழினத்திற்குத் துரோகம் விளைக்க முன்வந்தார். செய்தது போதாது என்று யாழ் நகரசபையில் தமிழில் அலுவல் நடக்காது அவரது சிடன திரு. இராஜசூரியர் பார்த்துக் கொள்ள, குருநாதர் சிங்களத்தைப் புகுத்த ஏற்பாடு செய்கிருர்.

இவருக்கு உடந்தை யார்? மாநகரசபைக் கூட்ட நிகழ்ச்சிநிரல் தமிழில் வெளியான போது அதற்கு எதிர்ப்புக் காட்டிய திரு. இராஜசூரியர் தமிழ் நிகழ்ச்சிநிரலை வாசிப்பதானல் தான் அரிவரி சென்று தமிழ் படிக்க வேண்டும் என்று சொன்னர். இப்போது சிங்களத்தைப் புகுத்த தனது குருவுக்கு உறுதுணையாக நிற்கிருர்.

என்னைப் பதவியால் இறக்கப் போகிருர்கள் என்று கதறிப் பலரிடமும் முறையிட்டுத் திரிந்த மாஜி மேயர் திரு. ஜேக்கப் அடுத்தவர். பதவி ஏற்குமுன் மாநகர சபை அலுவல்களைத் தமிழில் நடாத்துவதாக வாக்குறுதி கூறிய அதே திரு. ஜேக்கப், பதவியிலிருந்து இம்மாதம் 15-ம் திகதி விலக்கப்படுமுன் அதே நாள் ஈழப் பொருளாதார அபிவிருத்திச் சங்கத்தினர் ஆங்கில மனுப் பத்திரத்தில் தமிழில் நிரப்பி அனுப்பியிருந்த விண்ணப்பத்தை அங்கீகரித்த அதே திரு. ஜேக்கப் இன்று சிங்களத்தைத் திணிக்க உடந்தையாகின்ருர்.

நண்பர் அபூசாலியோ என்றும் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக இருப்பவராதலின் அவரிடம் நாம் ஒன்றும் எதிர்பார்க்க முடியாது. திரு. துரையப்பா உயிருள்ள பாம்பை செத்த பாம்பு என்று கூறினலும் கூட அதனை மறுபேச்சின்றி ஆமோதிப்பவர் திரு. அபூசாலி. ஆனல் அரியாலை திரு. நடராஜா......அவரும் இவர்களுக்கு உடந்தையாகச் சிங்களத்தைத் திணிக்க முற்படுகிருர்.

## மட்டக்களப்பு மக்களைப் புறக்கணிக்காதீர்

## தேசியமய மந்திரிக்கு திரு. இராசமாணிக்கம் மகஜர்

"இலங்கைப் போக்குவரத்துச்சபையின் மட்டக்களப்பு கிளைக்காரியாலயத்தை மூடிவிடமுயற்சிகள் நடைபெறுவதாகவும், மட்டக்களப்புப்பகுதிப் போக்குவரத்து ஒழுங்குகளை, 130 மைல் தொலைவிலுள்ள அநுராதபுரியில் காரியாலயய அமைத்து, அங்கிருந்து கவனிக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாயும் அறிந்து அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தேன்." இவ்வாறு, மட்டக்களப்பிலிருக்கும் இ. போ. ச கிளைக் காரியாலய இடமாற்றத்தை ஆட்சேபித்து தமிழரசுக் கட்சித் தலைவரும், பட்டிருப்புப் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம், தேசியமய மந்திரிக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவித்துள்ளார்.

"மட்டக்களப்பு கிளைக்காரியாலயத்துக்குட்பட்ட பஸ் போக்குவரத்துப் பிரதேசம் மிகவும் விஸ்தீரணமானது. முக்கியம் வாய்ந்ததும் கூட. போக்குவரத்துச் செய்யும் மக்களின் தொகையும் அதிகம். ஆனல் தேவைக்குப் போதுமான பஸ்களும் கிடையாது. இருக்கும் பஸ்களும் தரங்கெட்டவை. பாடசாலை மாணவ மாணவிகள் முதற்கொண்டு மக்கள் ஆடு மாடுகளைப் போல் பஸ்களில் அடைக்கப்படுகிருர்கள். பலமணி நேரம் காத்திருந்தாலும் பஸ்கள் கிடைப்பதில்லை. இந்தச் சீர்கேடுகளை உடனடியாகக் கவனிக்க ஆவன செய்யலாம். நிர்வாகக் காரியாலயத்தை அநுராதபுரிக்கு இடம் மாற்றுவது இப்பகுதி மக்களைப் புறக்கணிப்பதாகும். இந்தப் பாகுபாடான செயல்களைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று அம்மகஜரில் கேட்டுள்ளார்.

## மேல் நாட்டுச்..


(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கையாளும் கூட. எனவே முடிவில் அவருக்கே கட்சி நியமனம்.

நியமனப் பத்திரங்கள் 22-ம் திகதி அனுரதபுரத்தில் தாக்கல் செய்யபபட்ட போது இவ்விருவரும் சிறீ லங்கா கட்சியின் வழக்கமான கை அடையாளம் தமக்கு வேண்டுமென்று சண்டையிட்டனர். கடைசியில் திருவுளச் சீட்டு போட்டு திரு. இரத்நாயக்காவிற்கு கை அடையாளம் கொடுக்கப்பட்டது.

அனுரதபுரத்தில் கூடிய பகுதி கீழ் நாட்டுச் சிங்களவரே வாழுகின்றனர். எனவே கீழ் நாட்டுச் சிங்களவர்களுக்கு எதிராக சிறீமாவோ அரசாங்கம் பாரபட்சம் காட்டுகிறது என்று திரு. தலுவத்த பிரசாரம் செய்கிருர். (சிறிமாவோ மேல் நாட்டுச் சிங்களவர் என்பது குறிப்பிடத்தக்கது) மேல்நாட்டுச் சிங்களவனுக்கு வாக்களிக்க வேண்டாம் என்று திரு. தலுவத்தை கூற மறுபக்கத்தில் திரு. இரத்நாயகா பகுதியினர் திரு தலுவத்தை அனுரதபுரம் பகுதிச் சிங்களவர் அல்ல அவர் காலிப் பகுதிச் சிங்களவர் என்று பிரசாரம் செய்கிருர்கள்.

இப்படி ஆளும் கட்சி பிளவுபட்டிருக்கையில் யூ. என். பி. அபேட்சகர் திரு. அசோகா மஹாடியுள் வேவா வெற்றிப் பாதையை அண்டி நிற்கிருர். ஆனல் இந்தத் தேர்தலுக்கு முடிவு கூறுவது அங்குள்ள 3000 தமிழ் வாக்குகளே. தமிழினத்தை அடக்கு முறையால் நசுக்கலாம் என்று பகற் கனவு காணும் சிறிமாவிற்கும் அவரது முதலைக் கண்ணீரால் எழுந்த சிறீலங்கா கட்சியினருக்கும் அனுரதபுரம் வாழ் தமிழ் மக்கள் தக்க பாடம் படிப்பிப்பார்கள் என்பதில் துளிகூட ஐயமில்லை.

சி. சி. சி. புகையிலை பசளைக் கலவைகள்



கொழும்பு கொமர்ஷல் கொம்பனி லிமிட்டெட்,

அக்கவுட் ஹவுஸ், யூனியன் பிளேஸ், கொழும்பு-2. போன்: 7935.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




என்ரை அவர் நல்லவர். மிச்சம் நல்லவர். தாய் தேப்பனைத் திண்டு போட்டுத் தன்னந் தனியாக எங்கட ஊருக்கு வேலையின் நிமித்தம் வந்து, என்னைக் கலியாணம்செய்தவர். இப்ப சில குமர்ப் பிள்ளைகள் தங்கடதாய் தேப்பனுக்குத் தெரியாமல் கூடிப்போட்டுத் தானே கலியாணஞ் செய்யினம். அப்பிடிக் கூடிப்போட்டுச் சிலபேர் பிள்ளையையும் குடுத்துப் போட்டுப் பொம்பிளையளைத் தவிக்க விட்டிட்டு ஓடிப்போயிருக்கினம். அப்பிடி நாங்கள் ஆருக்கும் தெரியாமல் கூடவில்லை!

அப்ப, ஆச்சியும் நானும் தான் எங்கடை வீட்டிலை இருந்தனுங்கள். அப்புவும் நான் சின்னனாயிருக்கைக்கையுக்கை செத்துப் போனாராம். என்னை வளக்கிறதுக்கு ஆச்சி பட்ட பாடடை அவ சொல்லச் சொல்ல எனக்கு அழுகைகூட வந்துவிடும். சொந்தத்துக்கை உள்ளவை ஒருத்தரும் எங்களைத் திரும்பிக்கூடப் பாக்கிறதில்லையாம். நான் ஒருக்கால் சாகக் கூடக் கிடந்தனானும். செய்யாத வைத்தியமெல்லாம் செய்து பார்த்துப் போட்டு, எங்கடை வயிரவசாமிக்குக் காசு நேர்ந்து கட்டிப்போட்டு, அவற்றை வாசலிலை என்னையும் வைச்சுக் கொண்டு பழி கிடந்தாவாம் ஆச்சி! அதுக்குப் பிறகு தானும் வருத்தம் மாறிச் சுகமானது.

நான் பக்குவப்பட்டுப் பெரிய பிள்ளையானப்போலை தான் அவர் எங்கடை வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலை வந்து நிண்டவர். தான் கண்ணை மூடுறதுக்கிடையிலை எனக்கு ஒரு கலியாணத்தைச்செய்துவைக்க வேண்டுமென நினைச்ச ஆச்சி, அந்த வீட்டுக்காறரைப் பிடிச்சு இவற்றை விருப்பத்தையும் கேட்டு அவருக்கு முடிச்சுக் குடுத்தினம். அவருக்குக் கம்பி றோட்டிலை கல்லுப் போடுற உத்தியோகம். கோறணமேந்து உத்தியோகம்தான்.

பேரப்பிள்ளை ஒருத்தனைக் கண்டு போட்டுத்தான், தான் சாவனெண்டு சொல்லிக்கொண்டிருந்த ஆச்சி, ஒரு நாள் திடுதெப்பெனத் தலையிடிக்குதெனப் படுத்தவ படுத்தது தான் பிறகு, எழும்பவேயில்லை! கண்ணை மூடிவிட்டா!

ஆச்சி செத்தாப் போலை, பிள்ளை வயித்தோடை நான் தான் எல்லா வேலையையும் தனியச் செய்வன். வேலை செய்தால் தான் பிள்ளை சுகமாய்ப்பிறக்குமெண்டு அவர் அடிக்கடி சொல்லுவார்.

ஒரு நாள் காலமை, இவர் வேலைக்கு வெளிக்கிடுகிற நேரமிருக்கும், எனக்கு வயிறெல்லாம் நோகத் துவங்கி விட்டுது. அவரிட்டை இதைச் சொன்னன். அடுத்த வீட்டுக்காறப் பாறுவதிப் பேத்தியைக் கூட்டிக் கொண்டு வந்து காட்டினார். எனக்கெண்டால் ஒரே இடுப்புவலி!

கார் ஒண்டைப் பிடிச்சு ஆசுபத்திரியிலை கொண்டு போய் விட்டார் அவர். எனக்கெண்டால் தனிய அங்கை இருக்க விருப்பமில்லை. இதை அவரிட்டைச் சொன்னன். அதுக்கவர், 'விசர்க் கதை கதைக்காமல் சும்மாயிரனை......எத்தினை நேசம்மாக்களும் டாக்குத்தர்மாரும் இருக்கினம்...வடிவாய்ப் பாப்பினம்...இதுதருமாசுப்பத்திரிதானே, எண்டார். பின்னைச் சரியெண்டு நானும் ஓமெண்டு விட்டன். என்னை ஒரு கட்டிலிலை விட்டிட்டுப் பின்னேரம் வாறதெண்டு அவரும் போய்விட்டார்.

இந்தப் பொம்பிளையளுக்குத்தான் எத்தனைவருத்தம். வீட்டுக்குத் தூரமெண்டு மாசம் மாசம் ஒரு குத்துவலி...வேதினை... பிறகு, பிள்ளைப்பெற இருக்கிற வலி...... ஆத்தையடி....அதை நினைச்சால் பெரிய பயமாயிருக்கு ......முதல் பிள்ளை...என்ரை உயிர்கூடப் போய்வந்தது. அப்பத்தான் யோசிச்சன்... இந்தக் கடவுள்கூடப் பொம்பிளையளுக்குத் துரோகம் செய்யிறரெண்டு. பின்னை என்ன உடம்புப் பலமில்லாத பொம்பிளையளைத்தான் பிள்ளைப் பெற வேணுமெண்டு ஏன்விட்டார்?

நான் மயங்கிப் போய்க் கிடக்கையுக்கை 'ம்......மா' எண்ட சத்தம் கேட்டுக் கண்ணை முழிச்சுப் பாத்தன். என்ரை ஆச்சி கண்ட கனவு சரியாய்ப் போயிருந்தது. அதைப் பார்க்க அவதான் இல்லையெண்டாலும் அவவின்ரை விருப்பத்தின்படி ஒரு பொடியன் பிறந்திருக்கிறனெண்டு எனக்கு நெஞ்சு பூரிச்சுப் போச்சு. என்ரை அவரின்ரை முகம் கண்ணுக்கை வந்து ஆடியது. பக்கத்திலை நிண்டு நேசம்மாக்கள்ஏதோகுசுகுசெண்டு கதைச்சுக்கொண்டிருந்தினம். பிறந்த மேனியோடை நான் கண்ணை



முழிச்சுப் பார்க்க வெட்கமாயிருந்தது. என்ரை பொடிப் பயல் 'அம்மா' எண்டு அழுவதைக் காதால் கேட்டபடியே கண்களை மூடிக்கொண்டேன்.

பிறகு பார்த்தபொழுது என்ரை கண்ணையே என்னால் நம்பமுடியேல்லை. எனக்குப் பக்கத்திலை ஒரு செத்த பிள்ளை அதுவும் பொம்பிளைப்பிள்ளை கிடந்தது. 'எங்கையம்மா என்ரை பிள்ளை' எண்டு பக்கத்திலை நிண்ட நேசம்மாவிடம் கேட்டன். 'உதுதான் உன்ரை பிள்ளை செத்துப் போச்சுது' எண்டினம், 'என்ரை பிள்ளை ஆம்பிளைப் பிள்ளையம்மா......' நான் சொல்லுவதுக்கிடையில், "சீ......ஏன் கத்துகிறாய்? இதுதான் உன்ரை பிள்ளை .........கத்தாமல் கிட......" [illegible]

நான் பெத்த பிள்ளை ஆம்பிளைப் பொடியன்... அதை ஆருக்கோ மாத்திவிட்டார்கள். எனக்கு அஞ்சுங்கெட்டு அறிவுங்கெட்டுப் போச்சு. 'ஐயோ' எண்டு கத்தினேன். கட்டிலிலை கிடந்து நிலத்திலை விழுந்தது போலைக் கிடந்தது...பிறகு...பிறகு?

"அம்மா...அம்மா...என்னை விட்டிடுங்கோ... நோகுது... நோகுது......" எண்ட பரிதாபக் குரல் கேட்டுக் கண்ணைத் துறந்து பாத்தன். அடுத்த கட்டிலிலை படுத்துக் கிடந்த ஒரு பொடிச்சியை சுத்தி நேசம்மாக்கள் சிலர் நிண்டினம். அங்கை வந்த டாக்குத்தர் ஐயா அவர்களைப் பாத்து உறுமினார்,

"பிள்ளைப் பெத்து, பிள்ளையைச் சாகக் குடுத்தவளுக்கு பால் கட்டி வேதினை குடுக்குமென்று பாலையெடுக்கச் சொல்ல, வயித்திலை கட்டியோடை படுத்திருக்கும் குமர்ப்பிள்ளைக்கா பால் எடுக்கிறியள்...... உங்களுக்குப் பாடம் படிப்பிக்காட்டி......!" இப்படி டாக்குத்தர் ஐயா பேசினது எனக்குச் சாடையாகக் கேட்டுது.

எனக்குத் தலையைச் சுழட்டிச்சு. என்றை பிள்ளையைப் பத்தி அந்த டாக்குத்தர் ஐயாவிட்டைச் சொல்லலாமெண்டு உன்னியுன்னிப் பாத்தன். குரல் வெளியிலை வராமல் தொண்டையுக்கை நிண்டிட்டுது, ஏன்தான் தொண்டை அடைச்சுதோ?

எனக்குப் பால் எடுப்பதாக எண்ணிப் பக்கத்துக் கட்டிலில் படுத்துக் கிடந்த குமர்ப்பிள்ளைக்குப் பால் எடுத்த அவர்களே பம்பரம் போலச் சுழண்டு என்ரை கட்டிலுக்கு வந்தார்கள். பாலையெடுத்தார்கள். என் நெஞ்சு பாலைவனமாய்ப் போச்சு. ஐயோ ஆச்சி......நீ இருந்தாயெண்டால் இப்பிடி நான் தனியாக வந்து பிள்ளையையும் பறிகுடுத்து ......? நான் பெத்த பிள்ளை செத்தா போச்சு' இல்லை...... ஆருக்கோ மாத்திக் குடுத்திட்டினம்.

எனக்குப் பக்கத்துக் கட்டிலிலை பிள்ளைப் பெத்துக் காகப் படுத்துக் கிடந்தவள் அந்த ஆசுப்பத்திரியிலை ஒரு நேசம்மாவாம்! அவள் பெத்த செத்த பிள்ளையை. நான் பெத்ததெண்டு......... கடவுளே மனிசருக்குத்தான் கண் கெட்டுப் போச்செண்டு உனக்குமா கெட்டுப்போச்சு?

நான் கண்ணை முழிச்சுப் பாத்தபோது எங்கையோ இருட்டறையுக்கை கிடக்குமாப் போலை கிடந்தது. என்ரை அவர் என் பக்கத்திலை நிண்டு கொண்டு முகத்தைத் தடவித் தடவி விக்கி விக்கி அழுதுகொண்டிருந்தார். அவரைக் கண்டவுடனை என் வருத்தமெல்லாம் பறந்து போச்சு. 'நான் உங்களோடை வீட்டுக்கு வாறன். கூட்டிக்கொண்டு போங்கோ, இஞ்சை இருக்க எனக்கு விருப்பமில்லை' எண்டு எழும்பினன்.

எழும்ப முடியாமல் திக்குமுக்குப்பட்ட என்னைப் பிடிச்சு வளத்திய அவர், 'உன்னைச் செத்துப் போச்செண்டு தந்தி வந்துதான் நான் இஞ்சை வந்தனான். உன்னையிப்ப சவக்காம்பறையுக்கை போட்டிருக்கினம்...' சொல்லிக்கொண்டே போனார்.

நாக்கு வறண்டு போய்க் கிடந்த நான் கொஞ்சம் தண்ணி தரும்படி சைகை காட்டினன். சோடா வேண்டி வருவதாகச் சொல்லிப் போட்டு வெளியிலை ஓடினார்...

அவர் வெளியிலை போக, டாக்குத்தர் ஐயாவும் நேசம்மா ஒருத்தியும் வந்தார்கள். 'நான் இப்ப கேட்டுக்கொண்டு வந்தனான்... அவன் கதைச்சுக்கொண்டிருந்ததை..." நேசம்மாவின் பேச்சிலே படபடப்பு இருந்தது.

'செத்துப் போனாள் எண்டு தானே....ஓமோம்! உயிர் கிடக்கு...நல்லாயிருக்கு, நீங்கள் பாக்கிற விதம்...இதுக்கிப்ப என்ன செய்யிறது?" என் கையைப் பிடித்துப் பாத்த டாக்குத்தர் ஐயாவின் கேள்வியிது!

"இறக்கோட் எல்லாம் செத்துப் போச்செண்டு எழுதிப் போட்டன் இடாளிங்... ஊசி மருந்திலை நஞ்சைப் போட்டுக் குத்திவிடுங்கோ... இந்தாருங்கோ பிடியுங்கோ...நான் கொண்டு வந்திருக்கிறேன்..." நெருப்புக்கு மேலை நிண்டவள் போலைக் குதிச்சுக் குதிச்சுப் பேசினாள்.

'உம்மாலை நான் எத்தினை பாவங்களைச் செய்ய வேண்டியிருக்கு?'— ஊசி மருந்தைக் கையிலை வாங்கிக் கொண்டார்.

"எனக்காக ...பிளீஸ்... இடாளிங்..." குழைந்து குழைந்து பேசினாள். அது என்ன இழவோ எனக்குப் புரியவேயில்லை!

என் கை வலித்தது. ஊசி போட வேண்டாம்... என்னை விடுங்கோ.. என்னைக் கொல்லாதையுங்கோ... கத்தினேன். அதைத் தடுக்க முடியவில்லை! பிள்ளைப் பெத்த உடம்பில்வலுவேது?

அவர் சோடாப் போத்திலோடை ஓடிவந்தார். "செத்துப் போச்செண்டு தந்தியடிச்சியளே—அவள் உயிரோடைத்தானே இருக்கிறாள் டாக்குத்தர்?" அழுதுகொண்டே டாக்குத்தர் ஐயாவிடம் கேட்டார்!

என்னைக் கொண்டு போட்டினம்... நான் சாகப் போறன்...நஞ்சைத் தந்திட்டினம்...ஊசி ஏத்திப் போட்டான் டாக்குத்தர். என்ரை

(15-ம் பக்கம் பார்க்க)


## ஆனந்தா லேகியம்



இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லால் எழுதினால் இனாமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மக்கள் குரல்

## வரப்போகும் வெற்றிக்கு அடக்குமுறை ஓர் முன்னறிவிப்பு

இலங்கை அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தை நிலை நாட்டி இராணுவத்தின் துணை கொண்டு எமது அறப்போரை ஓராண்டு காலம் அடக்கி வைத்திருந்தது.

இந்த நேரத்தில் அறப்போரில் ஈடுபட்டோரைத் துரோகிகள் என்றும், பொலிஸ், இராணுவத்தின் கொடுமைகளைச் சுட்டிக் காட்டியும், அவசரகாலச் சட்டத்தை எடுத்துக் காட்டியும், 'இதெல்லாம் இவர்களால்தானே' என்றும் சிலர் பழிக்கின்றனர்.

இப்படியெல்லாம் பழிப்பவாகளுக்கும், அடக்குமுறையை நம்பி வாழும் அரசாங்கத்துக்கும் காந்தியடிகள் சிறந்த பதிலளித்திருக்கிறார். அவர் தனது "யங் இந்தியா" என்ற பத்திரிகையின் 9-3-1921 இதழில் எழுதிய ஒரு கட்டுரை, விடுதலை விரும்பிகளான எமக்கெல்லாம் மிகுந்த ஆறுதலையும், தொடர்ந்து போராட வேண்டும் என்ற உறுதியையும் அளிக்கிறது. அவர் கூறுவதாவது:

"ஒரு நல்ல இயக்கமானது அலட்சியம், கேலி, பழிச் சொல், அடக்குமுறை, மதிப்பு ஆகிய ஐந்து கட்டங்களினூடாக வளர வேண்டும். நம்மைப்பற்றிச் சில மாதங்கள் அலட்சியம் இருந்தது. திரித்துக் கூறுதல் உள்ளிட்ட இழிவு படுத்தும் முறை நாள் தோறும் நம் மீது வீசப்பட்டபடி இருக்கிறது. மாகாணக் கவர்னர்களும் ஒத்துழையாமைக்கு எதிராக உள்ள பத்திரிகைகளும் அவர்களால் முடிந்தவரை நமது இயக்கத்தின் மீது பழியுரைகளைச் சுமத்தியுள்ளார்கள். கடைசியாக அடக்குமுறை வருகிறது; இப்பொழுது அதிகக் கடுமையில்லாத முறையில் அது வருகிறது. கடுமையானதாக அடக்குமுறை இருந்தாலும் இல்லாவிட்டாலும், அந்த அடக்குமுறையை மீறி நிலை பெறுகிற இயக்கம்தான் மதிப்பு எய்துகிறது. மதிப்பு என்பது வெற்றி என்பதன் மற்றொரு உருவமே! உள்ளபடி பார்த்தால், வரப்போகும் வெற்றிக்கு இந்த அடக்குமுறையை ஒரு நல்ல முன்னறிவிப்பாக எடுத்துக் கொள்ளலாம்."

காந்தி அடிகள் ஒரு விடுதலை இயக்கம் அலட்சியம், கேலி, பழிச்சொல், அடக்குமுறை ஆகிய கட்டங்களைக் கடந்து மதிப்பென்ற வெற்றியை அடையும் என்றார். உலகில் தோன்றிய எந்த விடுதலை இயக்கமும் அவர் சொன்னபடியே இதுவரை தோல்வியைக் கண்டதில்லை! அலட்சியத்தை அனுபவித்து, கேலியைக் கேட்டு, பழிச் சொல்லைப் பார்க்காது, அடக்குமுறைக்கு அஞ்சாது இறுதியில் வெற்றியைத் தான்கண்டிருக்கிறது. மகாத்மாவின் காங்கிரஸ் இயக்கமும் கூட இப்படித்தான் வெற்றியைப் பெற்றது.

இன்று அடக்குமுறையை அனுபவித்து வரும் தமிழ் மக்களது விடுதலை இயக்கமும் காந்திஜி கூறும் கட்டங்களைக் கடந்தே வந்திருக்கிறது. அலட்சியம், கேலி, பழிச் சொல், அடக்குமுறைகள் இயக்கம் தோன்றிய காலம்முதல் இன்றுவரை அடிக்கடி மாறியும், ஒன்றாகவும், தொடர்ந்தும் வந்திருக்கின்றன. எடுத்துக்காட்டாக இன்று அடக்குமுறையை அநுபவிக்கும் தமிழரசுக் கட்சி அதே நேரத்தில் இன்னொரு பக்கத்தால் கேலி, பழிச் சொல், போன்றவற்றையும் அநுபவித்தே வருகிறது.

கட்சி தோன்றிய காலத்தில் "பொன்னம்பலத்தை எதிர்த்து ஒருவர் வாழ முடியுமா? காங்கிரசை எதிர்த்து ஒரு கட்சி நிலைக்க முடியுமா?" என்றனர் பலர். அத்துடன் கட்சி பற்றியும் அதன் தலைவர்களைப் பற்றியும் செய்தித் தாள்கள் அதிகமாக ஒன்றும் எழுதாதிருந்தன. இது முதலாவது கட்டமாகிய அலட்சியம்!

இக்கட்டத்தைக் கட்சி தாண்டியதும் "தமிழரசு கிடைத்தால் வடக்குகிழக்கு மாகாணங்களுக்குள்ளே யே அடங்கிக் கிடந்து பனங்கொட்டையைத்தான் சுவைக்க வேண்டும். செல்வநாயகம் பிரதமராக் வர ஆசைப்படுகிறார். செல்வநாயகத்துக்குப் பின் தமிழரசுக் கட்சி இருக்கமாட்டாது" என்று மக்கள் மத்தியில் பேசப்பட்டது. இது இரண்டாவது கட்டமாகிய கேலி!

மூன்றாவதாக, ஈழநாட்டைப் பிரித்து இந்தியாவிலுள்ள தமிழ்ப் பகுதியுடன் இணைக்கப் போகின்றனர், 'நாம் தமிழர்' இயக்கத்துடன் தொடர்பு கொண்டிருக்கின்றனர்; 'தி. மு. க' வுடன் உறவு கொண்டிருக்கின்றனர்; கள்ளத்தோணிகளை இறக்குமதி செய்கிறார்கள்" என்றனர். இவை பெரும்பாலும் சிங்கள மக்களாலும் அவர்களது தலைவர்களா

(13-ம் பக்கம் பார்க்க)

# சொகுசும் ஆபத்தும் நிறைந்த பரசீவிகளின் வாழ்க்கை முறை

## திடமிக்க நுண்மங்களின் தீவிர வாழ்க்கைப் போராட்டம்

ஆமீபா (Amoeba), பிலாஸ்மோடியம் (Plasmodium) ஆகியவை பரசீவிகள் (Parasites) பிராணிவகையில் ஈரல் புழு, குடற் பாம்பு ஆகியவையும் தாவர வகையில் குருவிச்சை போன்றவையும் பரசீவிகளுக்கு உதாரணம். உணவு போன்ற பல தேவைகளுக்கு இவை அடுத்த ஒரு 'விருந்தாளி'யில் (Host) தங்கியிருப்பதால் இவற்றின் வாழ்க்கை மிகச் சொகுசானது; ஆபத்தும் நிறைந்தது. 'விருந்தாளி' யின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் பரசீவிகளின் வாழ்க்கையும் முடிவுற வேண்டும்; பரசீவிகளின் இனமும் அழிந்துவிட வேண்டும். எனவே பரசீவிகள் தம் உயிரையும் பாதுகாத்து தமது இனத்தையும் வாழ்விப்பதற்கு அசாதாரண வழிவகைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றன. கண்ணுக்கே புலப்படாத இந்த நுண்மங்கள் தம்மையும் பேணித் தம் இனத்தையும் பாதுகாக்க மேற்கொள்ளும் பல வழித் தந்திரோபாயங்களும் இந் நுண்மயங்களின் அசாத்திய திராணியும், அழிவை எதிர்த்துப் போராடும் எந்த இனத்திற்கும் கண்களைத் திறந்து நம்பிக்கை ஒளி வீசுவதாக அமையும்.

இந்த வல்லவர்களுள் மிகக் குறைந்த நிலையிலிருக்கும் ஒரு பரசீவியே அமீபா. செயலின்மைக்கும் சோம்பலுக்கும் உதாரணமாக வர்ணிக்கப்படும் அப்பாவி! பழகிய கண்களுக்கு ஒரு சிறு துளியாகத் தெரியும் இப்பிராணியைப் பூதக் கண்ணாடியின் கீழ் கவனித்தால் இதன் உடம்பில் ஒரு பகுதி சிறிது தடிப்பாக இருப்பதைக் காணலாம். இப்பகுதி (அமீபா என்ற உயிரணுவின்) கரு (அணுக்கரு) என்று அழைக்கப்படும். அணுக்கருவைச் (Nucleus) சுற்றி சைட்டோபிலாசம் (Cytoplasm) என்ற திரவ பதார்த்தம் உண்டு. இத்திரவ பதார்த்தத்தைச் சுற்றிவர ஒரு நுண்ணிய சருமம் இருக்கிறது. வடித்து ஆறவைத்த கஞ்சியின் மேற்பரப்பில் படியும் ஆடை போன்றது அமீபாவின் இச் சருமம். இவர்தான் அமீபா!

### அமீபாவின் பரிணாமம்

ஓர் அணுக்கரு, அதைச் சூழ்ந்திருக்கும் சைட்டோபிளாசம், சைட்டோபிலாசத்தைச் சுற்றியிருக்கும் சருமம்—இத்தனையும் கொண்ட ஓர் உயிர் அணுவை ஒரு செல் (Cell) என்று அழைக்கிறார்கள். அமீபா என்ற உயிரணு ஓர் ஒரு-செல்-பிராணி.

**செ. குமாரசாமி**

தாவரத்திலும் சரி, பிராணி வர்க்கத்திலும் சரி எங்கே உயிர்த்துடிப்பு இருக்கிறதோ அங்கே குறைந்தது ஒரு செல் இல்லாமலிருக்க முடியாது. இந்த ஒரு செல் அமீபாவே உருவத்திலும் தன்மையிலும் பல்வேறு சிக்கலான மாற்றங்களுக்கு ஊடாக, பல கோடி வருஷப் பரிணாமத்தின் மூலம், பிராணி வர்க்கத்தின் சிகரத்திலிருக்கும் மனித உடம்பை எமக்கு அளித்திருக்கிறது. எமது உடம்பிலிருந்து (அல்லது உயிர் உள்ள எந்த வஸ்துவிலிருந்தாலும் சரி) ஒரு சிறு துண்டை துல்லியமான அளவில் வெட்டி எடுத்துப் பூதக் கண்ணாடியின் கீழ் வைத்துக் கவனத்தால் தேனீர்க் கூட்டின் அறைகள் போல ஆயிரமாயிரம் அறைகளை நாம் காணமுடியும். இவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு செல்லாகும். அமீபா என்ற ஒரு—செல்—பிராணியின் உடம்பில் நிகழும் அடிப்படை உயிரோட்ட நிகழ்ச்சிகள் அனைத்தும் மனித உடலின் ஒவ்வொரு செல்லிலும் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றன. சருமம் தசை, இருதயம், இரத்தம், குடல், எலும்பு ஆகிய உடலின் எந்தப் பகுதியும் இந்தச் செல்களினாலேதான் ஆக்கப்பட்டிருக்கின்றது. அவ்வவ்வுறுப்புகளின் தேவைக்கேற்ப ஆங்காங்கே உள்ள செல்கள் (பரிணாமத்தின் மூலம்) விசேஷ தன்மைகள் பெற்றுவிட்டன. அபரிமிதமான சிந்தனைகளின் இருப்பிடமான மனித மூளையும் அமீபா என்ற நிலையிலிருந்து வளர்ச்சி பெற்ற ஒரு நம்பிக்கையற்ற செல் தொகுப்பேயன்றி வேறல்ல!

### வேகம் மிகுத்த படையெடுப்பு

அமீபாவின் இனப்பெருக்க முறை சுலபமானது. ஆரம்பத்தல் சைட்டோபிலாசத்துள்ளிருக்கும் அணுக்கரு இரண்டாகப் பிளக்கின்றது. பிளந்த இரண்டு துண்டுகளும் செல்லின் இரு முனைகளுக்குப் போகின்றன. இடையிலுள்ள சைட்டோபிலாசம் இந்த இரண்டு துண்டுகளையும் சுற்றிக் குவிகிறது. செல்லின் இரு முனைகளிலும் சைட்டோபிலாசம் போய்க் குவிவதினால் நடுப்பகுதியில் சைட்டோபிலாசம் குறைந்து குறைந்து போய், ஈற்றில் ஒன்றிலிருந்து ஒன்று விடுபட்ட இரண்டு துகள்கள் தோன்றிவிடுகின்றன. இவை இப்பொழுது இரண்டு அமீபாக் குஞ்சுகள்!

இவ்வாறு ஒரு தாய் அமீபா இரு துகள்களாகப் பிளந்து இரண்டு குஞ்சுகளை உற்பத்தி செய்வது இரு—துகள்—பெருக்க முறை எனப்படும். நோயை வருவிக்கும் கிருமிகளின் உலகத்தில் இரு—துகள்—பெருக்க முறை வழக்கமான ஒரு நிகழ்ச்சி. பூரண வளர்ச்சி பெற்று இனப்பெருக்க நிலைக்கு ஆயத்தமாக ஒரு கிருமிக்குத் தேவையான நேரம் 15 நிமிஷங்கள் மாத்திரம் தான்! தன்னந்தனியாக ஒரேயொரு கிருமி மனித உடலுக்குள் நுழைந்தால் 15 நிமிஷங்களில் இரண்டு கிருமிகளாகிவிடும்;

(13—ம் பக்கம் பார்க்க)

## பலாத்காரத்தால் தடைசெய்யப்பட்ட போராட்டம் தோல்வியா?

சென்ற வருடம் தமிழரசுக் கட்சியின் தலைமையின் கீழ் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் தமிழ் பேசும் மக்களின் மாபெரும் வெற்றி, தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைச் சிங்கள அரசாங்கத்திற்கும் உலகிற்கும் எடுத்துக் காட்டியது. ஜாதி மத வேற்றுமையும், ஆண், பெண், சிறுவர், சிறுமியர் என்ற பாகுபாடும் இன்றிப் பல மாதங்கள் தொடர்ந்து வெற்றி நடை போட்ட போராட்டம் பலாத்காரமாக ஆயுத பலத்தால் தடை செய்யப்பட்டது. இதைத் தோல்வி என்று கூற முடியாது. அரசியல் சந்தர்ப்பவாதிகள் இதற்குத் தவறான கருத்துப்பட பேசி மக்களை ஏமாற்றப் பார்க்கின்றனர். தமிழரசுக் கட்சியின் சத்தியாக்கிரகப் போராட்டம் படு தோல்வியென்றும், இனிமேலும் தமிழ் பேசும் மக்கள் அதை நம்பியிருப்பதில் பயனில்லையென்றும், இழந்த உரிமைகளைத் தமிழரசுக் கட்சியினால் பெற்றுத் தர முடியாதென்றும் பிரச்சாரம் செய்கின்றனர்.

தமிழரசுக் கட்சியின் நடவடிக்கைகள் அவசரகால சட்டத்தின் கீழ் தடை செய்யப்படாமலிருந்தால் இன்று நமது உரிமைகள் அனைத்தும் கிடைத்திருக்கும். தமிழரசுக் கட்சியில்லாத மற்றய கட்சிகளின் தலைவர்கள் விடுக்கும் அறிக்கைகளால் தமிழ் பேசும் மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. தமிழரசுக் கட்சியின் சக்தியைக் கண்டு சிங்கள அரசாங்கம் நடுக்கங்கண்டுள்ளது. எனவே இதைச் சின்னாபின்னமாக்க எட்டப்பர்கள் வரிசையில் வந்த தமிழ்த் தலைவர்களைப் பயன் படுத்த அரசாங்கம் முயற்சிக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் நாம் நமக்குள்ளே ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டும். தொடர்ந்து நடைபெறவிருக்கும் தமிழ்ப் போராட்டங்களில் தமிழரசுக் கட்சியுடன் ஒத்துழைத்து தமிழன்னையை அரியணையில் ஏற்றுவோமாக!

தமிழ் மறபு.
கம்பளை.


நம்பிக்கையான

நைலோன்



வலைகளுக்கும், நூல்களுக்கும்

சேகரம் அன் சன்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 693
தந்தி: சேகரன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் கலைப் பகுதி

# ஆடல்பாடல்காட்சி

சினிமா உலக வண்டவாளங்கள்:

# டைரக்டர்கள் படும் பாடு....

## நடிகர்களுக்கே மவுசு அதிகம்!

ராஜா சாண்டோ தமிழ் திரைப்படத் துறையில் அந்நாளில் முன்னணியில் திகழ்ந்தவர். தமிழ் திரைப்படம் இன்று சிறப்புற வளர்ந்து செழிப்பாகி இருப்பதற்கு மூல புருடர் அவரே என்று குறிப்பிட்டால் மிகையாகாது. திரைப்பட வரலாற்றின் ஆரம்ப காலத்தில் நடிகர் நடிகைகளுக்கு 'டைரக்டர்' என்ற பெயரை உச்சரிக்கவே நடுக்கம் ஏற்படடுவிடும். நடிப்புச் சீராக அமையா விட்டால், சம்பந்தப்பட்ட நடிகருக்கோ நடிகைக்கோ சவுக்கால் அடிக்கவும் ராஜா சாண்டோ தயங்குவதில்லை. நடிகர்களைப் பார்க்கிலும் அந்த நாட்களில் டைரக்டருக்கே அதிக மரியாதை.

கால மாற்றத்தினுல் சினிமா உலக நிலைகளும் மாறிவிட்டன. இந் நாட்களில் டைரக்டர்களைப் பார்க்கிலும் நடிகர்களுக்கும் நடிகைகளுக்குமே மதிப்பேறிவிட்டது. கதைக்கேற்ற சிறந்த கருத்துக்களை வெளிக் காட்டக்கூடிய நிகழ்ச்சிகளை டைரக்டர் தனது கற்பனையில் உருவாக்கி வைத்திருப்பார். ஆனுல் படப்பிடிப்பு வேளையில், அந்தக் கருத்துக்கு மாறுபட்ட தொனியில் நடிகரோ, நடிகையோ தங்கள் இஷ்டப்படியே செய்து விடுவர். தயாரிப்பாளர்களோ தாங்கள் ஒப்பந்தம் செய்துள்ள நடிகர்களையோ நடிகைகளையோ பகைத்துக் கொள்ள விரும்புவதில்லை. டைரக்டரைப் பொறுத்த வரையில்-அவருக்குமதிப்பே இருக்காது.

அண்மையில் தமிழ்நாட்டில் வெளியாகிய படங்களில், முக்கால் பகுதிப் படத்தை ஒரு டைரக்டர் கவனித்திருப்பார். இடையில் நடிகர்—டைரக்டர் லடாய் ஏற்பட்டு, டைரக்டர் விலக்கப்பட்டு, புது டைரக்டர் ஏற்பாடு செய்யப்பட்டு விடுவார். இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளினுல் மனம் நொந்து சினிமா உலகிற்கே முழுக்குப்போடும் டைரக்டர்கள் நாளுக்கு நாள் கூடிக்கொண்டே வருகின்றனர்.

### மேலுடைக்கு மட்டும் ரூ. 4000

சியாமளா ஸ்டூடியோவில் அன்று பிரமாண்டமான மாளிகை உருவாக்கப்பட்டிருந்தது. மணி மாலை 6 இருக்கலாம். அன்றையப் படப் பிடிப்புக்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டிருந்தன. படப்பிடிப்பில் கலந்து கொள்ள வந்த முக்கியமான நடிகர் ஒருவருக்கு, முக அலங்காரம் மட்டும் செய்யப்பட்டிருந்தது. அவர் பேச வேண்டிய வசனங்களை வசனகர்த்தா விளக்கிக் கொண்டிருந்தார். டைரக்டரும் காட்சி முறைகளை விளக்கினுர். நடிகர் வசனங்களில் எக்கச்சக்கமான (அவசியமற்ற) திருத்தங்களைச் சொல்லி முடித்து விட்டு, டைரக்டருக்கும் சில கட்டளைகள் பிறப்பித்துவிட்டு, உடைகளை அணியப் புறப்பட்டார். டைரக்டராகவும், ஒளிப்பதிவாளராகவும் கடமையாற்றியவர் அனுபவம் வாய்ந்த, அமைதியான ஒருவரே!

தயாரிப்பாளர், படப்பிடிப்பைக் காட்டுவதற்காகத் தனது குழந்தைகளை

### ஸ்டூடியோவில்

அழைத்து வந்திருந்தார். வேட மிட்டுக் கொண்டுவந்த பிரபல நடிகரின் உடைகளைத் தயாரிப்பாளர் உன்னிப்பாகக் கவனித்துவிட்டு "இதற்குத்தானு நாலாயிரம் ரூபாய்" என்று மூக்கின் மேல் விரலை வைத்துக் கேட்டார். (நடிகர் அணிந்திருந்த மேல் உடைக்கு மட்டும் ரூ. 4000 செலவாகியதாம்.)

### 'மூட்' சரியில்லை

'நடிகரின் கழுத்தை அலங்கரிக்கக் கண்டசரம் ஒன்று இல்லையா?' என்று டைரக்டர் கேட்டார். கண்டசரம் ஒன்று கொண்டுவரச் சென்றவர், ஒரு சிறு பெட்டியைக் கொண்டுவந்தார் கண்ணுடி ஒன்றை ஏந்திக்கொண்டு தன் கழுத்துக்கு அழகைத் தரவல்ல அணியைவைத்து அழகு பார்த்தார் நடிகர். ஒன்றும் எடுபடவில்லை.

"ஏம்பா இன்று எனக்கு 'மூடே' சரியில்லை......இன்று 'ஷூட்டிங்'கை 'போஸ்ட்போன்' பண்ணுங்க. அடுத்த மாசம் இரண்டாம் தேதிலேருந்து எட்டாந் தேதிவரைக்கும் நான் உங்கபடத்துக்கே 'டைம்' தர்ரேன்" என்ருர். அவ்வளவுதான் அதற்கு மறுத்துப் பேச யாருக்குத் தான் தைரியம் வரும்.

இந் நிகழ்ச்சி நடைபெற்று சுமார் இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. ஆனுல் இதுவரை சம்பந்தப்பட்ட படம் உருவானதாகவே தெரியவில்லை.



'வைஜயந்தி மாலா' படப்பிடிப்பின் போது வாஹினி ஸ்டுடியோவில் பிடிபட்டார்கள் இவர்கள். இடமிருந்து வலம்:- கதாசிரியர் முகவை இராஜமாணிக்கம், மனேகர், மாலினி, சீதாலட்சுமி, எம். என். ராஜம், டி. ஆர். மகாலிங்கம், டைரக்டர் சுந்தர் ராவ் நாட்கார்ணி.

## பாலசுந்தரி கனகசபையின் பரதநாட்டியம்

லயனல் வென்ட் ஞாபகார்த்த கலாநிலைய நிதிக்காக குமாரி பாலசுந்தரி கனகசபையின் பரதநாட்டிய நிகழ்ச்சி 27-5-62 ஞாயிற்றுக்கிழமை லையனல் வென்ட் தியெட்டரில் நடைபெறுகின்றது.

குமாரி பாலசுந்தரி சென்னை கலாட்சேத்திர நாட்டியாலயத்தில் விசேட பயிற்சி பெற்ற மாணவிகளுள் ஒருவராவார். கடந்த வருட முடிவில் கலாட்சேத்திர வெள்ளிவிழாவின்போது இலங்கையிலிருந்து விசேடமாக நடனமாட சென்னைக்கு அழைக்கப்பட்டார். கலாட்சேத்திர நாட்டியாலயத் தலைவி திருமதி. ருக்மணிதேவியின் நன்மதிப்பைப்பெற்றவர் குமாரி பாலசுந்தரி.

கொழும்பில் இதற்குமுன்னர் ஒரு முறை அநேக ரசிகர்களின் முன்னிலையில் நடனமாடி, பாராட்டுக்களைப் பெற்ற குமாரி பாலசுந்தரி, மீண்டும் ஒருமுறை கலைவிருந்தளிக்க முன்வந்துள்ளார். ரசிகர்கள் சந்தர்ப்பத்தை நழுவவிட மாட்டார்கள் என்று எண்ணுகிருேம்.

## கல்யாண்குமார், தேவிகாவுக்கு அடிக்கிறதுயோகம்

"நெஞ்சில் ஓர் ஆலயம்" படம் வெளியாகியதும் அதில் நடித்த கல்யாண்குமார், தேவிகா, முத்துராமன் ஆகியோருக்கு ஒப்பந்தங்கள் பெருகிவருகின்றன. கல்யாண்குமார் இருபதுக்கு மேற்பட்ட படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். பாதிக்குமேல் தேவிகாவுடன் ஜோடிசேர்ந்து நடிக்கின்றுர்.



"அல்லிக் குளத்தினிலே நடன வல்லியை நான் கண்டெடுத்தேன்" என்று ஜெமினி கணேசன் பாட ஆரம்பித்ததும், 'தண்ணிருள் ஆட முடியவில்லையே' என்று கமலா தலை குனிகிருர் போலும்

—படம்: கொஞ்சும் சலங்கை,

கவிஞர் கண்ணதாசன் தனது மனைவியின் பெயரில் ஆரம்பித்துள்ள தயாரிப்புக்கு 'விசாலாட்சி புரொடக்ஷன்ஸ்' என்று பெயரிட்டுள்ளார். படத்துக்கு விசித்திரமான பெயரிட்டுள்ளார் "ஆயிரம் வாசல் இதயம்" என்பதுதான் பெயராகும்.

இப்படத்தில் தேவிகா ஜெமினியுடன் ஜோடிசேரவிருக்கின்ருர். ரா. கி. ரங்கராஜன் கதை அமைத்துள்ளார். வசனத்தையும் பாடல்களையும் கவிஞரே எழுதுகின்ருர்.

# 'சாமியாராகப்போகிறேன்' சரோஜாதேவி அறிவிப்பு

—————0—————

## ஆசைக்கு அணைபோட்டதால் வாழ்க்கையில் வெறுப்பு

லட்சக்கணக்கான உள்ளங்களைத் தன் நடிப்பால் கவர்ந்து இன்று புகழ் ஏணியின் உச்சப் படியில் காலடி எடுத்து வைத்துக் கொண்டுள்ள சரோஜாதேவிக்கு இப்போ வாழ்க்கையில் வெறுப்புத்தட்ட ஆரம்பித்துவிட்டது. இன்னும் இரண்டு வருடங்களில் காவியுடை தரித்து, கையில் கமண்டலமேந்தி சந்நியாசம் வாங்கிக்கொள்ள ஆசைப் படுகிருர்.

வாழ்க்கையைச் சுவைத்து அனுபவங்களைப் பெற்று விட்ட வயோதிபர்களுக்குத் தான் துறவு கொள்ளும்எண்ணம் ஏற்படும். தவிர, அழகற்ற குரூபிகளுக்கு, வாழ்க்கையைச் சுவைக்க முடியாதவர்களுக்கு, அங்கவீனர்களுக்குத் துறவறத்தில் வெறுப்பு ஏற்படலாம். ஆனுல் சரோஜா தேவிக்குத் துறவறத்தில் ஆசை ஏற்படுவது ஆச்சரியப்பட வேண்டிய விடயம்தான்.

சில படங்களில் சிறு சிறு பாகங்களில் தோன்றி, நடன மாதர் குழாமில் தவழ்ந்து தத்தித்தத்தி முன்னணிக்கு வந்து விட்டவர் சரோஜா தேவி! 'பார்த்திபன் கனவு' படத்தில் சரோஜா தேவியைப் பார்த்தவர்கள் பரிதாபப்பட்டிருப்பார்கள். அப் படத்தில் வைஜயந்திமாலாவின் தோழியாக நடிப்பதற்குப் பல வருடங்களுக்கு முன்னர் சரோஜாதேவி ஒப்பந்தம் பண்ணப்பட்டு, நடித்தார். அப்போது அந்தத் தோழிபாகத்துக்காகச்சரோஜாதேவி பெற்றுக் கொண்டது ரூ. 300/- மட்டும்தான். எம். ஜி. ஆர். மயங்கினுர்

'தங்கமலை ரகசியத்தில்' சிவாஜி கணேசனின் அழகையும் இளமையையும் அபகரிக்க ஏவப்படும் நடன மாதர்களிருவரில் ஒருவராகத் தோன்றிய சரோஜா தேவியின் தோற்றத்திலும், முகவெட்டுகளிலும், எம். ஜி. ஆர். மயங்கினுர். 'தங்கமலை இரகசியம் படத்தின் பிரத்தியேகக் காட்சியைப் பார்த்த மாத்திரத்திலேயே எம்.ஜி.ஆர்.தனது 'நாடோடி மன்ன'னில் சரோஜாதேவியைத் தூக்கிப் போட்டார். அத்தோடு ஏ.எல்.எஸ். தயாரிப்பாளர்களும் தங்கள் 'திருடாதே'யில் கதாநாயகி வேடம் கொடுத்தனர். சரோஜாதேவி முதல் முதலில் கதாநாயகியாக நடித்து வெளியாகிய படம் டத்மா பிலிம்சாரின் 'மனமுள்ளமறுதாரம்' தான்.

'கல்யாணப் பரிசு' வெளியாகியது. சரோஜா தேவியின் யோகமும் வாயுவேகத்தில் முன்னேற்றம் கொடுத்தது. மளமளவென்று புகழேணியின் உச்சியில் ஏறிவிட்டார். 'கல்யாணப் பரிசு'க்குப் பின்னர் வெளியாகிய ஒவ்வொரு படமும் சரோஜா தேவிக்கு ஒவ்வொரு படியாகவே அமைத்துக் கொடுத்தது.

### திருஷ்டி ஏற்படக்கூடாதே!

அதிகமாகப் புகழுக்குப் பாத்திரமாகி விட்டவர்களுக்கும் வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டுவிடும் போலும். படிப்படியாகமுன்னேறி, லட்சக்கணக்கான இளம் உள்ளங்களின் இதய பீடத்தைக் கவர்ந்து விட்ட சரோஜா தேவி, வாழ்க்கையில் கசப்புற்று துறவியாக எனயித்துவிட்டது, விந்தைநிலும் விந்தைதான்.

சரோவுக்கு எந்தவிதமான ஆபத்துக்களும் வந்து விடக்கூடாதே! நோய் நொடிகள் ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதுதான் அவரது தயாரின இடையருத பிரார்த்தனை. தன் மகளுக்குக் கண்ணூறு ஏற்படாமலிருக்கும்



உடல் குளிரக் குளித்தாலும் உள்ளம் குளிரவில்லையே!... "ஆடிப்பெருக்"கில் சரோஜாதேவி...

பொருட்டு படப்பிடிப்புகளுக்குச் செல்லும்போதும், வீடு திரும்பும்போதும் சரோஜாதேவியின் தாயார், ஆராத்தி எடுத்து திருஷ்டி கழிப்பார்கள்.

சரோஜா தேவியின்உடலை அடிக்கடி பரிசோதிக்க குடும்ப டாக்டர் ஒருவருமுள்ளார் அந்த டாக்டர் சரோஜாதேவியின் சிறிய சிறிய ஆசைகளுக்கே கட்டுப்பாடு விதிக்க ஆரம்பித்ததினுல் தான் சரோஜா தேவிக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

### ஆசைப்படி நடக்க முடியவில்லை

'கட்லெட்' என்ருல் சரோஜாதேவிக்கு உயிர். கட்லெட் அதிகம் சாப்பிட்டால் உடல் பெருத்துவிடும் என்று சரோஜாதேவியின் டாக்டர் கூறிவிட்டார். சரோஜாதேவிக்கு அழுகையே வந்து விடும் போலிருந்தது.

தான் விரும்பியபடி வெளியில் செல்ல முடிவதில்லை. தெருக்களில் நடமாடவோ, கடைகளில் சென்று தனக்கு விரும்பியபடி துணிமணிகளைப் பார்த்துத் தெரிவு செய்து வாங்கவோ,இஷ்டப்பட்டபடி சாப்பிடவோ முடியாதிருப்பதும் ஒருவாழ்வா? "இத்தனை செல்வங்களிருந்துமென்ன? ஆசைப்படி நடக்க முடியவில்லையே" என்று சரோஜாதேவி அங்கலாய்த்துக் கொண்டார்.

அன்று படப்பிடிப்பிலீடுபட்டிருந்துவிட்டு, பசியெடுத்ததும், தனது தயார் அனுப்பி வைத்திருந்த சாப்பாட்டு 'காரிய'ரைத் திறந்து பார்த்தார் சரோஜாதேவி. அங்கே வெறும் தயிர் சாதம் தான் காட்சியளித்தது. எப்போதும் தன் உணவில் சேர்த்துக்கொள்ளப்படும் தனது இச்சைப்பொருளான 'கட்லெட்' அங்கேயில்லை.

சரோஜாதேவி அன்றே கூறிவிட்டார் (டைரக்டர் உட்பட சில பிரமுகர்களிடம்) தான் இன்னும் இரண்டு வருடங்களில் பெண் சாமியாராகப் போகப்போகிறேன், என்று!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திக்கு வந்தவை!

—காலகண்டன்—

### யாழ்ப்பாணத்தில் சிங்கள வகுப்புகள்

### மாணவர் பட்டியல் எம்மிடம் உண்டு

யாழ்ப்பாணம் ஆரிய குளத்தடியிலிருக்கும் புத்த கோயிலடிக்குப் போயிருந்தேன். நகர எல்லைக்குள் அதிகமாகப் பழக்கப்படாத சில முகங்கள் தென்பட்டன. எண்ணிக்கை மொத்தம் 68. 60 பேர் ஆண்கள். எட்டுப் பேர் பெண்கள். இவர்கள் எவரும் வெசாக் கொண்டாட்டம் பார்க்க வந்தவர்களாகத் தெரியவில்லை. எதற்காக வந்துள்ளார்கள்?

ஓஹோ!... இவர்கள் சிங்களம் படிக்கவந்தவர்கள். இப்பொழுதுதான் தெரிகிறது. அனேகமாக எல்லோரும் எஸ். எஸ். ஸி. சித்தியெய்திவிட்டு உத்தியோகம் தேடுபவர்கள். பாவம், அரசாங்கத்தின் ஆசை வார்த்தைகளுக்கு ஏமாந்துவிட்டவர்கள். என்ன செய்வது! வயிற்றுப் பிழைப்புக்காக மானத்தையும் விற்பதற்கு எத்தனையோபேர் நம் மத்தியில் துணிந்துவிட்ட பிறகு, சிங்களம் படிப்பதுமட்டும் என்ன ஒரு பெரிய மலை போன்ற காரியமா?

யாழ்ப்பாணத்தில் சிங்களம் படிப்பிக்கும் முகாங்கள் இரண்டு உள்ளன, ஒன்று ஆரிய குளத்தடி புத்த விகாரை. இதற்கான சேர்வுப்பணம் ரூ. 4-00 மாதா மாதம் ரூ 8-00 கட்டணம் செலுத்த வேண்டும்.

நாவலர் ரோட்டிலும் சிங்களம் படிக்க மாணவர்களும் மாணவிகளும் இடம் ஒன்று கண்டுபிடித்துள்ளதாகவும் நமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. அதுமட்டுமல்ல வீடுகளில் வைத்துத் தங்கள் சிறுர்களுக்குச் சிங்களம் கற்பிக்கவும் சிலர் முயற்சிகள் செய்து, ஆசிரியர்கள் தேடும் படலத்தில் இறங்கியுள்ளனர்.

முன்னே குறிப்பிட்ட புத்த விகாரை மாணவர்களின் பெயர், விலாசப் பட்டியல்கள் எம் கைவசம் கிடைத்துள்ளன. நிலைமையை உத்தேசித்து அந்தத் திருப்பெயர்கள் இந்தப் பகுதியில் அம்பலப்படுத்தப்படலாம். நமது அந்தரங்க ஒற்றர் அப்பாக்குட்டி அம்மான் சேகரித்த செய்தியில், சிங்களம் படிக்க எத்தனிக்கும் மாணவர்களிலும், சில குமாஸ்தாக்களிலும் சாடையான 'முற்போக்கு' வாடை வீசுவதாகவும் கூறப்பட்டுள்ளது.

### பௌத்த சிங்களவருக்கே உத்தியோகம்

பௌத்த சிங்களவராக தம்மை மாற்றிக் கொள்ளாத எவருக்கும் எந்த விதமான உத்தியோகத்தையும் அரசாங்கம் வழங்கப் போவதில்லை என்பதற்கு இதோ ஒரு உதாரணம்.

சப்ரகமுவா மாகாணத்தில் ஒரு நகரத்துக்கு ஒரு எம். ஓ. எச் (M. O. H) பதவி காலியாக விருந்தது. தகுதி வாய்ந்த டாக்டர் ஒருவரைத் தெரிவு செய்து, அவருக்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டது. பயிற்சி முடிவடைந்ததும், நகரசபை ஒரு தீர்மானம் நிறைவேற்றியது. பௌத்த சிங்களவராக இல்லாத எவரையும் சுகாதார அதிகாரியாக நியமிக்க முடியாது என்று அத்தீர்மானத்தில் காணப்பட்டது. என்ன செய்ய முடியும்? பயிற்சி பெற்ற உத்தியோகத்தர் வேறு ஒரு பகுதியில் சாதாரண டாக்டராகக் கடமை ஏற்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்.

### வெளிநாட்டுப் பட்டதாரிகளும் சோமசேகரமும்

வெளிநாடுகளுக்குச் சென்று பட்டம் பெற்று இலங்கை திரும்பிய பல பட்டதாரிகள் திரு. எஸ். யூ. சோமசேகரம் (யாழ்-கல்வி அதிகாரி) அவர்களைப் பேட்டி கண்டார்கள். தாங்கள் வெளிநாடு சென்று ஏராளமான பணம் செலவு செய்து பட்டங்கள் பெற்றுத் திரும்பிவந்தும், சொந்த நாட்டில் உத்தியோகம் கிடைப்பதில்லையே! ஏன்? என்று விசாரித்தார்கள்.

"லண்டனுக்குப் படிக்கச் சென்ற மாணவர்கள், அங்கு சென்ற பிரதமருக்குக் கறுப்புக்கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தார்களல்லவா, அதனால்தான் வெளிநாடு சென்று திரும்பிய மாணவர்களுக்கு உத்தியோகம் கிடைக்கவில்லை" என்று திரு சோமசேகரம் கூறினராம்.

பிரதமர் லண்டன் செல்லு முன்னரே பட்டம் வாங்கிக்கொண்டு வந்துவிட்ட மாணவர்களும் அக் கோஷ்டியிலிருந்தனர் என்பது, நொண்டிச் சாட்டுக் கூறிய திரு. சோமசேகரம் அவர்களுக்குத் தெரியாமல் போனது விந்தையல்லவே!

### மீன் விற்பனையில் ஏட்டிக்குப் போட்டி

மட்டக்களப்புக் கடற்கரையோரங்களில் அதிகமான நல்ல மீன்கள் பிடிபடுவதுண்டு. எனினும் மட்டக்களப்பு மக்களுக்கு, குறிப்பாக நகரத்தில் வாழ்வோருக்கு நல்ல மீன்கள் கிடைப்பதில்லை, விலையும் அதிகம். இடையிலுள்ள தரகர்களின் பேராசைதான் இதற்குக் காரணமென அறிந்த நகர சபையார் வியாபாரிமாரை அணுகி, மீன்களை நிறுத்து விற்கும்படி பன்முறை வேண்டியும் பலன் கிடைக்கவில்லை. ஆகவே கூட்டுறவுச் சங்கத்தின் உதவியுடன் மீன் விற்பனை நிலையமொன்றை ஏற்பாடு செய்தனர். மீன் மலிவான விலையில், நிறுத்து விற்க ஆரம்பித்தார்கள் கூட்டுறவு விற்பனை நிலையத்தார்கள். இரு நாட்களுக்குள் தனிப்பட்ட வியாபாரிகள் தங்கள் போக்குகளை மாற்றிக் கொண்டனர். கூட்டுறவுச் சங்கத்தார் விற்கும் விலையிலும், ஒரு இறுத்தலுக்கு 20, 25 சதம் குறைத்து நிறுத்து விற்பனை செய்ய ஆரம்பித்துவிட்டனர். மீன் விலையில் ஏட்டிக்குப் போட்டி ஏற்பட்டதனால் மீன் தட்டுப்பாடும் நீங்கியது.

### ஆளுக்கொரு தொப்பி

13-5-62ல் வெளியாகிய 'சுதந்திர'னில் 'பூ-அரசி' எழுதிய 'வேண்டாம் இந்த விஷப் பரீட்சை' ஆளுக்கொரு தொப்பியாக அமைந்துவிட்டது. பலர் தங்களுக்காக உருவாக்கப்பட்டதே இந்தத் தொப்பி. என்று எண்ணி வெதும்புகின்றனர்.

# சொகுசும் ஆபத்தும்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

30 நிமிஷங்களுள் நாலு கிருமிகள். இவ்வாறு பெருக்கிக் கொண்டிருக்கும் கிருமிகள் தனியாக ஒன்று மாத்திரமா மனித உடலில் நுழைகிறது? காற்றிலும் நிலத்திலும் நீரிலும் எங்கும் சூழ்ந்திருந்து ஒரே தடவையில் பல்லாயிரக்கணக்கிலல்லவா மனித உடலுக்குள் நுழைகின்றன இவை. எனவே ஒரு நோயைத் தோற்றுவிக்கும் கிருமிகள் மனித உடலில் புகுந்து சுமார் 15 மணித்தியாலங்களில் பல கோடிக்கணக்காகப் பெருகி உடலைனத்தும் பரவிச் செறிந்து விடுகின்றன. இத்துணை வேகப் படையெடுப்பிலிருந்து உடல் எந்த வகையில் தான் தப்பிப் பிழைக்கிறதோ!

### தற்காப்பு நடவடிக்கை

அமீபிக் வயிற்றுழைவைக் கொண்டுவரும் என்ரமீபா ஹிஸ்ரோலிற்றிக்கா என்ற அமீபா இனம், உணவு மூலமாக—வாய்க்கூடாக— மாத்திரமே மனித உடலுக்குள் நுழைகிறது. சிறு குடலைப் போய் அடைந்ததும் குடலின் சுவரை அரித்துப் புண்ணுக்குகிறது. சொகுசான இச் சூழலில் இரு—துகள்—பெருக்க முறை மூலம் நாளுக்கு நாள் தொகையிலும் அதிகரித்துக் கொண்டே போகிறது. மேலும் மேலும் குடற்சுவர் தொடர்ந்து அரிக்கப்படுகிறது. நாசம் இது மாத்திரமல்ல, அரிக்கப்பட்ட புண்களிலிருக்கும் இரத்தத்திலுள்ள செஞ்சிவ அணுக்களை (red-blood-corpuscles) உணவாக விழுங்குகின்றன, தினமும் பெருகிக் கொண்டிருக்கும் இவ் அமீபாக் கிருமிகள். குடலுக்கும் நோயாளிக்கும் ஏற்படும் நஷ்டம் கொஞ்சமல்ல. இந்த நேரத்தில் மெல்லிய காய்ச்சல் இருப்பதுபோல் தோன்றும்; வலிப்பும் உழைவும் தலைகாட்டும், வந்தவர்களுக்குத் தெரியும் இந்த வேதனையின் அருமை!

குடலும் இரத்தமும் சேதப்படும் பொழுது அமீபாவின் செய்கை காரணமாகவே அது உயிர்வாழும் சூழ்நிலையின் சொகுசு மாறிவிடுகிறது; கிடைக்கும் உணவும் அரிதாகி விடுகிறது. சொகுசும் உணவும் மறுக்கப்படவே அமீபா தன் உயிரையும் அதன் மூலம் தன் இனத்தையும் காப்பாற்ற, விரைந்து நடவடிக்கை எடுக்கிறது. அமீபாவின் வாழ்க்கையில் இரு—துகள்—பெருக்கமுறை சாதாரண சூழ்நிலையில் நிகழுவது. ஆனால் சூழ்நிலை பாதகமாகும் பொழுது—அந்தச் சற்றுடலில் குஞ்சுகளைப் பெருக்குவதில் என்ன பயன்? குஞ்சுகளும் உணவில்லாது அழிந்துபோக, இனமுமே மறைந்து ஒன்றுகிவிடுமன்றே! எனவே அமீபா தற்காலிகமான ஓர் உபயத்தை [sic] மேற்கொள்ளுகிறது. சொகுசு வாழ்க்கை நடாத்தும் எல்லா உயிரினங்களும் தம் இனத்தை அழிவிலிருந்து பாதுகாக்கும் பொருட்டு மேற்கொள்ளும் வழி இது!

(தொடரும்)

# யாழ்ப்பாண மாவட்ட...

### சங்கப்பலகை

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

காணப்படுகின்றன. இக் கட்டுரைகளிற் பலவற்றைப் பேராசிரியர்களே மிகவும் தெளிவாகவும், விளக்கமாகவும் வரைந்துள்ளனர். தமிழில் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளிற் பல இலக்கியம் சம்பந்தப்பட்டவையாகவே இருக்கின்றன. கலை, சமயம், சங்கீதம், சிறுகதை இப்படிப் பலதுறைகளைத் தழுவி நிற்கின்றன தமிழ் கட்டுரைகள்.

நாவலர் ஹால் யூனியன் சொஸைட்டியின் வருடாந்த அறிக்கையும், சஞ்சிகை ஆசிரியரின் குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

பொதுவாகக் கூறப்போகின் 'நாவலர்' இதழ் கண்ணுக்கும் கருத்துக்கும் நல்விருந்தாக அமைந்துள்ளது. அடுத்த வருடமும் தொடர்ந்து சிறப்பாக இவ் விதழை வெளியிடுவார்களென எதிர்பார்க்கிறோம்.

### மக்கள் குரல்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

லுமே பேசப்பட்டவைகளாகும். இது பழிச் சொல் வீசப்பட்ட கட்டம்.

இம்மூன்று கட்டங்களையும் தாண்டி இன்று அடக்குமுறை என்ற நாலாவது கட்டத்தைத் தமிழரசுக் கட்சி கண்டு கொண்டிருக்கிறது.

"கடுமையாக அடக்குமுறை இருந்தாலும் இல்லாவிட்டாலும் அந்த அடக்குமுறையை மீறி நிலைபெறுகிற இயக்கம்தான் மதிப்பெய்துகிறது" என்று காந்திஜி சொன்னதை நாம் நனகு உணரவேண்டும்

"வரப்போகும் வெற்றிக்கு இந்த அடக்குமுறையை ஒரு நல்ல முன்னறிவிப்பாக எடுத்துக்கொள்ளலாம்" என்றார் காந்தி அடிகள். அதேபோல் நாமும் இப்பொழுது அநுபவித்து வரும் இந்த அடக்குமுறையை வரப்போகும் வெற்றிக்கு ஒரு நல்ல முன்னறிவிப்பாகக் கொள்ளலாம்.

விடுதலை இயக்கத்தின் மீது அடக்குமுறை வீசப்படுகிறதென்றால் அந்த இயக்கம் வளர்ந்து வருகிறது; இன்னும் வளரும், விடுதலையை எட்டிப்பிடிக்கப் போகிறது; பிடிக்கும் என்பதுதான் அர்த்தம். ஆனால் இதை உணராத அரசாங்கமோ இயக்கத்தை அடக்க, ஒழிக்க அடக்குமுறையை நாடியவண்ணமே இருக்கின்றது.

உலகில் அடக்குமுறையை நம்பிய அரசுகள் இறுதியில் தோல்வியைத்தான் தழுவிக்கொண்டன; விடுதலை இயக்கங்களோ அடக்குமுறைக்கு ஆட்பட்டு ஆட்பட்டு இறுதியில் வெற்றியை அணைத்துக்கொண்டன. இந்த உண்மையை இலங்கையிலும் நாமில்லாவிட்டாலும் நமது சந்ததியினர் காணத்தான் போகிறார்கள்.

பொ. சண்முகநாதன்.
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய்.

### தமிழுக்கு...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் சைவம் வளரும். ஆகவே, தமிழ் மொழியின் வளர்ச்சிக்காக உழைப்பதையே உங்கள் தலையாய கடமையாக மேற்கொள்ளுங்கள். நீங்கள் தமிழுக்குச் செய்யும் பணி சைவத்திற்குச் செய்யும் பணியாக இருக்கட்டும். சைவத்திற்குச் செய்யும் பணி தமிழுக்குச் செய்யும் பணியாகட்டும். தமிழ் வாழட்டும். வள்ளுவம் வளரட்டும்.

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வாசனையே மயக்கத்தையும் சிலவேளை மரணத்தையும் உண்டுபண்ணலாம். இதைத் தெளிப்பவர் இது விஷயத்தில் கண்டிப்பாக இருத்தல் அவசியம். முகமூடி போட்டுக் கொண்டு மருந்து தெளித்தல் நலம்.

ஆள் உயரத்துக்குக் கன்றுகள் வளர்ந்ததும் கெட்டுகளை முறித்தும் தலைப்பை ஒடித்தும் விடல் அவசியம். இலைகள் பெருப்பதற்கும் தரம் சிறப்பதற்கும் இது உதவுகிறது.

நல்ல தரமுடைய இலை மெல்லிய பச்சை நிறமாக இருக்கும். இரண்டடி நீளத்திற்கும் ஒன்றரையடி அகலத்திற்கும் பெரிதாக இருக்கும் இலைகளை ஒடிக்கும் போது ஒரே நாளில் முழுவதையும் ஒடித்தல் கூடாது. இலைகள் முற்ற ஒரு செடியில் 4-5 இலைகளாக ஒடித்தல் வேண்டும். பச்சைப் புகையிலையின் தரத்தைப் பொறுத்தே உலர்த்திய புகையிலையும் தரம் பெறும். ஆகவே இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.

இலை ஒடிப்பு நடைபெறும் நாளுக்கு முதல் நாள் மழை பெய்தால் ஒடிப்பு கண்டிப்பாக நிறுத்தப்படல் வேண்டும். மழையில் புகையிலையில் உள்ள பாணி கழுவப்பட்டால் புகையிலை தரம் குன்றிவிடும்.

### புகையிலைச் சங்கங்கள்

இன்று உலர்த்துலைச் சங்கங்கள் செய்துவருகின்றன. தனி மனிதனால் இவற்றைச் செய்யவே முடியாது. ஆகவே இனிமேலும் சங்கங்களுக்கு ஒப்படைப்பதுதான் சிறந்தது.

புகையிலைச் சங்கங்கள் உலர்த்தப்பட்ட புகையிலையை இருத்தல் 3 ரூபா 20 சதமாக விற்கிறது. செலவு போக சாதாரண விவசாயி ஒரு இருத்தல் பச்சைப் புகையிலைக்குக் கிட்டத்தட்ட இருபது சதம் பெற்றுக்கொள்கிறான்.

ஒரு புகையிலைக் கன்றில் சராசரி முப்பது இருத்தல் புகையிலை எடுக்கலாம். இதன் மூலம் ஒரு கன்றில் ஆறு ரூபாய் வருமானம் கிடைக்கிறது.

இப் புதுமுறை விவசாயச் செய்கைக்குக் கிழக்கு மாகாணத்தில் வேரூன்றினால் பொருளாதார வளம் கட்டாயம் உயரும் என்பது திண்ணம். மாணவர்கள் கூட இதைப் பயிரிட முடியும். அதுமட்டுமல்ல; உலர்த்தலுக்கு நம் தொழிலாளர்களை நியமிக்கப்படுவதனால் வேலையில்லாத் திண்டாட்டமும் குறையும். காலப்போக்கில் இப் புகையிலையைக் கொண்டு சிகரெட் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டும். அப்படியென்றால் தமிழ்ப் பிரதேசத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும். துணிவுடன் புகையிலையையும் பயிரிடுவார்கள்.

### அவுஸ்திரேலியாவில் விருத்தி செய்த புதிய ரக அரிசி

லண்டன், மே 22-அவுஸ்திரேலியா விஞ்ஞானி ஒருவர் ஒருவகை அரிசியை விருத்தி செய்துள்ளார். இவ்வரிசி லண்டனில் முதல்தர வகுப்பைச் சேர்ந்ததாகக் கருதப்படுகிறது.

சாம்ராஜ்ய விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சிக் குழுவின் பொறுப்பாளியாக இருக்கும் அவுஸ்திரேலிய மந்திரி செனட்டர் கோல்டன் டாவினுக்கு அண்மையில் அரிசி ஆராய்ச்சி ஆய்வுகூடத் திறப்பு விழாவில் இப் புதிய ரக அரிசிபற்றித் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அந்த அழகு மங்கை யார்?

மு. இ. பிச்சக்குட்டி, மட்டக்களப்பு

வாழ்வின் மறுமலர்ச்சியைத்தேடி ஓடிஞள் அவள்! கற்பாறை என்று பாராமல் சலிப்பின்றி ஓடிஞள். வஞ்சகர் நிறைந்த இடத்திலேவாழ்தல் தனக்கு ஆபத்தாய் முடியுமென்று எண்ணி மனிதர் நடமாட்டமே இல்லாத கற்களும் முட்களும் நிறைந்த காட்டு வழியே களைப்பின்றி ஓடிஞள்.

ஆம்! அவளுடைய வாழ்வின் மறுமலர்ச்சி மலரத் தொடங்கிவிட்டது. வாழ்வு முழுவதும் அழகுடன் மிளிர வேண்டுமென்ற அவள் ஆசை நிராசையாகிவிடவில்லை. அவ்வளவுதான் அன்றுமுதல் அழகுப்பதுமையாகக்காட்சியளித்தாள் அந்தப்புவனமோகினி. அவளுக்குத்தான் எத்தனை அழகான கண்கள்! அவற்றில்தான் எவ்வளவு ஒளி!! உயிர்கொஞ்சும் அந்த உதடுகளிலேதான் எத்தனை துடிப்பட!! அவைகளின் முறுவலுக்குத்தான் எத்தனை சக்தி! அப்பப்பா!!

அது ஒரு தனிக்காவியம்! அக்காவியத்தின் தலைவியே அவள்தான். கடல்அலைகளைப் போன்ற கூந்தலையுடைய அவள் பலநிற மலர்களைத் தன் கூந்தலில் சூடியிருந்தாள். அருள்முகம் படைத்த அவள் தூய்மையானவெள்ளாடை உடுத்திருந்தாள். பச்சிளங்குழந்தை அழகுநடை போட்டு வருதல்போல் களிநடம்புரிந்தோடும் இவள் செய்கை, சான்போர் மனதைக்கவர்ந்து விடுகிறது. தன்னை ஆழ்ந்து ரசிக்கும் கவிஞனது கண்ணுற்கும், கருத்திற்கும் பல அற்புதங்களைக் காட்டுவதில் கைதேர்ந்தவள். தோழிகளின் கருத்திற்கேற்பத் தேன்குழலி மழலையைப்போல் தித்திக்கும் மதுரகவிபாடுப் இச்சௌந்தரிய மோகினி கலைஞனின் கற்சிலையோ? அன்றித் தெய்வீக உயிரோவியமோ?

ஆமாம். எழில்சொட்டும் காட்சியை அளிக்கின்ற மலைமுகடுகளினூடே தவழ்ந்து செல்லும் இவள் அழகைப் பருகுவதற்கு இந்த இரண்டு கண்களும் போதா. அருணனின் ஆட்சியிலே துள்ளிக் குதிக்கும் இவள் இரவின் தனிமையில் கண்கொட்டாது விழித்துக்கொண்டு ஆழ்ந்த சிந்தனையில் இருப்பாள். மாநிலம்போற்றும் கற்பை அணிகலமாகப் பூண்ட இவளைக்கள்வராலும் கவரமுடியாது எதையும் பொருட்படுத்தாது அவளை அடையத்துணிபவர் சாவைத்தான் முத்தமிட வேண்டும். கண்ணுக்குக் குளிர்ச்சியைத்தரும் இவள் கொடுமைக்காரி என்று கூறிவிடாதீர்கள். விளக்குச்சுடரின் மகத்துவத்தை அறியாது அதனைநாடிச்செல்லும் விட்டில்மடிவது இயல்புதானே!! இதேபோல் அக்களங்கமற்றவளைத்தொடுபவன் மடிவதில் ஆச்சரியமில்லையே!



சாப்பாடுஎன்முல் குழந்தைகளுக்கு விடென்றிருக்கா. வாசலென்றிருக்கா? ஆமாம. பொதுப் பூங்காவொன்றில் பள்ளிச் சிறுமிகள் மாங்கனி சுவைப்பதைத்தான் நீங்கள் மேலே காண்கிறீர்கள்!

உற்ருர், உறவினரின்றி இருக்கும் இவள் சோகத்தின் எல்லையைக்கடந்தால் கொதித்தெழுவது வழக்கம். பித்துப்பிடித்தவள் போல் பயங்கரமான உறுமலுடன் தலைவிரிகோலமாகப் பாய்ந்து செல்வாள். ஆனல் மக்களின் பரிதாபத்தை எண்ணி உடனே கோபம் தணிவாள். இவள் அதிகமாக மாரிகாலங்களில்தான் இப்படி நடந்து கொள்வாள். இயற்கையின் உன்னத சிருஷ்டியான இந்தச் செல்வி தன்னை நாடிவந்த விருந்தினரை நோக்கி உள்ளத்தில் இன்பம் கிடைத்த பூரிப்பில் 'என்னை மறந்துவிடாதீர்கள்' என்று இறுமாப்புடன் கூறிக்கொண்டே அவ்விருந்தினர் மேல் பொல, பொலவென்று பன்னீர் தெளித்து உபசரிப்பாள். ஒப்பற்ற புகழுடன் விளங்கும் அந்த அழகு மங்கை யாரென்று கேட்கிறீர்களா?

ஆம்!

அவள் வேறுயாருமில்லை. சல, சலக்கும் காட்டினூடே அன்னநடைபயின்று மயிலவட்டவான் கிராமத்தை வளைந்தோடும் விரக்கட்டாறு தான்.

# கடலுக்கடியில் வாழும் விசித்திர மீனினம்

அன்ரனி பெர்னண்டோ, கொழும்பு

கடலில் வாழும் மீனினங்கள் யாவையும் நாம் காண்பதரிது. செம்படவர்கள் பிடித்துவரும் மீன்களையும், நமது இல்லங்களில் வளர்க்கப்படும் பலவர்ண வண்ண மீன்களையும் தவிர இன்னும் எண்ணற்ற மீனினங்கள் கடலில் வாழ்கின்றன. கவர்ச்சியுள்ள விசித்திரத் தோற்றங்களையும், குணங்களையும் பல மச்சங்கள் கொண்டுள்ளதாக அமெரிக்க ஜீவவர்க்க ஆராய்ச்சியாளர் பேள் ஏ ஷோல் என்பவர் கண்டுள்ளார்.

நீர் மட்டத்தின்மேல் மணிக்கு முப்பது மைல் வேகத்தில் பறந்து செல்லக் கூடிய "சயிப்செலுறஸ்" என்னும் மீனையும் மற்றும் பல மீன்களையும் பற்றிய பல சுவையான தகவல்களை அந்த அமெரிக்க ஆராய்ச்சியாளர் ஆராய்ந்து வெளியிட்டிருக்கிருர்.

பறந்து செல்லும் மீன் ஓர் ஆகாயவிமானம் போலத் தோற்றமளிக்கிறது. நீலமும், வெள்ளியும் கலந்த பளபளப்பான வர்ணத்தோடு கூடிய இந்த மீன் பார்ப்போர் மனதைக் கவருகின்றது. இதன் குஞ்சுகள் வண்ணுத்திப் பூச்சியைப் போன்ற அழகிய தோற்றத்தோடு கூடியன. நீரில் மிக வேகமாக நீந்த முடிவதோடு நீர் மட்டத்தின் மேல் எழுந்து பறக்கவும் முடிவதால் இந்த மீன் இலகுவில் விரோதிகளிடமிருந்து தப்பித்துக்கொள்கிறது.

வண்ணுத்திப் பூச்சியைப் போன்ற தோற்ற முடைய [illegible] இருக்கின்றன. இந்தக் கண்களின் உதவியால் அது விரோதிகளை ஏமாற்றித் தப்பித்துக் கொள்கிறது. எப்படியெனில், அதன் விரோதிகள் வாலிலுள்ள கண்களைக் கண்டு வாலைத்தலையென எண்ணி விடுகின்றன. அப்பொழுது, இந்த மீன் சுலபமாக விரோதிகளுக்கு 'டிமிக்கி' கொடுத்துத் தப்பிக்கொள்கிறது. இதன் தலையில் கோடுகள் போன்ற வடிவில் அமைந்துள்ள இரு கண்கள் பார்ப்பதற்குப் பயன் படுகின்றன. இந்தக் கண்கள் வெளிக்குப் புலப்படாதவாறு தலையில் மறைத்து வைக்கப்பட்டுள்ளன.

(அடுத்த இதழில் முடியும்)

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து 'வளர்மதி" C/o சுதந்திரன். தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி

### சுதந்திரன் மாணவர் மன்றம்

### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 3.

பெயர் ..........

பாடசாலை ..........

விலாசம் ..........

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம் .......... கையொப்பம் ..........

# அம்மா! விம்மாதே வேண்டாம்!

—சுபத்திரா, நல்லூர்.—

"அம்மா தமிழ்த் தாயே
ஆறுமற்ற அனுதை போல்
விம்மாதே வேண்டாம்!
விழி சிவந்தேன் உயிர் தருவேன்.

* * *

சும்மா இருந் திங்கே
சோறு தின்ன நினைப்பவரை
அம்மா அழிப்பேன் நான்
ஆணையிது சொல்லி விட்டேன்.

* * *

கட்டி உனை வைத்துக்
காரி உமிழ் பவரை
எட்டி உதைப் பேன் நான்
ஏங்காதே வந்து விட்டேன்.

* * *

விந்தியம் குமரி யிடை
வீற்றிருந்தாய் உன்னைப் போய்ச்
சந்தியிலே வைத்தாரா?
வீழ்த்திடுவேன் இதாணையடி!

## வளர்மதி புதிய மருமக்கள்

3372 ரி. எல். எம். ரஸீத் வாழைச்சேனை.
3373 வெ. வள்ளியம்மை, அக்கரைப்பற்று.
3374 யோ. அருளப்பு, வலையன்மடம்.
3375 எஸ். எம். ஏ; செயினுலாப்தீன், கல்முனை.
3376 வ. விமலாதேவி, வவுனியா.
3377 பெருமாள் பாரதி, அண்ணமலைநகர்.
3378 சித்திராணி சபாபதி, திருக்கோணமலை.
3379 த. பகீரதன், இரத்தினபுரி.
3380 இ. பாலசுப்பிரமணியம், செம்பியன்பற்று.
3381 வே. கிருபாகரன், காரைநகர்.
3382 சு. சிவ அமராவதி, உந்துகொட.
3383 சோ. யோகேஸ்வரி, உரும்பராய்.
3384 ம. கோமளவல்லி, காத்தான்குடி.
3385 மு. பிரகாசவல்லி, காத்தான்குடி.
3386 மு. நிர்மலராச முதலி, காத்தான்குடி.
3387 நா. தேவிகாமலர், இளவாலை.
3388 மு. தசாவதாரன், சுண்ணுகம்.
3389 இ. முருகதாசன், காரைநகர்,
3390 க. சொக்கலிங்கம், சுண்ணுகம்.
3391 க. சங்கரப்பிள்ளை, செம்பியன்பற்று,
3392 சி. நடேசன், எழுவதீவு.
3393 செ. பிரேமாவதி, எழுவதீவு.

## அறிஞர் தரும் அறிவுரை

அவதூறு பேசாதே, அதற்குச் செவி கொடாதே, அதைப்பற்றி மனதில் சிந்திக்காதே—
சிங் சௌ.

முட்டாளின் இதயம் அவனுடைய வாயில் இருக்கிறது. அறிஞனின் வாய் அவனுடைய இதயத்தில் இருக்கிறது—
டீன் இஞ்ச்.

படிக்கத் தகுந்த புத்தகங்களைவிடப் படிக்கத் தகாத நூல்களே உலகத்தில் ஏராளம்— தாகூர்.

உண்மையைப் போன்ற தர்மம் வேறில்லை. உண்மையைவிட உயர்ந்தது ஒன்றுமில்லை. இந்த உலகில் பொய்யைவிடக் கசப்பானது எதுவுமில்லை—
மகாபாரதம்.

சிலர் எதையோ பேசி எதையோ செய்கிருர்கள். இன்னும் சிலர் எதையோ செய்து எதையோ பேசுகிருர்கள். ஆனல் சொன்னதைச் செயலில் தொடர்ச்சியாகக் காட்டுபவர்கள் மிகவும் குறைவு—
ஜவஹர்லால் நேரு.

## எங்கள் கிராமம்

(அ. கணபதிப்பிள்ளை, மன்னம்பிட்டி)

எங்கள் கிராமத்தின் பெயர் மன்னம்பிட்டி. எங்கள் கிராமம் வடமத்திய மாகாணத்தில், பொலநறுவையில் இருந்து 8 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றது. எங்கள் கிராமத்தின் கிழக்கே(அலவாக்கொம்பற) வீதியும், மேற்கே மகாவலி கங்கையும், வடக்கே வயல் நிலங்களும் தெற்கே குளமும், இருக்கின்றன.

இங்கு சித்திரவேலாயுத சுவாமி கோயில், பிள்ளையார் கோயில், கண்ணகியம்மன் கோயில் ஆகிய ஆலயங்களும், மற்றும் பாடசாலை, வைத்தியசாலை, கிராமக் கோர்ட்டு, தபால் கந்தோர், புகையிரத ஸ்தானம் இவையும் இருக்கின்றன.

இங்கு வசிப்பவர்களில் அதிகமானேர் தமிழரே ஆவர். முஸ்லிம்களும், சிங்களவரும், வியாபாரத்தின் பொருட்டுக் குடியேறியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எளிமையும் இனிமையும் நிறைந்த நாட்டுப் பாடல்கள்

## கிராம மக்களின் உணர்ச்சி அமுதங்கள்

குமாரி என். சியாமளா, பி. ஏ., பி.டி., எம். லிட்

நாட்டுப் பாடல்கள் எளியவை; இனிமையானவை; கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளங்களிலிருந்து இயற்கையாகப் பிறக்கும் உணர்ச்சி அமுதங்கள். கிராமங்களில் வாழும் சாதாரண மக்கள் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உள்ளத்தை ஊஞ்சலாட விடுவார்கள். துன்பமாக இருந்தால் அவர்கள் மனம் துடிதுடிக்கும்; துயருறும்; கண்ணீர் சிந்தும். இன்பமாக இருந்தால் அவர்கள் இதயம் துள்ளிக் குதிக்கும்; களிப்புறும்; 'கலகல'வெனச் சிரிக்கும். இந்த உணர்ச்சிகள் எல்லாம் ஊமை நாடகங்களாக முடிந்துவிடுவதில்லை; பாட்டுருவில் வெளியில் பறந்துவிடும்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் வழிவழி வரும் நாட்டுப் பாடல்கள் வாயளவில் வழங்கி வருகின்றன. நாட்டு மக்களின் பழக்க வழக்கங்களையும் பண்பாட்டுச சிறப்புக்களையும் அப்பாடல்கள் பறைசாற்றுகின்றன. நாட்டுப் பாடல்களைத் திரட்டுவது ஒரு நல்ல தொண்டு; அவற்றை ஆராய்வது மனதுக்கு மகிழ்ச்சி; அதனால் ஏற்படுகின்ற அனுபவத்தை வெளியில் சொல்வது ஓர் ஆறுதல்.

### மறுமலர்ச்சிக் காலம்

நாட்டுப் பாடல்களுக்கு நல்ல யோகம் அடித்திருக்கிறது. இருபதாம் நூற்றுண்டை நாட்டுப் பாடலின் மறுமலர்ச்சிக்காலம் என்றே சொல்லிவிடலாம். நாட்டுப் பாடலுக்கும் சாத்திரீய இசைக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. இப்பொழுது தமிழகத்திரைப் படங்களில் சில பல பாடல்கள் நாட்டுப் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு இசையும் சாகித்தியமும் அமைத்துப் பாடப்பெறுவதே அதன் புகழுக்கு ஒரு காரணம்.

1958-ம் ஆண்டு இராசா அண்ணாமலை மன்றத்தில் முக்கிய நிகழ்ச்சியொன்று நடந்தது. அது 'விராலிமலைக் குறவஞ்சி' என்னும் நாட்டிய நாடக அரங்கேற்ற விழாதான். விராலிமலை என்னும் இடம் திருச்சியில் இருந்து 18 மைல் தொலைவில் இருக்கிறது. அங்கு நெடு நாட்களாகப் பழக்கத்தில் இருந்து மறைந்துகொண்டிருந்த குறவஞ்சி என்னும் நாடகம் அது. அற்ப ஆயுளுடன் ஊசலாடிக் கொண்டிருந்தது அந்த அருமையான நாடகம். அந் நாடகத்தை மூலப் பாடல் கருவுடனும் ஆடல்களுடனும் இராசா அண்ணாமலை மன்றத்தில் நிறைவேற்றினேன். அது ஓர் இனிய அனுபவமே!

### பாடல்கள் சேகரிப்பு

நாட்டுப் பாடல்களில் எனக்குப் பேரார்வம் பிறந்தது. ஏனென்றால் அவற்றைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தேன். நாட்டுப் பாடல்களின் இசைகளைச் சேகரிப்பதற்காக நான் திருத்தணி முதல் குமரி வரை சுற்றுப் பயணம் செய்தேன். பல இன்னல்களுக்கிடையில் நூற்றுக்கணக்கில் நாட்டுப் பாடல்களின் இசைகளைத் திரட்டினேன். எழுதாக் கிளவியாகக் கிராமங்களில் வழங்கி வரும் தெய்வ வழிபாட்டுப் பாடல்கள் என்ன; அலுப்புத் தீர வேலை செய்வதற்காகப் பாடப்படும் பாடல்கள் என்ன; திருமணம், சடங்கு தெருவணிகர் பாடல்கள் என்ன; தாலாட்டு, ஒப்பாரி, கும்மி, கோலாட்டப் பாடல்கள் என்ன; ஆம், அவை பல வகை; பலசுவை.

நாட்டுப் பாடல்களின் பண்களைத் திரட்டுவது சாதாரணமான காரியமன்று. கிராம மக்களைக் கண்டு பேசவேண்டுமானால் பகலில் அவர்கள் வேலை செய்யும் இடங்களிலோ அல்லது இரவு 7 மணிக்கு மேல் அவர்கள் வீட்டிலே தான் சந்திக்க முடியும். அந்த வேளையில் போனாலும் முன் பின் அறியாத 'புது ஆள்' என்று அச்சத்தால் விரட்டுபவர்களும் உண்டு; இன்முகத்துடன் வரவேற்று உபசரிப்பவர்களும் உண்டு. வசைமாரி பொழிந்து அனுப்புகிறவர்களும் உண்டு. சமயோசிதம் போல் எந்தச் சந்தர்ப்பத்தையும் சமாளிக்க வேண்டும். இதில் நான் அடைந்த அனுபவங்கள் பல. அவற்றில் சில வற்றை இங்கே தருவதால் உண்மை நிலையைத் தெளிவாக்க முடியுமென நம்புறேன்.

அப்பொழுது மணி 7 இருக்கும். வேலை செய்த அலுப்புத் தீர வீடுகளில் பாட்டாளிகள் உட்கார்ந்து கொண்டிருக்கும் வேளை. பெரியகுளம் சேரி (மதுரை மாவட்டம்)க்குப் போயிருந்தேன். ஒரு வீட்டில் ஒப்பாரிக் குரல் கேட்டது. ஒப்பாரிப் பாடல்களின் இசைகளைக் கேட்கவேண்டுமானால் இழவு வீட்டுக்குள் போய்த்தான் ஆகவேண்டும். காகிதம் பேனு எடுத்துக்கொண்டு எழுதவோ இசையை ரசித்துக் கொண்டு நிற்கவோ முடியாது. தர்மசங்கடமான சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது; இழவு வீட்டுக்குள் நுழைந்த நான் தயங்காமல் சட்டென்று பத்தோடு பதினென்ருகச் சேர்த்துகொண்டு கட்டியழத் தொடங்கினேன்.

"கல்லோடை நெல்லரிசி
கலக்கலாம் என்றிருந்தேன்
கல்லை ஒதுக்கிவச்சே—நான்
கன்னிகையாள் குண்டு
பட்டேன்'

என்று ஒரு பெண் உள்ளம் நைந்து பாடி அழுத பாடல் என் உள்ளத்திலே ஒப்பாரியை வைத்துக்கொண்டிருக்கிறது.

மதுரை மாவட்டம் தாண்டிக் குடியில் ஒரு சுவையான நிகழ்ச்சி நடந்தது. புலையர் வசிக்கும் இடத்துக்குப் போயிருந்தேன். பாட்டுப் பாடும்படி கேட்டதற்கு அனைவரும் முடியாது என்று தலையசைத்துவிட்டார்கள். சுற்று முற்றும் பார்த்தேன். தொண்டையைக் கனைத்துக் கொண்டேன். அடுத்தகணம் ஒரு நாட்டுப் பாடல் பாடத் தொடங்கினேன். என்னைச் சுற்றிக்கொண்டு கூடியிருந்த புலைச்சாதிப் பெண்கள் மூக்கின்மேல் விரல் வைத்து வியப்படைந்தார்கள். அப்புறம் கேட்க வேண்டுமா? பெண்களிடையே போட்டி ஏற்பட்டுவிட்டால் சொல்லவா வேண்டும். 'நான், நீ'

**கிராமிய இலக்கியம்**

என்று அவர்கள் பாடத் தொடங்கினுர்கள்.

ஒரு புலைச்சி அவர்களுடைய குலதெய்வமான கரகநாச்சிப் பாடலைப் பாடினுள். அப்போது ஒரு புலைச்சாதிப்பெண்தானே ஆடத் தொடங்கிவிட்டாள். கூடியிருந்தவர்கள் அனைவரும் விலகி நின்று ஆடினவளைப் பார்த்துக் கும்பிட்டவாறு பயபக்தியோடு காட்சியளித்தார்கள். அப்போது பாட்டொலியைத் தவிர வேறு ஒலியே எழவில்லை. ஆடிக் கொண்டிருந்த பெண் என் பக்கம் திரும்பி 'என் மக்கள் கொண்டு செலுத்துவது போல் உன்னால் கொண்டு செலுத்த முடியாது. அதனாலே நீ என் பாட்டைத் தவிர என் மக்களுடைய பாடல்களை எழுதிக்கொள்' என்று ஆணையிட்டாள். நானும் அந்தப் பாடலை எழுதாமலேயேவிட்டுவிட்டேன். கரகநாச்சிசாமி வந்து அந்தப் பெண் ஆடியதாக மற்றவர்கள் கொன்னுர்கள். இப்படிப்பட்ட பல இடங்களில் சுவையானதும் இக்கட்டானதும் தர்மசங்கடமானதுமான பல எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன.

பாட்டும் இசையும் சேகரிக்க வேண்டுமானல் சேகரிப்பாளருக்குப் பாடத் தெரிந்திருக்க வேண்டும். கும்மி, கோலாட்டம், ஏன் நாட்டியமும் கூட ஆடத் தெரிந்திருக்க வேண்டும். அந்த ஊரில் அப்படிப் பாடினுர்கள், இந்த ஊரில் இப்படி ஆடினுர்கள் என்று சொல்லி பாடியும் ஆடியும் காட்டினல்தான் கிராமத்துப் பெண்கள் மனம்விட்டுப் பாடுகிறுர்கள்; ஆடுகிறுர்கள்.

---

### ஏழைக்கு ஏது...

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

நெஞ்சு அவரைப் பார்த்துக் கத்தியது.

"இந்தா பார் அப்பா! ஆர் சொன்னது அவள் உயிரோடை இருக்கிறுளெண்டு? அவள் அப்போதே செத்துப் போனுள்..."

'இப்பொழுது பேசினது ஆர் டார்க்குத்தர்" நான் பாத்தன். நான் பேசினன் அவளோடை! ஏழையென்டால் அவர்கள் கண்டதும் கேட்டதும் பொய்யா? அவர்கள் வாழக் கூடாதா டாக்குத்தர் ஐயா? இதுதருமாசுப் பத்திரியல்ல. கருமாசுப்பத்திரி...நீங்கள் எல்லாம் மனிசரல்ல, பிசாசுகள்..." ஆவேசத்தில் பேசிக்கொண்டே என்னைப் பார்த்தார்.

' இப்பொழுது " கொண்டு போட்டியள். என்ரை பெண்டாட்டியைச் சாக் கொல்லிப் போட்டியள்... அவள் சொன்னது சரியாய்ப் போச்சு..." என் நெஞ்சிலே விழுந்து அழுதார்... அதிச்சியில் அவர் உயிரும் என்னேடு வந்துவிட்டுது...

ஏழைக்கு ஏது வர்ழ்வு?

---

### கடந்த ஐந்து...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ழர் அதிகமாக வசிக்கும் இடங்களில் தமிழ் மொழி நீதிமன்ற மொழியாக இருக்கும் என்று உறுதி கூறினர். கடந்த ஐந்து வருஷங்களாக ஏற்பட்ட தீவிர சம்பவங்களையும், இப்பொழுது எங்கும் நிலவியுள்ள உணர்ச்சித் துடிப்பையும், இனி ஏற்படக் கூடிய பயங்கர சம்பவங்களையும் நோக்கும் போது, தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியதின் அவசியத்தை அரசாங்கம் உணரும் என்று நம்ப இடமுண்டு. கனடாவில் இரண்டு மொழிகளும் சுவிட்சர்லாந்தில் மூன்று மொழிகளும் அரசகரும மொழிகளாக அமைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

சாதி, சமயம் மொழி என்ற பாகுபாடின்றி எல்லாருக்கும் அடிப்படைச் சுதந்திரமும் மனித உரிமைகளும் கொடுக்க வேண்டும் என்று கோருகின்ற ஐக்கிய நாட்டுச் சாஸனத்திற்கு (Charter of U. N.) அமைய, இலங்கையில் உள்ள எல்லா மொழியினரும், மதத்தவரும், இனத்தவரும் அன்னியோன்னியமாக ஒத்து வாழக் கூடிய சூழ் நிலையை உருவாக்கினல் அன்றி இப் பிரச்சினையைத் தீர்த்து வைக்க அரசாங்கம் எடுக்கின்ற எந்த முயற்சியும் வெற்றியடையாது.

---

# கழகச் செய்திகள்

### வளரும் எழுத்தாளர் சங்கம்

வளரும் எழுத்தாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் சங்கத் தலைவர் திரு, வில்லவன் தலைமையில் விவேகானந்த சபை மண்டபத்தில் எதிர்வரும் 27-5-61 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது. அங்கத்தவர்களுக்காகக் கூட்டபடவிருக்கும் இக்கூட்டத்தில், நடப்பு வருடத்துக்கான உத்தியோகத் தேர்வு முக்கிய நிகழ்ச்சியாகும். அத்துடன் சங்க அங்கத்தவர், க. நவசோதி அவர்களால் வெளியிடப்பட்ட "கதைப் பூங்கா" என்ற பல்கலைக்கழக மாணவர்களின் கதைத் தொகுதிக்கு சங்க அங்கத்தவர்களுரைகளும் பாராட்டுகளும் பரிமாறப்படும்.

---

### அகில இலங்கை அருந்ததியர் (அரிசன) சங்கம்

மேற்காணும் சங்க செயற் குழுக் கூட்டம் உபதலைவர் திரு. அ. பி. சுந்தரராஜ் அவர்கள் தலைமையில் சமீபத்தில் யுணிபனையில் கூடி, தலைவர் திரு. மூ. வேலாயுதம், உபசெயலாளர் திரு. மா. சே. அருள் ஆகியோர்களின் விலகல் கடிதங்களைப் பரிசிலனைக்கு எடுத்துக் கொண்டது. சங்க சார்பாகப் பத்திரிகையொன்று நடாத்துவது எனவும் தீர்மானித்தது.

இவ்விரண்டு முடிவுகளையும் எதிர்வரும் 2-6-62ம் திகதி நடைபெறவிருக்கும் மத்திய பொதுக் குழுவுக்கு சமர்ப்பிப்பதெனவும் முடிவாக்கப்பட்டது. சங்கத்தின் 30வது ஆண்டு விழா [illegible] யில் பின்வரும் குழுக்களைச் சங்கம் நியமித்தது.

(அ) பொருளாதாரக் குழு: க. பி. பூபாலர், எம். பி. இராமையா, செ. மா. கருப்பையா.

(ஆ) கல்விக் குழு: எம். எஸ். கரிகாலன், மே. ச.முத்தையா, எம். பலவாசம்.

(இ) கலைக்குழு சே. மா. மகாதேவன், பெ. சி. சண்முகம். எம். இராமையா.

(ஈ) தொழிற் குழு: இராசு சண்முகம், சோ. சித்திரன், ஆர். சப்பாணி.

(உ) விளையாட்டுக் குழு வெ. ச. பெருமாள், க. சு. மணிராகவன், மே. ச. ஆறுமுகம்.

இச் சங்கம் திரு. கே. ஜி. எஸ். நாயர் மறைவிற்குப் பின்வருமாறு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டது:

இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் அடுக்கடுக்கான சோதனைகளால் அல்லல் படும் இவ்வேளை குறிப்பாக மலைநாட்டுத் தமிழ் மக்களின் சகல உரிமைகளையும் பாதுகாப்பதற்காக அல்லும் பகலும் அரும் தொண்டாற்றிய தலைவர் திரு. கே, ஜி. எஸ். நாயர், அவர்களின் அகால மரணம் தோட்டத் தொழிலாளருக்கும் அருந்ததியர் (தமிழ்) சமூக மக்கட்கும் ஈடு செய்ய முடியாத மாபெரும் நஷ்டமாகும்.

எவரின் யோசனையும் வழி காட்டுதலும் உயிரோட்டம் போன்று தேவையோ, அவரையே காலன் திடீரெனப் பறித்தது இயற்கையே. தமிழ் சமுதாயத்தை சோதிக்கிறதென அருந்ததியர் சங்கம் கருதுவதோடு அரும்பெரும் தலைவரின் பிரிவால் ஆற்ருெணு துயரத்துக்குள்ளாகி இருக்கும் அவர்தம் அருமைக்குடும்பத்தார்க்கும் ஒப்புயர் மிக்க தனது உழைப்பாளர் ஒருவரை இழந்து கவலையில் மூழ்கி இருக்கும் ஜனநாயக தொழிலாளர் காங்கிரசுக்கும் தனது அனுதாப செய்தியை தெரிவிப்பதோடு மறைந்த தலைவரின் ஆத்ம சாந்திக்கு அருந்ததியர் தமிழ் மக்களின் சார்பாக அகில இலங்கை அருந்ததியர் சங்கம் பிரார்த்திக்கின்றது.

---

### "இ. தி. மு. க. ஹட்டன் மாவட்டக் குழு"

இ. தி. மு. க. ஹட்டன் மாவட்டக் குழுத் தேர்வு இ. தி. மு. க. பொதுச் செயலாளர் தோழர். ஏ. இளஞ்செழியன் முன்னிலையில் தோழர் இரா. பொன்னையா அவர்கள் தலைமையில் நடாத்தப்பட்டது.

கூட்டத்தில் அறுபத்திரண்டு கிளைப் பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள்.

முதன் முதலாக, மாவட்டக் குழு நிர்வாகிகள் தேர்வு நடாத்தப்பட்டது.

தோழர்கள் து. வெங்கடாசலம் செயலாளராகவும், இரா. ரெங்கையா துணைச் செயலாளராகவும், ப. சதாசிவம் பொருளாளராகவும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்கள்.

தோழர் ஏ. இளஞ்செழியன், தி. மு. க. வின் வளர்ச்சியைப் பற்றி நீண்டதோர் உரை நிகழ்த்தியபின், தோழர்கள், இரா ரெங்கையா, து. வெங்கடாசலம், கந்தையா, குருஷ், ஆறுமுகம், செங்கமலை, கிருட்டிணசாமி ஆகியோர்கள் பேசியபின், அவைத் தலைவர் தோழர் இரா. பொன்னையா அவர்கள் நன்றி நவிலலுடன், கூட்டம் முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# 7வது வெற்றி வாரம்!

## சென்ட்ரல்
(மருதானை)

தினசரி 2, 6, 9-30க்கு
ஞாயிறு காலை 10 மணிக்கும்

மற்றும்
8 திரைகளில்!

★ காதல் மன்னன்
ஜெமினி கணேஷ்

★ ஆடலழகி
வைஜயந்திமாலா

★ வில்லாதி வில்லன்
நம்பியார்

★ ஹாஸ்ய மன்னன்
தங்கவேலு

★ நகைச்சுவை அரசி
எம். சரோஜா

★ புதுமுகம்
வசந்தி

திறம்பட நடித்த படம்

# தேன் நிலவு




- காஷ்மீரத்தின் குளுமையான காட்சிகள்!
- அதிசய படகு வீடுகள், பனி மலைகள், அழகான ஏரிகள்!
- தண்ணீரில் விளையாடும் "அலை சவாரி"!

பார்த்துவிட்டீர்களா?




# எதிர்பாருங்கள்!

எமது அடுத்த திரை ஓவியம்

## எல்பின்ஸ்டன்
(மருதானை)

## றெக்ஸி
(வெள்ளவத்தை)

மற்றும் 8 திரைகளில்

எம் ஜி ராமச்சந்திரன்,
ராஜசுலோசனா, நம்பியார்
மற்றும் பலர் திறம்பட
நடித்த

# நல்லவன் வாழ்வான்

# 3வது வெற்றி வாரம்

## மஜெஸ்டிக் (பம்பலப்பிட்டி)
கிழமை நாட்களில் மட்டும்
காலை 10 மணிக்கு.

செல்லமஹால் (கொட்டாஞ்சேனை) — சபையர் (வெள்ளவத்தை)

## மற்றும் 6 திரைகளில்

அன்னையின் ஆணை—விடிவெள்ளி
முதலிய படங்களிலும் பார்க்க
சிறந்த ஓவியம்!
எப்பொழுதும் உங்கள் மனதைக்
கவரக் கூடியது.

சிவாஜி கணேசன்—சாவித்திரி
டி. எஸ். பாலையா—சுந்தரிபாய்
எஸ். வி. ரங்கராவ் வி. நாகையா
டி. ஆர். ராமச்சந்திரன்
வி. எஸ். சரஸ்வதி
ஆகியோர் திறம்பட நடித்த

# எல்லாம் உனக்காக

பின்னணிச் சங்கீதம்: டி. எம். சௌந்தரராஜன் — ஏ. எல். ராகவன்—பி. சுசீலா
எம். எஸ். ராஜேஸ்வரி




# 7-வது வெற்றி வாரம்!

## கிங்ஸ்லி
(கொழும்பு)

## வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)

மற்றும் 11 திரைகளில்

பார்த்தோர் பரவசப்
படுகிறார்கள்
பார்க்காதவர்கள் இன்றே
பார்த்து மகிழுங்கள்.

பி. சரோஜா தேவி
சிவாஜி கணேசன்
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடித்த

# பாலும் பழமும்

டைரக்ஷன்:
[illegible]

# வெகு விரைவில் எதிர்பாருங்கள்!

காலத்திற்கேற்ற
கருத்தோவியங்களை
அடுத்தடுத்து காண்பிக்கும்
சினிமாஸ் திரைகளில்

இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன்
இலட்சிய நடிகை
விஜயகுமாரி
நடிகவேள்
எம் ஆர். ராதா
சௌகார் ஜானகி, எஸ். வி. ரங்கராவ்
பி. எஸ். சரோஜா, எஸ். ராமராவ்
நடித்த

## மாடர்ன் தியேட்டர்ஸ்

# குமுதம்

இசை:
கே. வி. மகாதேவன்

டைரக்ஷன்:
ஏ. சுப்புராவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, இலக்கத்தில் 1962-ம் வருடம் மே மாதம் 27-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.